
www.padippakam.com

# அந்த ஒரு உயிர் தானா உயிர்?

## எஸ்.எம்.ஜி இன்

## ஆசிரிய தலையங்கங்கள் சில



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# அந்த ஒரு உயிர் தானா உயிர்?

எஸ்.எம்.கோபாலரத்தினம்

வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com

அந்த ஒரு உயிர் தானா உயிர்? (ஆசிரிய தலையங்கங்களின் தொகுப்பு) எஸ்.எம்.கோபாலரத்தினம் (கோபு). பதிப்புரிமை: ஆசிரியருக்கே. முதல்பதிப்பு: மே.10.2003. கணிப்பொறி வடிவமைப்பு: சி.பௌஸியா. சி.தனேந்திரன். அட்டை வடிவமைப்பு: சுதத். பக்கங்கள்:152+XIV, அச்சாக்கம்: ஈ-குவாலிற்றி கிராபிக்ஸ், 315 ஜம்பெற்றா வீதி, கொழும்பு-13. வெளியீடு: நிகரி வெளியீட்டாளர், 24, 6/9, இனிசியம் றோட், தெஹிவளை. விலை: ரூபா 150.00

Antha oru uyir thana uyir? (Collection of editorials) S.M.Gopalaratnam (Gopu)©, First Edition: May 10th, 2003, Pages: 152+XIII, Type setting: S.Fowziya, S.Thanendran, Cover design: Suthath, Printing: E-Kwality Graphics, 315, Jampettah Street, Colombo-13. Publishers: Nihari Publishers, 24, 6/9, Initium Road, Dehiwela. Price:Rs.150.00

படிப்பகம்

www.padippakam.com

# சமர்ப்பணம்

என் குருநாதர்

து. சீனிவாசகம் மாஸ்ரர்

திருமதி தையல்முத்தம்மாள் சீனிவாசகம்

நண்பர் காமினி நவரத்தினா

நண்பர் குகமூர்த்தி

எனது மனைவி ஆகியோருக்கு

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# அணிந்துரை

ஊடகத்துறையின் வளர்ச்சி, எல்லைகள் அனைத்தையும் கடந்து இன்று உலகளாவிய செல்வாக்குப் பெற்ற சாதனமாக விளங்குகின்றது. இதன் பயனாக இத்துறையுடன் ஈடுபட்டுழைக்கும் ஊடகவியலாளர்களும் பன்மடங்காக அதிகரித்து விட்டனர்.

ஊடகத்துறையின் வளர்ச்சியை உற்று நோக்கும் பலர் இதன் பரிமாணத்தைப் பார்த்து வியப்புறும் போதிலும் வேறு பலர் இதனை ஒரு மிகச் சாதாரண சாதனமென்றே கருதுகின்றனர்.

ஊடகத்துறை இன்று உலகினை ஆக்கவும் வல்லது - அழிக்கவும் வல்லது என்ற உண்மை வெகு சிலருக்கே புரிந்துள்ளது. ஒரு நாட்டின் ஆட்சி பீடத்தை அமைக்கவும் அந்நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கவும் வல்லமை பொருந்திய ஒரு சாதனம் ஊடகத்துறை என்றே கொள்ளலாம்.

இன்று இலத்திரனியல் சாதனங்கள் ஊடகத்துறையின் பரிணாமத்தை விஸ்தரித்துள்ள போதிலும் நாளேடுகளும் பருவ கால ஏடுகளும் தான் அதிக வல்லமை பொருந்தியனவாக உள்ளன என்பதை மறுக்க முடியாது. ஏடுகளின் செல்வாக்கு என்றும் நிலைத்திருக்கக்கூடியது. வானொலியில் காதுகொடுத்துக் கேட்கும் போது தான் அதனுடைய தன்மை புலப்படும். இதே போன்று தொலைக்காட்சிகளும் கண்ணால் பார்க்கும் போது மட்டுமே அதனுடைய தன்மையை வெளிக்காட்டிவிட்டு மனத்திரையை விட்டு மறைந்து விடுகிறது.

சாதாரண தாள்களில் அச்சு வாகனம் ஏற்றப்படும் கருத்துக்களோ பலகாலம் நீடித்து நிற்கக் கூடியவை. ஏடுகளில் எடுத்தாளப்பட்டுள்ள கருத்துக்கள் அடிக்கடி புரட்டிப் பார்த்துப் படித்து அறிந்து கொள்ளக் கூடியவை. எனவே ஊடகத்துறையின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் இன்று மட்டுமல்ல இனிவரும் காலங்களிலும் நிலைத்து நிற்கக் கூடியவை.



படிப்பகம்

www.padippakam.com



தடியெடுத்தவன் எல்லாம் அசகாய சூரன் என்று கருதிவிட முடியாது. அத்தடியை தக்கபடி பயன்படுத்தும் ஆற்றல் பெற்றவனே அந்தத் துறையில் தலைசிறந்து விளங்க முடியும். இன்று நாளேடுகளும் பருவகால ஏடுகளும் மலிந்துவிட்ட நிலையில் அவற்றின் மூலம் தங்கள் கருத்துக்களைக் கூறும் சந்தர்ப்பம் பெற்றவர்கள் எல்லோருமே எழுத்தாளர்களாகிவிட முடியாது. நாளேடுகளைப் பொறுத்தவரையில் அத்துறையில் உள்ள நெழிவு சுழிவுகளை நன்குணந்தவர்களே சிறப்புப் பெற்றவர்களாக முடியும்.

வீரகேசரி நாளிதழில் தனது முதல் பிரவேசத்தை ஏற்படுத்திக் கொண்ட திரு. எஸ்.எம். கோபாலரத்தினம் அவர்கள் படிப்படியாக எழுத்துத் துறையில் பல கட்டங்களையும் தாண்டி இன்று இந்நாடு போற்றும் ஓர் ஒப்பற்ற எழுத்தாளனாக விளங்குகிறார். இப்பத்திரிகை மூலம் அவர் பெற்ற அனுபவம் அவரை யாழ் நகரில் இருந்து வெளியாகிய 'ஈழநாடு' நாளேட்டின் தலைமை ஆசிரியராக பல ஆண்டுகள் பணிபுரிய வைத்தது. இதைத் தொடர்நது யாழ்நகரில் இருந்து வெளியான 'ஈழமுரசு' ஏட்டின் பிரதம ஆசிரியராகவும் அவர் பணியாற்ற வழிவகுத்தது. பின்னர் சில காலம் மட்டக்களப்பில் இருந்து பிரசுரமான 'தினக்கதிர்' என்ற ஏட்டின் பிரதம ஆசிரியராகவும் அவர் பணிபுரிந்தார்.

ஒரு நாளேட்டின் பிரதம ஆசிரியராகப் பணிபுரிபவர் முக்காலமும் உணர்ந்த ஒரு ஞானிக்குச் சமமானவர். கடந்த காலத்தைப் பற்றி அவர் அறிந்திருக்க வேண்டும். வருங்காலத்தைப் பற்றிய தீர்க்கதரிசனம் அவருக்கு இருக்க வேண்டும். அப்போது தான் அவர் நிகழ்காலத்தைப் பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்த முடியும். ஒவ்வொரு துறையிலும் ஆழ்ந்த அறிவு அவருக்கு இருக்க வேண்டும் அப்போது தான் அவர் கூறும் கருத்துக்கள் மக்கள் மனதில் தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

ஒரு நாளேட்டில் பிரசுரமாகி வரும் அத்தனை அம்சங்களுக்கும் அப்பத்திரிகையின் பிரதம ஆசிரியரே பொறுப்புடையவராவர். அரசியல், அன்றாடச் செய்திகள், நாட்டு நடப்புக்கள், கலை கலாசார விழுமியங்களை அவர் தெரிந்து வைத்திருக்க வேண்டும். இத்தகைய சகல வல்லமைகளும் பொருந்தியவராக திரு கோபாலரத்தினம் அவர்கள் இருந்தும் வருகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

நாளிதழ்களில் அவர் தீட்டிய ஆசிரிய தலையங்கங்கள் ஆணித்தர-மானவை. எவருக்கும் அஞ்சாமல் விட்டுக் கொடுக்காமல் தனக்குச் சரியெனப் பட்டதைத் துணிந்து கூறியமையினால் திரு கோபாலரத்தினம் அவர்கள் பலருடைய வெறுப்புக்களையும் சம்பாதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்திய அமைதிப்படை தனது ஆதிக்கத்தை ஈழ மக்கள் மீது செலுத்திய போது அதனால் ஏற்பட்ட அக்கிரமங்களை சற்றும் தயங்காது தமது எழுத்துக்களில் எடுத்துக் கூறினார். இதற்காக அதே அமைதிப்படையின் சிறையிலும் சில காலம் அடைக்கப்பட்டிருந்தார். தனது சிறை அனுபவங்களை 'ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை' என்ற நூலில் எடுத்துக் கூறியிருக்கிறார். இக்கட்டுரை சென்னை நகரில் இருந்து வெளியாகும் 'ஜூனியர் விகடன்' பத்திரிகையில் தொடராக வெளியிடப்பட்டது. இந்நூல் இப்பொழுது இரண்டாவது பதிப்பாக வெளியாகியிருப்பது அவருடைய எழுத்தாற்றலுக்கு மகுடம் சூட்டுவதாக அமைந்துள்ளது.

திரு. கோபாலரத்தினம் அவர்கள் நாளேடுகளில் தீட்டிய பல தலையங்கங்களில் 'தினக்கதிர்' நாளேட்டில் வெளிவந்த சிலவற்றைத் தொகுத்து நூல் வடிவில் கொண்டு வந்துள்ளார். இந்நூல் தமிழ் பேசும் நல்லுலகங்கெணும் நல்ல வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை. அவருடைய ஆக்கங்கள் பல மென்மேலும் பிரசுரமாகி தமிழ் பேசும் மக்களின் அறிவுத்தாகத்திற்கு ஆகாரமாக அமைய வேண்டுமென்று எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**இரா. பத்மநாதன்**
*மூத்த ஊடகவியலாளர்.*

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட மூத்த ஊடகவியலாளர் இரா பத்மநாதன் அவர்கள் இலங்கை வானொலியிலும் சென்னை வானொலியிலும் பணியாற்றியவர். வீரகேசரி அதிபர் பெ.பெரி. சுப்பிரமணியம் செட்டியாருடன் ஐம்பதுகளின் முற்பகுதியில் தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றுக்குச் சென்று வந்தவர். இலங்கையில் நாடகத்துறையிலும் திரைப்படத்துறையிலும் நடிப்பிலும் பங்களிப்புச் செய்தவர். சிறந்த எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளருமாவார். பகுத்தறிவுவாதியாக மட்டக்களப்பில் தாக்குதலுக்குள்ளானவர். பின்னர் ஆன்மீகக் கட்டுரைகள் எழுதிப் பெயர் பெற்றவர். கோதண்டம் ஏந்திய கோமகன் என்ற இவரது நூல் இந்து கலாசார அமைச்சினால் சில ஆண்டு-களுக்கு முன் வெளியிடப்பெற்றது.



படிப்பகம்

# என்னுரை

**வணக்கம்**

வீரகேசரி பத்திரிகையில் நான் ஐம்பதுகளில் படிதிருத்துனராகச் சேர்ந்த போது பிரதம ஆசிரியர் கே.பி. ஹரன் அவர்களே தினமும் பத்திரிகை ஆசிரியர் தலையங்கங்களை எழுதுவார். அவர் அலுவலகம் வராத போது செய்தி ஆசிரியர் கே.வி.எஸ். வாஸ் தலையங்கம் எழுதுவார். வாரப்பதிப்பு ஆசிரியராக இருந்த வி.லோகநாதன் தலையங்கம் எழுதும் வாய்ப்பைப் பெற்றதில்லை.

ஹரன் அவர்கள் வெளியேறிய பின் வாஸ் அவர்களே தினப்பதிப்பு, வாரப்பதிப்பு பத்திரிகைகளின் தலையங்கங்களைத் தொடர்ந்து எழுதி வந்தார்.

தொலைபேசிகளில் வரும் செய்திகளை முதலில் வாஸ் அவர்கள் கேட்டுத் தெரிந்தபின் பொதுவாக என்னையே அந்தச் செய்திகளைக் கேட்டு எழுதச் சொல்லுவார். அவரும் தொலைபேசியில் அதைக் கேட்டுக் கொண்டிருப்பார். அவருடைய வேகத்துக்கு ஈடாக நானும் செய்திகளை எடுத்து எழுதிக் கொடுப்பேன். நிருபர்கள் ஆங்கிலத்தில் எழுதிக் கொண்டு வரும் வழக்குச் செய்திகள் நாடாளுமன்றக் கூட்டச் செய்திகள் யாவற்றையும் மிகவேகமாக மொழிபெயர்த்து எழுதிக் கொடுப்பேன்.

வாஸ் அவர்களுக்கு எனது வேலைகளில் நம்பிக்கையும் திருப்தியும் ஏற்பட்டது. மேலும் மேலும் பல வேலைகளையும் என்னிடம் கொடுத்தார். நான் சளைக்காமல் செய்தேன்.

ஒரு வெள்ளிக்கிழமை நண்பகல் என்னைக் கூப்பிட்ட வாஸ் அவர்கள் "நீங்கள் வாரப் பத்திரிகைக்கு ஒரு தலையங்கம் எழுதுங்க" என்றார்.

“தலையங்கமா, நானா” என்று ஆச்சரியப்பட்ட என்னைப் பார்த்து “பயப்படாம எழுதுங்க, உங்களால் முடியாதது எதுவுமில்லை” என்று உற்சாகப்படுத்தினார்.

“எதை எழுதுவது? எப்படி எழுதுவது?” நான் தயங்கி, விழுங்கிக் கேட்கவும் ஒரு தலைப்பைச் சொல்லி, இதை வைத்து இப்படி எழுதுங்க என்று சில குறிப்புக்களையும் சொன்னார். (அவை இப்பொழுது நினைவில் இல்லை.)

நான் பின்னர் இதை வைத்து ஒரு தலையங்கம் எழுதிக் கொடுத்தேன். படித்துப் பார்த்தபின், "நல்லாயிருக்கு" என்று இரண்டொரு திருத்தங்கள் செய்த பின் அச்சகப் பகுதிக்கு அனுப்பினார்.

சில தினங்களின் பின் வியாழன் அல்லது வெள்ளியாக இருக்க வேண்டும். ஜிந்துப்பிட்டியில் ஒரு நண்பரைச் சந்தித்த பின் இரவு ஒன்பது மணியளவில் ஜம்பட்டா வீதியால் கொட்டாஞ்சேனையில் தங்குமிடத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். வாஸ் அவர்களுடைய வீட்டு வாசலை நான் கடந்து செல்லும் சமயம் பார்த்து திடீரென்று வெளியே வந்த அவர் “எங்கேயிருந்து வர்றீங்க?” "பரவாயில்லை நாளைக்கு என்ன தலையங்கம் எழுதப் போறீங்க?" என்று கேட்டார். "நண்பரைச் சந்தித்துவிட்டு வருகிறேன்" என்று நான் சொன்ன போது எனது வாயிலிருந்து அந்த வாடை நன்றாக வீசியிருக்க வேண்டும். கொக்ரெயில் பார்ட்டிகளில் இருவரும் பானம் அருந்திப் பழக்கமுண்டு, என்றாலும்...

“சர்ச்சிலின் மகள் சாரா சர்ச்சில் மதுபோதையில் கார் ஓட்டிச் சென்று பொலிஸில் அகப்பட்ட செய்தி வந்ததல்லவா” என்று வாஸ் அவர்கள் கேட்டார். “ஆமாம்” என்றேன் அதை வைத்து “குடியைக் கெடுக்கும் குடி அல்லது மதியைக் கெடுக்கும் மது” என்று ஒரு தலையங்கம் எழுதுங்க என்றார்.

“சார் அது, எனது செயலுக்கும் அதற்கும் பொருத்தமில்லையே” என்றேன். “போங்க, நாளைக்கு அதையே எழுதிக் கொடுங்க” என்று சொல்லி வீட்டுக்குள் போய் விட்டார்.

www.padippakam.com



மறுநாள் எழுதிக் கொடுத்தேன் அவர் சொன்ன இரண்டு தலையங்கங்களில் ஒன்றில் அது வெளிவந்தது. எதுவென்று இப்போது நினைவில்லை.

மறுவாரமும் வந்தது. வெள்ளி நண்பகல் என்னை அழைத்த வாஸ் அவர்கள், "இவ்வாரம் எதை எழுதப் போறீங்க?" என்று கேட்டபடியே "இசை அரசு எம்.எம். பாணி தேசிகர் வந்து இங்குள்ள கலைஞர்களுக்குச் சில யோசனைகள் சொல்லிப் போயிருக்கிறார் அல்லவா, அதை வைத்து இசை அரசுவின் யோசனைகள்" என்று எழுதுங்களேன் என்றார். குறிப்புகளையும் சொன்னார். பின்னர், "நான் அவசரமாக வெளியே போக வேண்டும், நீங்க எழுதி அதற்கப்புறம் நான் பார்த்து... நேரம் வராது நானே எழுதிக்கிறேன்" என்றார். நான் அவரது அறையிலிருந்து வெளியே வந்தேன். அவரது அறையில் முகப்பிலுள்ள ஆடும் கண்ணாடி அரைக்கதவின் ஓரத்திலுள்ள இடைவெளியால் அவரும் என்னை ஓரளவு பார்க்கலாம், நானும் அப்படி அவரைப் பார்க்கலாம்.

எனது ஆசனத்தில் நான் வந்து அமர்ந்தேன். அச்சமயம் அவருக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அவர் அதை எடுத்துப் பேசினார். அவர் பேசிக் கொண்டிருக்கையிலேயே அவர் சொன்ன குறிப்புக்களையும் வைத்து நான் "இசை அரசுவின் யோசனை" என்ற தலைப்பில் ஒரு தலையங்கம் எழுதினேன். அவர் பேசிமுடித்து தொலைபேசியை வைக்கவும் நான் தலையங்கத்தைக் கொண்டு போய்க் கொடுத்தேன்.

"என்ன, தலையங்கம் எழுதிட்டீங்களா, இவ்வளவு விரைவாகவா?" என்று ஆச்சரியப்பட்ட வாஸ் அவர்கள் அதை வாங்கிப் படித்தார். நல்லாயிருக்கே என்று சொன்னபடியே அச்சகப்பகுதிக்கு திருத்தம் எதுவும் செய்யாமலேயே அனுப்பி வைத்தார்.

அடுத்த வாரம், அதற்கு அடுத்த வாரம் ஒன்றும் நடக்கவில்லை. அதற்கப்புறம் ஆசிரிய தலையங்கம் எழுதும்படி என்னிடம் அவர் சொல்லவேயில்லை!

வீரகேசரியில் அக்காலத்தில் மூன்று தலையங்கங்கள் எழுதிய பெருமை அதுவும் பிராமணரல்லாத இலங்கையன் ஒருவன் தலையங்கம் எழுதியிருந்தான் என்றால் அது நானாகத் தானிருக்க வேண்டும்!

1960 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் 'ஈழநாடு' பத்திரிகையில்



படிப்பகம்

www.padippakam.com

செய்தி ஆசிரியராகச் சேர்ந்தேன். 1961 ஆம் ஆண்டில் 'ஈழநாடு' தினப்பத்திரிகையானது அடிக்கடி கொழும்புக்குச் செல்லும் நிர்வாக ஆசிரியர் கே.பி. ஹரன் கொழும்பிலிருந்து தலையங்கங்கள் எழுதி அனுப்பி வந்தார். அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எப் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி உலக மக்கள் அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. மறுநாள் காலை வெளிவந்த தினப்பத்திரிகைகளில் கொழும்பிலிருந்து வெளிவந்த 'டெய்லி மிரர்' தினசரி மட்டுமே கென்னடி மறைவுக்கு அஞ்சலி செலுத்தித் தலையங்கம் எழுதியிருந்தது. இதைப் பார்த்த ஈழநாடு நிர்வாக இயக்குநர் டாக்டர் கே.சி. சண்முகரெத்தினம் "எங்கள் பத்திரிகைக்கு ஆசிரியர் ஹரன் கொழும்பிலிருந்து எழுதி அனுப்பித்தான் தலையங்கம் பிரசுரிக்க வேண்டுமா" என்று கவலையுடன் தெரிவித்தார். பின் அவரே "கோபி நீங்களே எழுதினால் என்ன?" என்று கேட்டார்.

கென்னடி மறைவுக்கு அஞ்சலி செலுத்தி நான் எழுதிய தலையங்கம் ஈழநாடுவில் வெளிவந்தது. நிர்வாக ஆசிரியர் ஹரன் அவர்களும் யாழ்ப்பாணம் திரும்பிய போது அதைப்பாராட்டினார். பின்னர் ஹரன் அவர்களே யாழ்ப்பாணத்தில் இருக்கும் போது சில தலையங்கங்களை எழுதும்படி என்னை ஊக்குவித்தார்.

இதன் பின் ஆசிரியர் ஏ.ஈ. தம்பர் ஈழநாடு ஆசிரியர் குழுவுக்கு ஆலோசகராக வந்தார். அவரும் நான் தலையங்கம் எழுதுவதற்கு குறிப்புக்கள் தந்து ஊக்கப்படுத்தினார். 1970 ஆம் ஆண்டில் இலங்கையை ஒரு சோஷலிசக் குடியரசாக்குவதற்கு அரசியல் நிர்ணய சபை மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு உருவாக்கப்பட்டது. அரசியல் நிர்ணய சபையை தமிழரசுக் கட்சி பகிஷ்கரிக்க வேண்டுமென்ற சர்ச்சை எழுந்தது. இதுபற்றித் தலையங்கம் எழுத வேண்டுமென்ற எனது யோசனையை தம்பர் அவர்கள் ஏற்கவில்லை. வீண் சங்கடத்தில் மாட்டிக் கொள்ள வேண்டாம் சர்ச்சைக்குள்ளாகாதே என்று சொல்லி வேறு தலையங்கம் எழுதும்படி சொல்லி விட்டுப் போய் விட்டார்.

மறுநாள் ஈழநாடு பத்திரிகையில் பகிஷ்கரிப்புக் கூடாது என்பதற்குப் பல சான்றுகளை எடுத்துக் காட்டி நான் எழுதிய தலையங்கம் வெளிவந்தது. தம்பர் அவர்கள் அதைப்பார்த்துவிட்டு கோபப்படவில்லை, பாராட்டினார். நான் சிறுவனாக இருந்தபோதே தம்பர் மாஸ்டர் வீட்டுக்குப் போய் வரும் பழக்கம் உடையவனாக இருந்தேன் என்பது பலருக்குத்



படிப்பகம்

www.padippakam.com



தெரியாது. நான் உள்வீட்டுப் பிள்ளையும் கூட!

இதன்பின் 'ஈழநாடு' வில் நான் தொடர்ந்து தலையங்கங்கள் எழுதி வந்தேன். நான் எழுதிக் கொண்டிருக்கும் போதே ஒவ்வொரு தாளாக அச்சகப் பகுதியினர் எடுத்துச் சென்று அச்சுக் கோர்த்து வெளியிடுவார்கள். முழுக்க எழுதி வாசித்து மற்றவர்களும் வாசித்து ஆலோசனை பெற்று ஒருநாளும் நான் தலையங்கம் எழுதியதில்லை.. எதை எழுதினாலும் திருப்பி வாசித்துத் திருத்தும் நல்ல பழக்கமும் எனக்கு இல்லை. இன்னும் அது வருவதாக இல்லை.

'ஈழநாடு' பின்னர் 'காலைக்கதிர்' தொடர்ந்து செய்திக்கதிர், 'ஈழமுரசு', ஈழநாதம் என்றும் 2000 ஆம் ஆண்டில் மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த 'தினக்கதிர்' பத்திரிகைகளிலும் நான் ஆசிரியத் தலையங்கம் எழுதியிருக்கிறேன். ஆயிரக்கணக்கில் ஆசிரியத் தலையங்கங்களும் அரசியல் கட்டுரைகளும் 'வீரகேசரி தொடக்கம் 'தினக்கதிர்' வரை எழுதிக் குவித்திருக்கிறேன். அரசியல் கட்டுரைகள் பின்னர் சுடர்ஒளியிலும் நிகரியிலும் எழுதியிருக்கிறேன்.

பத்திரிகைப் பணியில் ஐம்பதாண்டுகளை நிறைவேற்றும் இவ்வாண்டில் தான் எனது தலையங்கங்கள் சில நூலுருவில் வெளிவரும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அன்பர்கள் நண்பர்கள் பலர் கூறிய யோசனையின் பேரில் இந்நூல் வெளிவருகிறது. இந்நூலில் இடம்பெற்றிருக்கும் தலையங்கங்களில் இரண்டே இரண்டு மட்டும் 'ஈழநாதம்' பத்திரிகையில் வெளியானவை. மற்றவை அனைத்தும் 'தினக்கதிர்' பத்திரிகையில் வெளிவந்தவை.

இத்தலையங்கங்கள் அந்தந்தச் சமயத்தில் நிலவிய அரசியல் நிலையை வைத்து எழுதப்பட்டவை. தமிழ் மக்களின் மன எழுச்சியையும் இவை பிரதிபலிப்பனவாக அமைந்திருப்பதை வாசக நேயர்கள் உணர முடியும்.

இந்நூலுக்குக் கிடைக்கும் ஆதரவைப் பொறுத்து இதர பத்திரிகைகளில் வெளிவந்த எனது தலையங்கங்கள் மேலும் சிலவற்றைத்-தேடி எடுத்து வாசக நேயர்களுக்குக் கொடுக்கலாம் என எண்ணியிருக்கி-றேன்.



படிப்பகம்

www.padippakam.com

இந்நூல் வெளிவருவதற்கு பெரிதும் உதவிய இப்பொழுது ஜெர்மனியில் வாழும், யாழ்ப்பாணம் 'ஈழநாடு' அச்சகப்பகுதி போர்மனாகப் பணியாற்றிய நண்பர் மு. ஆறுமுகசாமி அவர்களுக்கும் எனது பிள்ளைகளுக்கும் எனது உளம் நிறைந்த நன்றிகள்.

நண்பர் வேலணை வீரசிங்கம், நண்பன் ஸ்ரீரெங்கநாதன், தம்பி ஸ்ரீவிவேகானந்தன், நண்பர் என்.சிறீகாந்தா, பாரிசில் கவிஞர் கி.பி.அரவிந்தன், முகுந்தன், வள்ளுவர் பதிப்பகம் பாஸ்கரன், குணசேகரம், சத்தியசீலன், தங்கவடிவேல், எஸ்.கே.காசிலிங்கம், இ.கந்தசாமி, எஸ்.எஸ்.குகநாதன், நேசன், கலைஞர் ஏ.இரகுநாதன், ஜேர்மனி வரன், சாந்தி, புத்திரசிகாமணி, பரிமளராஜா, ஜஸ்மின், லண்டன் தேசம் ஜெயபாலன், என்.செல்வராஜா, நவநீதன், ராதா, விஜயபாரதி, அனுசுயா, தவபாலன், பற்றிமாகரன், திருமதி பற்றிமாகரன், சசிபாரதி சபாரத்தினம், கனடா கவிஞர் கந்தவனம், கவிஞர் உ.சேரன், என்.பாலசுப்பிரமணியம், ஏ.ஜே.கனகரத்னா, கே.வி.நடராஜன், கவிஞர் தில்லைச்சிவன், மட்டக்களப்பில் ஊடகவியலாளரான இரா.துரைரத்தினம், நடேசன், டி.சிவராம், சண் தவராஜா, ஜெயானந்தமூர்த்தி போன்ற பலர் எனது படைப்புக்கள் நூலுருவில் வெளிவர வேண்டுமென்பதில் ஆர்வமும் அக்கறையும் கொண்டு, ஊக்கமும் உற்சாகமுமளித்து வருகின்றனர். இவர்கள் அனைவருக்கும் எனது நன்றி.

உடல்நிலை சீராக இல்லாத போதும் இந்நூலுக்கு மனநிறைவோடு முன்னுரை தந்த அருமை நண்பர் இரா. பத்மநாதன் அவர்களுக்கு எனது நன்றிகள்.

இந்நூலை சிறந்த முறையில் உருவாக்கித் தந்த 'சரிநிகர்' சிவகுமார் அவர்களுக்கும் ஈகுவாலிற்றி அச்சகத்தாருக்கும் எனது நன்றி.

"ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை" என்ற எனது முதல் நூலுக்கு ஆதரவு தந்தது போல் இந்நூலுக்கும் வாசக அன்பர்கள் ஆதரவு தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. இந்த நம்பிக்கையில் மேலும் சில நூல்களை வெளியிட வேண்டுமென்ற ஆவல் நிறைய இருக்கிறது.

*அன்புடன்*
**கோபு**
(எஸ்.எம். கோபாலரத்தினம்)

*143 / 27, எல்லை வீதி,*
*மட்டக்களப்பு.*
*தொலைபேசி: 065-25998*



படிப்பகம்

www.padippakam.com



## யார் இந்தக் கோபாலரத்தினம் ?

1987ம் ஆண்டு ஒக்ரோபர் 10ம் திகதி யாழ் 'ஈழமுரசு' அலுவலகம் இந்திய இராணுவத்தால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதாக செய்தி கிடைத்தது. அப்போ நான் எனது சொந்த ஊரான வல்வெட்டித்துறையில் இருந்தேன். விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் போர் வெடித்தது. பதட்டமான சூழ்நிலை நிலவிய நேரமது. ஈழமுரசு அலுவலகத் தகர்ப்பால், நிலவும் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிய வண்ணம் வந்த ஒரே வழியும் அடைபட்டதில் பலருக்குக் கவலை. ஆனால் இதைப் பற்றியெல்லாம் ஆழமாகச் சிந்திப்பதற்கோ, கவலைப்படுவதற்கோ உரிய வயதில்லை எனக்கு. என்ன ஆச்சரியம்! அடுத்த சில தினங்களில் புதிய ஈழமுரசுப் பதிப்புச் சிலவற்றைக் காண நேரிட்டது. எப்படி இது சாத்தியம் என்று என் மனதில் தோன்றிய வினாவிற்கு, 'என்ன இடையூறு வந்தாலும் தடங்கல் ஏற்பட்டாலும் கோபாலரத்தினம் பேப்பர் விடுவான் என்று எனக்குத் தெரியும்' என்று ஒரு முதியவர் சொன்னது இன்றும் என் காதில் ஒலிக்கிறது. யார் இந்தக் கோபாலரத்தினம்? பின்னாளில் இவருடைய அரசியல் தலையங்கங்கள், அரசியற் கட்டுரைகளைத் தேடி அலையப் போகின்றேன் என்பது தெரியாமலேயே அந்த நாட்கள் மறைந்தன.

கோபு, எஸ்.எம்.ஜி என அழைக்கப்படும் எஸ்.எம்.கோபாலரத்தினம் அரை நூற்றாண்டுகளுக்கு மேலாகப் பத்திரிகையே மூச்சாக வாழ்ந்து கொண்டிருப்பவர். ஈழத்தின் மூத்த பத்திரிகையாளர்.



படிப்பகம்

www.padippakam.com

ஒரு பத்திரிகையாளனுக்கு 50 ஆண்டு காலம் என்பது வாழ் நாள் சாதனையாக இருந்த போதிலும், அதைவிட முக்கியம் அவர் பணியாற்றிய காலப்பகுதி. சிங்கள இனவாதம் முளைவிடத் தொடங்கிய காலப் பகுதியில் தொடங்கிய இவரது பத்திரிகைப் பணி இன்று இலங்கைத் தீவு இரு தேசங்களாகப் பிளவடைந்திருக்கும் காலப் பகுதியிலும் தொடர்கிறது.

கோபு அவர்கள் போராட்டத்திற்கு பக்கபலமாக மட்டுமல்ல, ஒரு ஊன்று கோலாக போராட்டத்தின் விம்பமாகவே தென்பட்டார். மக்களைப் போராட்டத்தின் பால் ஈர்க்கும் வண்ணம் இவரது ஆசிரியர் தலையங்கங்கள் அமைந்திருந்ததாகக் குறிப்பிடுகிறார் ஒரு பத்திரிகை நண்பர்.

"செய்திகளைச் சான்றோடு எடுத்துக் கூறுகின்ற திறமும், மக்களுக்கு எளிதில் விளங்குகின்ற நடையில் செய்திகளை எடுத்துக் கூறும் பாங்கும் இவரது சிறப்பியல்பு" என்கிறார் இவரது நீண்டகால நண்பரும் தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியருமாகிய கா. சிவத்தம்பி அவர்கள்.

கோபுவின் அறிவும் ஆற்றலும் அவர் தம் அனுபவங்களும் அவர் நடாத்திய பத்திரிகைகள் மூலம் நன்கு புலனாகின்றன. வீரகேசரி, ஈழநாடு, ஈழமுரசு, செய்திக்கதிர், ஈழநாதம் என்று தொடங்கிய இவரது பத்திரிகைப் பணி, இன்று தினக்கதிர் வரை தொடர்கிறது.

நாம் வாழும் காலங்களில் சில கலைஞர்களைக் கௌரவிப்பதில்லை. அவர்கள் மறைவுக்குப் பின் அதற்கான மதிப்பைக் கொடுக்கின்றோம். இது வேதனையான விடயம். அவர்கள் வாழும் காலத்திலேயே அதற்கான கௌரவமும் மதிப்பும் கொடுக்கப்பட வேண்டும்.

கோபுவின் 50 ஆண்டுகால பத்திரிகை வரலாறும், அவர் கடந்து வந்த பாதையும், அவர் பட்ட துன்பங்களும் அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளும், கையாண்ட உத்திகளும் நமக்கு நல்ல பாடங்களையும் படிப்பினைகளையும் கடந்தகால நிகழ்ச்சிகளைப் புலப்படுத்தும் பட்டறிவுக் காட்சிகளாகவும் தென்படுகின்றன.

ஈழத்தின் பத்திரிகை வரலாற்றில் கோபு ஒரு மைல்கல். எம்மைப் போன்ற வளர்ந்து வரும், வளரத்துடிக்கும் பத்திரிகையாளர்களுக்கு கோபு ஒரு பல்கலைக்கழகம் என்றால் அது மிகையல்ல.

**பரணி**
**பாரிஸ் ஈழமுரசு,**
ஜூலை 2002.



படிப்பகம்

www.padippakam.com

www.padippakam.com



# தோல்வியை ஏற்பது சுலபமல்ல!

போர்க்களத்தில் வெற்றியும் தோல்வியும் சகஜம் தான், என்றாலும் தோல்வியைத் தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவம் எல்லோருக்கும் வராது.

இலங்கையில் கடந்த சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக போர் நடைபெற்று வருகிறது. கடந்த வருடம் ஆனையிறவில் நடந்த போரில் இலங்கை அரச படைகளுக்கு ஏற்பட்ட தோல்வி இலங்கை அரசினாலும் படைத்தரப்பினாலும் தாங்கிக் கொள்ள முடியாதது மட்டுமல்ல, மறக்கவும் முடியாதது.

யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றி சிங்கக் கொடியை ஏற்றி எக்காளம் போட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் ஆனையிறவுத் தோல்வியில் கரைந்து போயின. ஆனையிறவைத் தொடர்ந்து முன்னேறிச் சென்ற விடுதலைப் புலிகளிடம் சிக்கிக் கொண்ட சுமார் 40 ஆயிரம் படையினரைக் காப்பாற்றுவதற்கு உலக நாடுகளிடமெல்லாம் உதவி கேட்டுப் பெற்றது இலங்கை அரசு.

ஆயுதங்கள் குவிந்தன, படைச்சாதனங்கள் வந்திறங்கின, வெளிநாட்டு இராணுவ ஆலோசனைகள் கிடைத்தன. 40 ஆயிரம் போர் வீரர்களையும்



படிப்பகம்

www.padippakam.com



காப்பாற்றி விட்டோம் என்று இலங்கை அரசு நிம்மதி அடைந்தது. விடுதலைப் போராட்டத்தில் அரசுக்கெதிரான "பயங்கரவாத ஆயுதக் கிளர்ச்சி" என்ற பிரசாரம் வெற்றியளித்து விட்டதில் அரசுக்குப் பெரும் திருப்தி.

விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்றும், உலக நாடுகளில் தடை செய்வதன் மூலம் தமது நோக்கத்தைச் சுலபமாக அடைந்து விடலாம் என்றும் கருதிய அரசு "இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வு" என்ற துருப்புச் சீட்டையும் இறக்கி வைத்தது. "பயங்கரவாத ஒழிப்பு" என்ற பெயரில் விடுதலைப் புலிகளை அழித்து ஒழிப்பதன் மூலம் வெற்றிகரமான இன ஒடுக்கு முறைகளையும் நிறைவேற்றி விடலாம் என்றும் கனவு கண்டது.

வெளிநாடுகளிலிருந்து கிடைத்த நவீன ஆயுதங்களிலும் ஒலியை விட வேகமான குண்டுவீச்சுப் போர் விமானங்களிலும் அதீத நம்பிக்கை வைத்த அரசு பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்பதில் இதய சுத்தியோடு நம்பிக்கை வைக்கவில்லை.

போரில் விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டி அல்லது அடக்கி ஒடுக்கி விட்டு பேரினவாதிகளுடன் சேர்ந்து அல்லது அவர்களைத் திருப்திப்படுத்துவதற்கு திட்டமிட்டு ஏற்கெனவே தயாரித்து வைத்திருக்கும் திட்டத்தை தமிழ் மக்கள் மீது திணித்து விடலாம் என ஆளும் கட்சியினர் எதிர்பார்த்திருக்க வேண்டும்.

இலங்கைப் பிரச்சினைக்கு இலங்கையில் தான் தீர்வு காணப்பட வேண்டும். போருக்கு இங்கேயே தான் தீர்வு காணப்பட வேண்டும். எத்தனை வெளிநாட்டு ஆயுதங்கள் கொண்டு வந்து குவிக்கப்பட்டாலும் எந்தப் பெரிய வெளிநாட்டுப் போர் விற்பன்னர்கள் ஆலோசனை தெரிவித்தாலும் போர் நடப்பது இலங்கையில், போரில் மோதிக் கொள்பவர்கள் இலங்கை இளைஞர்கள் தான்.

ஆயுதங்களிலும் போர்ச் சாதனங்களிலும் போர் வியூகத்திற்கு வெளி-நாட்டவர்களின் ஆலோசனைகளிலும் நம்பிக்கை வைப்பதை விடுத்து இந்தப் போரில் இந்த நாட்டின் இளசுகள் உயிர்ப்பலி கொடுப்பதையும் அங்கம் இழப்பதையும் தடுப்பதற்கு நல்லதொரு சமாதானத் தீர்வு காண வேண்டிய முயற்சியின் வெற்றியில் அரசு நம்பிக்கை வைக்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



நான்கு மாதப் போர் நிறுத்தத்தின் பின் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் தொடுத்து அவர்களை வலிந்து போருக்கு இழுத்து அப்பாவி சிங்கள இளைஞர் பலரைப் பலி கொடுத்ததுடன் பெருந்தொகையான இளைஞர்கள் ஊனமடையவும் காரணமாக இருந்த அரசின் மீது மக்களுக்கு அன்பு சுரக்குமா? ஆத்திரம் பிறக்குமா?

இந்த நிலைக்கு அரசை மட்டும் குற்றம் சொல்ல முடியாது. பேரினவாதப் பத்திரிகைகள் மட்டுமல்ல, தம்மைத் தேசிய பத்திரிகைகள் என்று வர்ணித்துக் கொள்ளும் பத்திரிகைகள் கூட வடக்கிலும் கிழக்கிலும் நடைபெறும் உண்மைச் சம்பவங்களை தென் இலங்கைச் சிங்கள மக்கள் அறிந்து கொள்ள வாய்ப்பளிக்காமல் அவர்களை இருளிலேயே வைத்திருக்கின்றன.

நாட்டில் நடைபெறும் கொலை கொள்ளைச் சம்பவங்கள் அத்தனைக்கும் விடுதலைப் புலிகள் மீது பழியைப் போட்டு அவர்களைக் கொலைகாரப் பயங்கரவாதிகள் என்று சிங்களப் பொதுமக்களைப் பயமுறுத்தி வைத்திருப்பதும் இந்தப் பத்திரிகைகளே.

மன்னார் பெண்கள் பாலியல் வல்லுறவு போன்ற சம்பவங்களும் மிருசுவில் படுகொலைகள் போன்ற சம்பவங்கள் யாவும் தென் இலங்கை மக்களுக்கு உண்மை தெரியாமல் மறைக்கப்பட்டன.

இப்பொழுது எழுதுமட்டுவாள் போர்ச் செய்திகளைக் கூட அரச படைகள் புலிகளின் பிரதேசத்தைக் கைப்பற்றி பிடித்த இடத்தை நிலை நாட்டி புலிகளை அழித்து ஒழித்து வெற்றியீட்டி வருவதாகச் செய்திகள் வெளியிடத் தொடங்கின. காயமடைந்தவர்கள் பெருமளவில் கொழும்பில் போய் இறங்கி அம்புலன்ஸ் வண்டிகள் ஆஸ்பத்திரிகளில் அவர்களைக் கொண்டு போய்க் குவிக்கவும் உண்மையை மறைக்க "தேசிய" ஊடகத்துறையினால் முடியாமல் போய் விட்டது.

சிங்களப் பெரும்பான்மைப் பொது மக்கள் உண்மையைத் தெரிந்து கொண்டால் நாட்டின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு கிடைக்கலாம். அதற்கு முன் கொழும்பிலுள்ள ஆங்கில சிங்களப் பத்திரிகைகள் தங்கள் தோல்வியை ஏற்றுக் கொண்டு உண்மைகளை எடுத்துச் சொல்ல முன்வர வேண்டும்.

02-05-2001



படிப்பகம்

www.padippakam.com



## கௌரவத்துக்கு நல்லது

ஒருதலைப் பட்சமாக விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்தை மேற்கொண்டிருந்த காலத்தில் அவர்கள் நவீனரக ஆயுதங்களைப் பெற்றுப் போருக்கு தயார் செய்திருக்கிறார்கள் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தையும் மற்றும் ஆளும் கட்சியினரும் ஒரு குற்றச் சாட்டாகவே கூறி வருகின்றனர்.

இதே சமயம் விடுதலைப் புலிகள் கடந்த ஆண்டு டிசம்பர் 24ம் திகதி நத்தார் பண்டிகைத் தினத்தன்று நள்ளிரவு முதல் போர் நிறுத்தம் செய்வதாக அறிவித்து அரசும் இதேபோல் சமாதானப் பேச்சுகளுக்கு நல்லெண்ண சமிக்ஞையாகப் போர் நிறுத்தம் மேற்கொள்ள வேண்டுமெனக் கோரிய போது “புலிகளை நம்ப முடியாது” என்று சொன்னவர்களும் ஆளும் கட்சியினர் தான்.



படிப்பகம்

www.padippakam.com



விடுதலைப் புலிகள் “போர் நிறுத்தம்” என்ற பெயரில் மீண்டும் ஒரு பெரும் போருக்கு தயாராகிறார்கள் என்று பேரினவாத பத்திரிகைகள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்ததும் உண்டு.

இதே சமயம் புலிகள் பலவீனமடைந்துள்ளதால் போர் நிறுத்தம் செய்திருக்கிறார்கள் என்று கிண்டல் செய்தது ஆளும் கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகள் மட்டுமல்ல அரச படை அதிகாரிகளும் தான்.

போர் நிறுத்தம் செய்த விடுதலைப் புலிகள் உடனடியாகவே போருக்குத் தயார் செய்தார்களோ இல்லையோ புலிகளைப் போருக்குத் தயார் படுத்தும்படி செய்தது அரசும் அரச படைகளும் தான் என்று உறுதியாகச் சொல்லலாம்.

பேச்சுவார்த்தைக்கான நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக டிசம்பர் 24ம் திகதி நத்தார் தினத்தில் நள்ளிரவிலிருந்து ஜனவரி மாதம் 24ம் திகதி நள்ளிரவு வரை ஒரு மாதம் போர் நிறுத்தம் செய்வதாகவும், அரசும் இதே போல் நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டுமென்றும் விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தனர்.

இதற்கு அரசும் நல்ல முறையில் பதில் சொல்லாமல் கிண்டலும் கேலியும் செய்ததுடன் போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லையென்று கூறிவிட்டு விடுதலைப் புலிகளின் முகாம்கள் மீதும் அவர்களின் பகுதிகள் மீதும் தாக்குதல் நடத்தியது.

உலக நாடுகளுக்குச் சென்று விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் எனத் தடை செய்ய வேண்டுமென்று வற்புறுத்தியதுடன் மேலும் மேலும் நவீன ஆயுதங்களைக் கொண்டு வந்து குவித்துப் பெருமைப்பட்டுக் கொண்டது.

கடற்படையும் பலம் பெற்று விட்டதென்பதைக் காட்டுவதற்கு கடற்படைப் பயிற்சியிலுமீடுபட்டது. வான் படை பற்றியும் பெருமிதப்பட்டது. நவீன ஆயுதங்கள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. நவீனப்படைச் சாதனங்கள் வந்து விட்டன. உலக நாடுகள் எல்லாம் ஆதரவு கொடுக்கின்றன. விடுதலைப் புலிப்பயங்கரவாதிகளை பூண்டோடு அழித்து விடுகிறோம் என்று அரசு வீறாப்புடன் செயல்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com



அரசாங்கம் நவீன ஆயுதங்களைக் கொண்டு வந்து குவிக்கும் போதே அவை விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் தமிழ் மக்களுக்கு எதிராகவுமே பயன்படுத்துவதற்காகக் குவிக்கப்படுகின்றன என்பதை அறிந்து கொள்வதற்கு படைப்பயிற்சியோ போர் ஞானமோ வேண்டியதில்லை.

தாங்கள் நவீன ஆயுதங்களைக் குவித்துக் கொண்டு, நவீன போர் விமானங்களை இறக்குமதி செய்து புலிகளின் முகாம்கள் மீதும் தமிழ்ப்பகுதிகளிலும் தாக்குதல் நடத்திக் கொண்டு புலிகள் மௌனமாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது எந்த நாட்டுப் போர் வல்லுனர்களின் அறிவுரையோ...!

கண்ணிவெடிகளைப் படையினர் வருவார்களென்று எதிர்பார்த்து நிலத்தில் விதைத்திருந்தார்களென்று புலிகள் மீது குற்றம் சாட்:டுகின்றார்கள். போர்க்களத்தில் தம்மீது தாக்குதல் நடத்திக் கொண்டு முன்னேறி வரும் எதிரியை வீழ்த்துவதற்கு வியூகம் வகுப்பதில் தான் படையின் திறமையே தங்கியிருக்கிறது.

முன்னேறி வரும் எதிரியை முறியடிப்பதற்கு கண்ணிவெடி விதைக்காமல் கத்தரிக்காயா விதைப்பார்கள்? எப்படியோ போர் நிறுத்தம் இல்லை போர் தொடரும் என்று சொன்னவர்கள் எதிர்பாராத விதமாக இரண்டையும் சத்தமில்லாமல் மௌனமாகச் செய்ய வேண்டிய நிலையிலுள்ளனர்.

நான்கு நாள் போரினால் சமாதான முயற்சிகளுக்குப் பின்னடைவு ஏற்பட்டிருப்பதாக சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சொன்னாலும் முயற்சியை அவர் கைவிடவில்லை.

மீண்டும் புலிகளைப் பலவீனப்படுத்தி பேச்சு நடத்தலாம் என இனியும் எதிர்பார்த்துக் கொண்டிராமலும் தாமே தீர்வைத் திணிக்க வேண்டுமென்று பிடிவாதமாக இராமலும் விட்டுக் கொடுத்துப் பேசி தமிழ் மக்களும் கௌரவத்துடன், சுயநிர்ணய உரிமையுடன், சொந்த மண்ணில் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வதற்கு வழிவகுக்கக்கூடிய நல்ல தீர்வு காண இதயசுத்தியுடன் பேசுவதற்கு இனியாவது அரசு முன்வருவது அதன் கௌரவத்துக்கு நல்லது.

03-05-2001



படிப்பகம்

www.padippakam.com



## அந்த ஒரு உயிர் தானா உயிர்?

இந்திய விடுதலைப் போராட்டம் தான் இலங்கை உட்பட ஆசிய ஆபிரிக்க நாடுகள் பலவும் அந்நியராட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கு உந்து சக்தியாகவும் தூண்டுகோலாகவும் அமைந்தது.

இன்று உலகில் நடைபெறும் விடுதலைப் போராட்டங்களிலும் கூட இந்திய விடுதலைப் போராட்டங்களும் தியாகங்களும் உதாரணமாக எடுத்துக் காட்டப்பட்டு வருகின்றன.

இலங்கையில் தமிழ் மக்கள் தமது இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு தந்தை செல்வநாயகம் தலைமையில் இந்திய விடுதலைப் போராட்டம் காட்டிய வழியிலேயே அகிம்சைப் போராட்டங்கள் நடைபெற்றன.

ஜனநாயக வழியில் இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு தமிழ் மக்கள் பொதுத்தேர்தல்களில் அளித்த ஆணைகள் பெரும்பான்மை ஜனநாயகத்தினால் நிராகரிக்கப்பட்டன.

அடுத்து காந்தீய வழியில் தமிழ் மக்கள் மேற்கொண்ட அகிம்சைப் போராட்டங்கள் பேரினவாதக் குண்டர்களினாலும் அரசின் ஆயுதப் படைகளின் அடக்குமுறைகளினாலும் அடித்து நொருக்கி அடக்கி ஒடுக்கப்பட்டன.

இதன் பின்னர் தான் தமிழ் இளைஞர்கள் தமது மக்களையும், மண்ணையும், தம்மையும் பாதுகாத்துக் கொள்ள ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கினர்.



படிப்பகம்

www.padippakam.com



தமிழ் இளைஞர்களின் இந்தப் போராட்டத்துக்கு இந்தியாவே முதலில் தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதம் வழங்கி பயிற்சியும் வழங்கி உதவியளித்தது. இதே இந்தியா இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் சாணக்கியத்தில் சிக்கி இலங்கைத் தமிழ் மக்களுக்கெதிராகவே இந்தியப் படைகளை ஆக்கிரமிப்புப் படைகளாக செயல்படச்செய்தது.

இந்தியப் படைகள் இலங்கையில் குறுகியகாலமே இருந்தாலும் செய்த அட்டூழியங்கள் நிறையவே!

சர்வதேசப் போர் மரபுகளையெல்லாம் இந்தியப் படை மீறியது. ஒரு தீபாவளி தினத்தில் தான் அது யாழ்ப்பாண நகருக்குள் புகுந்து பெரியாஸ்பத்திரிக்குள் நோயாளர்கள், வைத்தியர்கள் என எந்த வேறுபாடும் பார்க்காமல் நூற்றுக்கு மேற்பட்டவர்களைச் சுட்டுக் கொன்றது; மற்றும் பலரையும் காயப்படுத்தியது.

இது மட்டுமல்ல, பல கிராமங்களிலும் நகரிலும் பலரைச் சுட்டுக் கொன்றதுடன் பல பெண்களை மானபங்கமும் செய்தது. ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை விசாரணை என்ற பெயரில் சித்திரவதை செய்தது; சிறை வைத்தது.

இந்தியப்படையை இங்கே அனுப்புவதற்குக் காரணமாக இருந்த அன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கையில் இந்தியத் தூதுவராக இருந்த தீக்ஷித்துக்கும் பாதிக்கப்பட்ட தமிழர்களின் அவலக்குரல் கேட்கவில்லை; செய்த முறையீடுகளும் காதில் விழவில்லை.

இந்தியப் போராட்ட காலத்தில் 1939ம் ஆண்டு எப்ரல் மாதம் 13ம் திகதி சீக்கிய புத்தாண்டு தினமான பைசாகி தினத்தில் பஞ்சாபில் ஜாலியன்வாலா பாக் மைதானத்தில் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைச் சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்க நிராயுதபாணிகளான மக்கள் திரண்டிருந்தனர்.

நான்கு புறமும் வீடுகளும் சுவர்களும் நிறைந்த இந்த மைதானத்திற்குள் செல்லவும், வெளியேறவும் ஒரேயொரு குறுகலான வழி தான் இருந்தது.

இங்கு வந்த வெள்ளைக்கார ஜெனரல் ஹாரிடையர் அந்த ஒரேயொரு வழியையும் அடைத்துக் கொண்டு நின்றான், இரு பக்கங்களிலும் தான் அழைத்து வந்த சிப்பாய்களை நிறுத்தி வைத்தான், நடுவில் இரண்டு பீரங்கிகளை வைத்து நான்கு சிப்பாய்களைக் கொண்டு இயக்கி அங்கு



படிப்பகம்

www.padippakam.com



திரண்டிருந்த மக்கள் மீது பீரங்கிகளாலும் சிப்பாய்களின் துப்பாக்கிகளைக் கொண்டும் சுட்டுத்தள்ள உத்தரவிட்டான்.

பத்து நிமிடத்துக்குள் 1650 ரவுண்டுகள் சுடப்பட்டன, தோட்டாக்கள் முடிந்தன. இதில் 800 பேர் மாண்டனர். 1580 பேர் காயமுற்று நடைப்பிணமானார்கள்.

இது இந்தியர்கள் நெஞ்சில் தீராத காயத்தை ஏற்படுத்தியது. வெள்ளையர் ஆட்சிக்கு மாறாத வடுவை உண்டாக்கியது. இச்சம்பவம் உலகையே உலுக்கியது.

இப்படுபாதகச் செயல்களைக் கண்ட உத்தம சிங் என்ற இளைஞன் மனம் கொதித்தான். இதற்குப் பழிவாங்க உறுதி பூண்டான்.

உத்தம சிங் உடனடியாகப் பழிவாங்கப் புறப்படவில்லை. இருபத்தியொரு ஆண்டுகள் காத்திருந்தான். உத்தம சிங் பல நாடுகளுக்குச் சென்று பல வருடங்களுக்குப் பிறகு இங்கிலாந்து சென்றபோது ஜெனரல் ஹாரிடையர் பக்கவாத நோயால் படுத்து மாண்டுபோன செய்தி கிடைத்தது; ஏமாற்றமடைந்தான்.

ஜாலியான்வாலா பாக் படுகொலைச் சமயம் பஞ்சாப் கவர்னராக இருந்த சேர் மைக்கல் ஒடையரை ஒரு பொதுக் கூட்ட மேடையில் வைத்து உத்தம சிங் ஆறு முறை சுட்டுக் கொன்று பழி தீர்த்தான்.

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் இது ஒரு வீரகாவியமாக இடம் பெற்றிருக்கிறது. ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட சம்பவம் பற்றித் தமிழ் மக்கள் மகிழ்ச்சி கொள்ளவில்லை. மாறாக இன்றும் அதற்காக வருந்துவது உண்டு. எந்தக் கொலையையும் அவர்கள் கவலையுடன் தான் பார்க்கிறார்கள்.

ராஜீவின் அன்னை பிரதமர் இந்திரா காந்தி சீக்கிய மெய்க்காப்பாளனால் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு இலங்கையில் வடக்கும் கிழக்கும் அழுது கண்ணீர் வடித்தது .

1948ல் மகாத்மா காந்தி ஒரு இந்துவால் கொல்லப்பட்டதற்கு வடக்கும் கிழக்கும் கண்ணீரை வடித்தது மட்டுமல்ல ஒரு மாதம் துக்கமும்



படிப்பகம்

www.padippakam.com



அனுஷ்டித்தது. ராஜீவ்காந்தி கொல்லப்பட்ட சமயம் அவர் இந்தியப் பிரதமராகக் கூட இருக்கவில்லை.

ராஜீவ் காந்தியின் கொலை பற்றி இந்தியப் பொலிஸார் விசாரித்து சமர்ப்பித்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே எதிரிகள் அனைவருக்கும் விசேட நீதிமன்றம் மரண தண்டனை வழங்கியது.

உச்ச நீதிமன்றம் மேன்முறையீட்டில் 19 ரை விடுதலை செய்தது. இக்கொலையின் பின்னணி பற்றி விசாரித்த ஜெயின் கமிஷன் அறிக்கை தெளிவில்லை. சரியான விசாரணை நடைபெறவில்லையென இன்றும் இந்தியாவில் வாதிடுகிறார்கள்.

இந்நிலையில் தமிழ் நாட்டில் அரசியல் கட்சிகள் தங்கள் பதவிகளுக்காக விடுதலைப் புலிகளைப் பற்றிப் பேசுவதும் கலைஞர் கருணாநிதி தமக்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை என்று மறுப்பதும் இலங்கை அரசுக்கு அதன் பயங்கரவாதப் பிரச்சாரத்துக்கு உதவுவதாகவே அமைந்திருக்கிறது.

இந்திரா காந்தியை சுட்டுக் கொன்றதற்காக சீக்கிய சமுதாயத்தையே இந்திய அரசு வெறுத்து ஒதுக்கி விட்டதா, கவர்னர் மைக்கல் டயரை உத்தம சிங் கொன்றதற்காக இங்கிலாந்து சீக்கிய சமூகத்தை ஒழித்துக்கட்ட முனைந்ததா?

தமிழ் நாட்டில் ஆஷ்துரையை வாஞ்சிநாதன் கொன்றதால் தமிழ் மக்களையே இங்கிலாந்து பழிவாங்கியதா?

ராஜீவ்காந்தி கொலையை மட்டும் தமிழ் நாட்டில் சில அரசியல்வாதிகள் தூக்கிப் பிடிப்பதேன்?

இலங்கையில் இந்தியப் படைகள் நோயாளிகளையும், வைத்தியர்களையும், பெண்களையும், குழந்தைகளையும் நசுக்கிக் கொலை செய்ததற்கு ஒரு இந்தியனாவது இதுவரை வருத்தம் தெரிவித்தானா, மன்னிப்புக் கேட்டானா?

ராஜீவின் உயிர் தான் உயிர் மற்றதெல்லாம்.....?

13-02-.2001



படிப்பகம்

www.padippakam.com



## நிரந்தரத் தீர்வுக்கு வழி

விடுதலைப் புலிகளைச் சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவர யாழ்ப்பாண மக்கள் சகல விதமான அழுத்தங்களையும் கொடுக்க வேண்டுமென்று இலங்கை ஜனாதிபதி சந்திரிகா யாழ்ப்பாணத்தில் நடந்த மேதினக் கூட்டத்தில் செய்மதி மூலம் யாழ்ப்பாண மக்களுக்கு ஆற்றிய உரையில் கோரியிருக்கிறார்.

புலிகளைச் சமாதான வழிக்குக் கொண்டு வந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்திருப்பதாகவும் சந்திரிகா அம்மையார் கூறியிருக்கிறார்.

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல சகல சமாதான விரும்பிகளினதும் சர்வதேச சமூகத்தினதும் பூரண ஒத்துழைப்பைப்



படிப்பகம்

www.padippakam.com



பெற்றிருப்பதாகக் கூறும் ஜனாதிபதி சந்திரிகா நோர்வேயின் ஆதரவுடன் சமாதானத் திட்டம் ஒன்றைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும் விடுதலைப் புலிகள் விதித்து வரும் நிபந்தனைகள் காரணமாக கடந்த ஐந்து மாதங்களாகத் தாமதம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

நான்கு மாதங்களாக விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாகப் போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு அரசும் போர் நிறுத்தம் செய்ய முன்வர வேண்டுமென்று கேட்ட போது அதற்குச் செவி சாய்க்காமல் போரை முன்னெடுத்துச் சென்றது யார்? இது யாழ்ப்பாண மக்களுக்குத் தெரியாது என்று ஜனாதிபதி நினைக்கிறாரா?

நான்கு மாதப்போர் நிறுத்தத்தின் பின்பும் ஐந்தாவது மாதத்துக்கு அதை நீடிக்க முடியாதபடி அரசபடைகள் தாக்குதலைத் தொடருகின்றன என்று போர் நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததும் புலிகள் மீது தாக்குதல் நடத்தி அவர்களைப் போருக்கு இழுத்தது யார்?

இந்த நான்கு நாள் போரினால் சமாதான முயற்சிகளுக்குப் பின்னடைவு ஏற்பட்டிருக்கிறதென்று இந்த சமாதான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ள நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சொன்னதை ஜனாதிபதி மறந்து விட்டாரா? இதுவும் யாழ்ப்பாண மக்களுக்குத் தெரியாதென்று நினைக்கிறாரா?

போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறியவர்களும் போர் மூலமே போருக்கு முடிவு கட்டுவோம் என்று கூறியவர்களும் யார்?

சமாதானத் தீர்வுக்கு பேச்சுவார்த்தை நடத்த வேண்டியவர்களைப் "பயங்கரவாதிகள்" என்று தடை செய்திருப்பது மட்டுமல்லாமல் உலக நாடுகளும் அவர்களைப் பயங்கரவாதிகள் என்று தடை செய்ய வேண்டுமெனக் கேட்டுப் பிரசாரம் செய்து வருவதுடன் அவர்களை மிக மோசமாக விமர்சித்துக் கொண்டு அவர்கள் நிபந்தனையில்லாமல் பேச வரவேண்டுமென்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

பேச்சுவார்த்தை என்று சொல்லிக் கொண்டு சிங்களப் பேரினவாதிகளைத் திருப்திப்படுத்துவதற்காக 1995ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தாமே முன் வைத்த திட்டத்தைப் பலபடிகளிலும் வெட்டிக்கொத்தி கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக்கிய திட்டத்தை உலக நாடுகளிடம் காட்டி



படிப்பகம்

www.padippakam.com



அவர்கள் சம்மதம் பெற்றுவிட்டால் இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிடுமா, சமாதானம் வந்து விடுமா?

தமிழ் மக்களின் சம்மதத்தை பெறாமல் செய்து கொண்ட ராஜீவ்-ஜே.ஆர். ஒப்பந்தத்துக்கு நடந்தது என்ன? இப்பொழுது தமது புதிய அரசியல் திருத்தத் திட்டத்தைத் தமிழ் மக்கள் மீது திணிப்பதைத்தான் "சமாதானப் பேச்சு" என்று ஜனாதிபதி சந்திரிகா கருதுவதாகத் தெரிகிறது.

பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் சிங்களப் பேரினவாதிகளின் எதிர்ப்பினால் கிழித்தெறியப்பட்டன. 1970ம் ஆண்டில் சிறிமா அம்மையார் புதிய அரசியல் நிர்ணய சபையை (பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள்) கூட்டி இலங்கையை ஜனநாயக குடியரசாகப் பிரகடனம் செய்ய முனைந்த போது ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட தமிழ்ப்பிரதிநிதிகள் சமர்ப்பித்த அடிப்படைப் பிரேரணைகள் விவாதிக்கப்படாமலே நிராகரிக்கப்பட்டன.

இரண்டு தமிழ்ப் பிரதிநிதிகள் சம்மதம் தெரிவித்து புதிய அரசியல் யாப்புக்கு கையெழுத்திட்டனர். இதனால் இனப்பிரச்சினை தீரவில்லை வளர்ந்தது. சிற்றம்பலம் சுந்தரலிங்கம் காலத்திலிருந்து குமாரசூரியர் காலம் வரை இலங்கை அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கி தமிழ் மக்கள் உரிமைகளை இழந்ததும் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் காற்றில் பறந்ததும் தான் கண்ட பலன்.

இப்பொழுதும் சந்திரிகா அம்மையாரின் புதிய அரசியல் யாப்பினால் சிலருக்கு நன்மை கிடைக்கலாம், அவர்களின் ஆதரவும் புதிய அரசியல் யாப்புக்குக் கிடைக்கும். ஆனால் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வோ இலங்கையில் நிரந்தர சமாதானமோ கிடைப்பதற்கு வழியில்லை.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு உரிமையிருக்கிறது அவர்கள் கௌரவமாகவும் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழ வேண்டும் என்பதை உணர்ந்து, இதய சுத்தியோடு அவர்களுடன் கலந்து பேசி அவர்கள் ஆதரவுடன் ஒரு திட்டத்தை உருவாக்குவதே, நிரந்தரத் தீர்வுக்கும் நிரந்தர சமாதானத்துக்கும் உள்ள ஒரே வழி. உலக நாடுகள் திட்டத்தை ஆதரித்துப் பயனில்லை அதனை அனுபவிப்பவர்கள் தான் ஆதரிக்க வேண்டும்.

04-05-2001



படிப்பகம்

www.padippakam.com



## நமக்கும் படிப்பினையே!

இலங்கையின் இனப்பிரச்சினை இப்போது உலக நாடுகள் தலையிடுமளவுக்கு வளர்ந்து விட்டது கண்டு பிரதமருக்கும் சினம் வருகிறது. பேரினவாதப் பத்திரிகைகளுக்கும் ஆத்திரம் வருகிறது.

இலங்கை இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வு காணப்படுவதற்கு உதவியாளராக அல்லது அனுசரணையாளராக இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஏற்றுக் கொண்ட நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அமெரிக்காவுக்குச் சென்று அமெரிக்கத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியது பற்றி



படிப்பகம்

www.padippakam.com



கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று நேற்றுத் தனது முதல் பக்கத்துக்குத் தலையங்கத்தைக் கொண்டு வந்து "விடுதலைப் புலிகளின் மீதான தடையை நீக்க வேண்டுமா? ஈழத்தைக் கைவிடச் சொல்லுக!" என்ற தலைப்பில் எழுதியிருக்கிறது.

இலங்கை அரசின் அனுமதியைப் பெற்றுத் தான் சொல்ஹெய்ம் வாஷிங்டன் சென்றாரா என்ற கேள்வியை எழுப்பி, கூடாரத்துக்குள் ஒட்டகத்துக்கு இடம் கொடுத்த நிலை தான் வெளிநாட்டுத் தரகர்களுக்கு இடம் கொடுத்தால் ஏற்படுமென்ற இலங்கை மக்களின் அச்சம் உறுதியாகியிருக்கிறது என்று தலையங்கத்தை ஆரம்பித்திருக்கிறது.

தயக்கத்துடன் வெளிநாட்டு அனுசரணையை ஏற்றுக் கொண்ட போது இந்தப் பிரச்சினை சர்வதேசப் பிரச்சினையாகி மேற்கிலுள்ள ஒவ்வொரு சுப்பனும் குப்பனும் நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று எங்களுக்குக் கட்டளையிடும் நிலை ஏற்படுமென்று இலங்கையர் எவரும் நிச்சயம் எதிர்பார்கவில்லையென்று தலையங்கம் ஆத்திரத்தைக் கொட்டுகிறது.

இதே சமயம் இலங்கை அரசுக்கு எதிரான பயங்கரவாதத்தை விடுதலைப் புலிகள் முற்றாகக் கைவிடும் வரை அதைத் தடைசெய்த நாடுகள் தடையை நீக்கக் கூடாதென்றும் கேட்கிறது. இலங்கை அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்தப் போவதில்லை என்றும் இலங்கையில் தனி அரசு அமைக்கும் நோக்கத்தைக் கைவிட்டு விட்டதாக மேற்கத்திய நாடுகளுக்கும், ஐக்கிய நாடுகளுக்கும் விடுதலைப் புலிகள் உறுதியளிக்க வேண்டுமென்றும் தலையங்கம் யோசனை சொல்கிறது.

மூன்றாவது அம்சமாக உத்தியோக ரீதியாக போர் நிறுத்தம் பிரகடனப் படுத்தப்பட்டதும் விடுதலைப் புலிகள் சகல ஆயுதங்களையும் நியமிக்கப்பட்ட தகுதி வாய்ந்த அதிகாரியிடம் ஒப்படைத்து விட வேண்டுமென்றும் நான்காவதாக இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஓர் உடன்படிக்கை செய்யப்படுமென்றால் அதற்கு அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய யூனியனும் கைச்சாத்திட வேண்டுமென்றும் கூறுகிறது.

இந்த நிபந்தனைகளை இந்தப் பத்திரிகை அரசுக்கு ஆலோசனைகளாகத் தெரிவித்திருப்பதாகவே தோன்றுகிறது. பிரதமர் போன்ற அரசியல்வாதிகளுக்கு இவை நல்ல துரும்பாக அமையலாம்! ஆனால் நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைப்பது தான் கஷ்டம். இந்த நாட்டில்



படிப்பகம்

www.padippakam.com



இனப்பிரச்சினை இவ்வளவு மோசமடைவதற்கும் நாடு அவல நிலையை அடைவதற்கும் அரசியல்வாதிகள் மட்டுமல்ல, பேரினவாதிகளையும் விட பேரினவாதப் பத்திரிகைகளே பெரிதும் காரணமாகும்.

உலக நாடுகள் தலையிட வேண்டி ஏற்பட்டதற்கு யார் காரணம். விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டுமென்று உலக நாடுகளுக்கு வெளிவிவகார அமைச்சர் சென்று வெற்றியீட்டி வந்தபோதெல்லாம், இவரல்லவோ சிங்கள மக்களின் பாதுகாவலர் என்று போற்றிப் பாராட்டியது இந்தப் பத்திரிகைகள் தானே.

வெளிநாடுகளிலுள்ள தமிழர்களுக்கு எதிராக அந்த நாடுகளின் அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அங்குள்ள தமிழர்கள் எல்லோரும் புலிகளின் ஆதரவாளர்களே என்றும் ஆதாரமாக அடிமுடி தேடிப் பிரசாரம் செய்தது இந்தப் பத்திரிகைகள் தானே.

வெளிநாடுகளின் தலையீடு இல்லாமல் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு 1949ம் ஆண்டிலேயே தந்தை செல்வா 'வாழு, வாழவிடு' என்ற தாரக மந்திரத்துடன் இணைப்பாட்சிக் கோரிக்கையை முன்வைத்த போதும் அதை அடைவதற்கு அகிம்சை முறையில் போராடிய போதும் அதைப் பிரிவினை என்று அரச பயங்கரவாதத்தைத் தூண்டிவிட்டது பேரினவாதப் பத்திரிகைகள் தானே?

அரச பயங்கரவாதம் தான் தமிழ் மக்கள் "பயங்கரவாதிகளாக" உருவாகக் காரணம் என்பதை இன்னமும் பேரினவாதிகளும் பேரினவாதப் பத்திரிகைகளும் உணர்ந்து கொள்ளவில்லை. நாடு பிரியக்கூடாது என்பதற்காகத் தான் தந்தை செல்வா இணைப்பாட்சி முறையைக் கோரினார். இன்றும் தலைவர் பிரபாகரன் தமிழீழத்துக்கு மாற்றாக சுயாதிபத்தியமுள்ள சமஷ்டி அமைப்பு யோசனையைப் பரிசீலிக்க முன்வந்தார்.

இதையும் கூடப் பேரினவாதிகளும், பேரினவாதப் பத்திரிகைகளும் ஏற்க மறுத்தால் யார் என்ன சொல்ல முடியும்? அந்நிய வல்லரசுகளின் தலையீட்டைத் தமிழ் மக்களும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறார்களா? உலக நாடுகள் பல படித்த பாடம் நமக்கும் படிப்பினையல்லவா?

24-05-2001



படிப்பகம்

www.padippakam.com



# எந்த ஜனநாயகம் தமிழரைக் காப்பாற்றியது?

இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் நிரந்தரமான, சுமுகமான தீர்வு காணப்பட வேண்டும் என்பதை ஒருசில பேரினவாதிகளையும் பேரினவாதப் பத்திரிகைகளையும் தவிர அனைவருமே ஒப்புக் கொண்டுள்ளனர். பேச்சுவார்த்தைகள் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சுமூகமாக நடைபெறுவதற்கு உதவியாகவும், அனுசரணையாகவும் இருப்பதற்கு நோர்வே நாட்டை இரு தரப்பும் ஏற்றுக் கொண்டன.

இதற்குப் பொறுப்பாக நோர்வே நாடு எரிக் சொல்ஹெய்ம்மை நியமித்தது. அவரும் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை திறமையாகவும் சீராகவும் நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசின் முழுமையான ஒத்துழைப்புக் கிடைக்காத போதிலும் இந்தியா, கொழும்பு, லண்டன் என்றும் வன்னிக்கும், அமெரிக்காவுக்கும் பறந்து திரிந்து பல இடையூறுகளுக்கும் நடுவே முயற்சி செய்து வருகிறார்.

பேச்சுவார்த்தைகளில் சமமாகவும் கௌரவமாகவும் கலந்து கொள்ள வேண்டுமானால் தங்கள் மீது இலங்கை அரசு விதித்துள்ள தடையை நீக்க வேண்டுமென்றும் பேச்சுக்கான நல்ல சூழலை ஏற்படுத்துவதற்குப் போரை நிறுத்த வேண்டுமென்றும் விடுதலைப் புலிகள் கோரிக்கையாக (நிபந்தனையென்று கூடச் சொல்லப்படுகிறது) தெரிவித்திருக்கின்றனர். இது இப்போது பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு ஒரு முட்டுக்கட்டையாக ஆக்கப்பட்டிருக்கிறது.

இச்சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகள் ஜனநாயக முறையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அல்லரென்றும் அவர்கள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் அல்லரென்றும் சிலர் ஒரு பிரச்சினையைக் கிளப்பியிருக்கின்றனர். இதுபற்றி அரசின் கட்டுப்பாட்டிலுள்ள ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனத்தின் ஆங்கிலத் தினசரியான 'டெய்லி நியூஸ்' பத்திரிகையும் நேற்றுத் தனது தலையங்கத்தில் நியாயமான நேர்மையான ஜனநாயக முறையிலான தேர்வில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதித்துவம் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது.

இவர்கள் சொல்லும் நேர்மையான நியாயமான ஜனநாயக முறையிலான தேர்தலில் வெற்றி பெற்றுள்ள தமிழ்ப் பிரதிநிதிகள் அத்தனை கட்சிகளின் (ஒரு கட்சியைத் தவிர) பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகள் தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகளென்றும் அவர்களுடன் அரசாங்கம் விரைவில் பேச்சு நடத்த வேண்டுமென்றும் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர். இது ஒன்றே



படிப்பகம்

www.padippakam.com



அவர்கள் பேச்சு நடத்துவதற்குத் தகுதியுடையவர்கள் என்பதை நிரூபிக்கிறது.

1994ம் ஆண்டிலும் அதன் பின்பும் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் நடந்த தேர்தல்களைக் கண்காணிப்பதற்கென அரசினால் அழைக்கப்பட்ட "நேர்மையும் அனுபவமும்" உள்ளவர்கள், வடக்குக் கிழக்கு மாகாணத்தில் நடந்த தேர்தல் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடந்ததாக உறுதிப்படுத்தவில்லை; மாறாக தேர்தல் நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடைபெறவில்லையென்றே தெரிவித்திருந்தனர். அறிக்கைகளையும் சிபார்சுகளுடன் சமர்ப்பித்துமிருந்தனர்.

இந்தத் தேர்தல்களை விடுவோம். 1956ம் ஆண்டிலிருந்து 1977ம் ஆண்டு வரை நடந்த ஜனநாயக முறையிலான தேர்தல்களில் தமிழ் மக்கள் அளித்த ஆணையை ஏற்று பாராளுமன்றத்துக்குச் சென்ற தமிழ்ப் பிரதிநிதிகள் தமிழ் மக்கள் அளித்த ஆணையை நிறைவேற்ற முடிந்ததா? அரச பாதுகாப்புப் படைகளின் அராஜக நடவடிக்கைகளைத் தடுக்க முடிந்ததா? பேரினவாதிகளாலும் ஆட்சி பீடத்திலிருந்தவர்களாலும் தூண்டிவிடப்பட்ட, சிங்களக் குண்டர்கள் தமிழ் மக்கள் மீது இன வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டு அழிக்க முற்பட்ட போது அவற்றைத் தடுத்து தமிழ் மக்களின் உயிரையும் உடமையையும் பாதுகாக்க முடிந்ததா?

அப்போது இந்த ஜனநாயகம் தமிழ் மக்களைக் கைவிட்டு விட்டதே. 1977ம் ஆண்டில் தமிழ் மக்கள் அளித்த "மீண்டும் தமிழ் மண்ணில் தமிழீழ அரசை அமைப்போம்" என்ற ஆணைக்கு என்ன நடந்தது? தமிழ் மக்களின் உயிரையும் உடமையையும் தமிழ் மண்ணிலேயே அழித்தொழிக்கும் நடவடிக்கையாக 1983ல் இனக்கலவரம் நாடு முழுவதிலும் தூண்டிவிடப்பட்டது. சிறைச்சாலையில் கூட தமிழர்களுக்குப் பாதுகாப்பிருக்கவில்லை.

இதன் பின்னர் தான் ஜனநாயகம் காப்பாற்றாது என்ற நிலையில் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி மக்களையும் மண்ணையும் காக்கப் புறப்பட்டனர். பெரும்பான்மை ஜனநாயக அமைப்பில் தமிழ் மக்களை ஜனநாயகம் காப்பாற்றாது. இதற்குத்தான் இப்போது பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டிய கட்டம் நெருங்கி வந்திருக்கிறது.

ஜனநாயகவாதிகளுடன் தான் தொடர்பு வைத்திருப்பதென்றால், பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளரிடம் உதவி கேட்டிருக்கவும் கூடாது. பெற்றிருக்கவும் கூடாதே! இலங்கையில் அமைதி ஏற்பட வேண்டுமானால் தற்காலிகமாகவாவது தடையை நீக்கி போரை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேசத் தொடங்குவதே அவசியம். அவசரமும் கூட...

26-05-2001



படிப்பகம்

www.padippakam.com



## இரு மலர்கள்

இரு பெண்கள். இரண்டும் வாடா மலர்கள் அரசியலில்!

ஒரு பெண் சிறந்த ஒரு நடிகரைத் திருமணம் செய்து பறிகொடுத்தவர்.

மற்றப் பெண் இளம் வயதிலே நாட்டியம் பயின்று தனது அம்மா வழியிலேயே சினிமாவில் நுழைந்து பல மாறுபட்ட வேடங்களில் நடித்து நடிப்புக்கு வழிகாட்டிய எம்.ஜி.ஆரைப் பின்பற்றி அரசியலுக்கு வந்தவர்.

அரசியலில் அப்பாவையும் அம்மாவையும் மிஞ்சி விட வேண்டும் என்ற துடிப்பு முதல் பெண்ணுக்கு.

அரசியலில் தனக்கு எதிரிகளே இல்லாமல் ஓரம் கட்டி ஒழித்துக் கட்டி விட வேண்டுமென்ற ஆத்திரம் இரண்டாவது பெண்ணுக்கு.



படிப்பகம்

www.padippakam.com



இரண்டு பெண்களுக்கும் வயது கிட்டத்தட்ட சமம் தான். வாழ்க்கை நிலையும் கிட்டத்தட்ட அது போன்றதே.

நாட்டில் எந்தப் பிரச்சினைக்கும் தனது தீர்ப்பும் திட்டமும் தான் தீர்வு என்பது முதல் பெண்ணுக்கு. சமாதானம் வரவேண்டுமென்றாலும் தனது திட்டத்தின் மூலமே வரவேண்டுமென்பது அவரது ஒரே தீர்வு.

தன்னைச் சிறையில் அடைத்தவன் எவனாக இருந்தாலும், எந்தப் பெரியவனாக இருந்தாலும் அவனையும், அவன் குடும்பத்தையும் சிறையில் அடைக்காமல் விடமாட்டேன் என்ற பிடிவாதத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிய திருப்தி இந்தப் பெண்ணுக்கு.

தன்னை எதிர்த்து தனது அரசின் மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வரமுனையும் எதிர்க் கட்சித் தலைவரையும், கட்சியினரையும் "பயங்கரவாதிகள்" என்று முடிச்சுப் போட்டு மூச்சுத் திணற வைப்பதென்பது இந்தப் பெண்ணின் சபதம். நாடு குட்டிச் சுவரானாலும் நானே எல்லாம் என்பது எண்ணம்.

முதல் பெண்ணின் அரசியல் ஆவேசத்தினாலும், எதிரியைத் தாக்குவதற்குப் பயன்படுத்தும் ஆயுதத்தினாலும் பாதிக்கப்பட்டு நசுங்குபவர்கள் இந்த நாட்டிலுள்ள தமிழ் மக்களே.

இரண்டாவது பெண்ணின் நடவடிக்கையால் பாதிக்கப்படுபவர்கள் கூட சினிமாவை ரசித்தது போல் இந்தக் காட்சிகளையும் ரசிக்கலாம்.

கதை வசனகர்த்தாவுக்கும், நாட்டிய நடிகைக்கும் தானே போட்டி, காட்சிகள் ரசிக்கத்தக்கவையாகவே இருக்கும்.

இரு பெண்களுக்கும் கவியரசர் கண்ணதாசன் ஏற்கெனவே சொல்லி வைத்ததை இப்போது நாம் நினைவூட்டுகிறோம்.

"ஆணவத்தோடு நிமிர்ந்து நிற்கும் தென்னை புயற்காற்றில் விழுந்து விட்டால் மீண்டும் அதனால் எழுந்து நிற்க முடிவதில்லை. நாணலோ பணிந்து, வளைந்து எந்தக் காற்றிலும் தப்பி விடுகிறது. அடக்கத்தின் மூலமாகவே தோல்விகளில் இருந்து மீண்டும் வெற்றிகரமாக முன்னேறியவர்கள் பலருண்டு".

08-07-2001



படிப்பகம்

www.padippakam.com



# தோல்லை வேண்டாம் ஆளை விடு

"ஆயுதம் ஏந்திய ஈழப் போராளிக் குழுக்களுக்கு இனித் தமிழ்நாட்டில் இடமில்லை" என்று தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

மீண்டும் தமிழ்நாட்டில் தமிழ்குழுக்கள் முகாம்கள் அமைக்கவோ ஆயுதப் பயிற்சி அளிக்கவோ இடமளிக்கப்பட மாட்டாதென்றும் முதல்வர் கருணாநிதி கூறியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் குழுக்களுக்கிடையே ஏற்படக்கூடிய மோதல்களைத் தவிர்த்துக் கொள்வதும் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதும் தான் தமது இந்த முடிவுக்குக் காரணம் என்றும் முதல்வர் விளக்கம் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்நாட்டில் ஈழப்போராளிக் குழுக்களிடையே மோதல் ஏற்படுவது மட்டுமல்ல சூளைமேட்டில் நடந்த சம்பவம் மற்றும் சில இடங்களில் நடைபெற்ற கொள்ளைகள் போன்றவைகளும் தமிழ்நாடு அரசுக்குத் தேவையற்ற தலையிடி.

ஈழத்துக்கு இந்திய இராணுவம் அமைதிப்படை என்ற பெயரில் தமிழ்நாட்டிலுள்ள அகதிகளை ஈழத்துக்குத் திருப்பி அனுப்புவதாக அறிவித்துக் கப்பல்களில் பலர் கொண்டு வரப்பட்டனர்.

வீதிகள் பொதுமக்களின் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டு இந்த "அகதிகள்" அந்தரங்கமாகப் பாதுகாப்பாக யாழ். இந்துக் கல்லூரிக்குக் கொண்டு வரப்பட்டனர்.

தமிழ்நாட்டிலுள்ள ஈழ அகதிகள் யாவரும் திருப்பி அனுப்பப்பட்டு விட்டதாக இந்திய வானொலி அச்சமயம் அறிவித்தது.

உண்மையில் இங்கு கொண்டு வரப்பட்டு இறக்கப்பட்டவர்கள் யாவரும் ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எப், ரெலோ, புளொட் ஆகிய குழுக்களைச் சேர்ந்தவர்களே.



படிப்பகம்

www.padippakam.com



இவர்களுக்கு ஆயுதங்களும் வழங்கி பாதுகாப்பும் கொடுத்து விடுதலைப் புலிகளுடன் மோதுவதற்குப் பயிற்சியுமளிக்கப்பட்டது.

இந்த முயற்சியும், ஆட்சி பீடத்தில் தமது கைப்பாவையை வைத்து ஆட்டுவிக்கலாமென்ற டில்லி தர்பாரினதும் உளவுப்பிரிவு 'றோ'வினதும் கனவு இப்போது பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போய்விட்டது.

இந்நிலையில் தாங்களே சுமந்த பொறுப்பைத் தாமே கொண்டு போய் இறக்க வேண்டிய கடமை 'றோ'வுக்கும் இந்திய இராணுவத்துக்குமிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டன.

இதனால் தான் இந்தக் குழுவினரையும் குடும்பத்தினரையும் கப்பல்களில் ஏற்றித் தமிழ்நாட்டில் இறக்கி விடலாம் என்று கருதின.

'சூடு கண்ட பூனை' முதல்வர் கருணாநிதி விழித்துக் கொண்டார். சரியான முடிவை மேற்கொண்டார்.

மண்டபம் பகுதியில் சமீபத்தில் நடந்த சூட்டுச் சம்பவத்தை அடுத்து "தமிழ்நாட்டிலிருந்து ஈழப்போராளிக் குழுக்களை திருப்பி அனுப்ப வேண்டும்" என்று குரல் கொடுத்த முன்னாள் மத்திய அமைச்சர் ப..சிதம்பரம் "ஈழத்து அகதிகளை இறங்க விடாமல் கப்பல்களை கருணாநிதி திருப்பி அனுப்பியது தவறு" என்று கண்டித்திருக்கிறார்.

இந்தக் குழுக்கள் தமிழ்நாட்டில் இறங்கினால் இவர்களைக் காங்கிரஸும் ஜெயலலிதாவின் அண்ணா தி.மு.கவும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி கருணாநிதியின் ஆட்சியைக் கவிழ்க்க முனைவார்களென்பதும் கருணாநிதிக்குப் புரியாததா?

"அக்கரையிலிருந்து கொண்டு மீண்டும் ஈழத் தமிழர்களுக்காகப் போராடுவோம்" என்று வரதராஜப்பெருமாள் கூறியிருப்பதும், இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து வெளியேறினாலும் அரசியல் அரங்கை விட்டு வரதராஜப்பெருமாள் விலகமாட்டாரென்றும் தாங்கள் பெருமாளைக் கைவிடாமல் அவரைக் கைகொடுத்துக் காப்பாற்றப் போவதாகவும் 'றோ' என்ற இந்திய உளவுப் பிரிவு தெரிவித்திருப்பதும் சிந்திக்க வேண்டியவை.

கலைஞர் கருணாநிதி தற்காலிகமாகத் தப்பிக் கொண்டார்.

12-03-1990



படிப்பகம்

www.padippakam.com



# சலோ சலோ ஜல்தி சலோ!

வடக்கு மாகாணத்திலிருந்து இந்திய இராணுவம் இன்று முற்றாக வெளியேறவிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இன்றுடன் வெளியேறிவிடும் என்று நம்புவோம், எதிர்பார்ப்போம்.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் சீனன்குடாவில் மட்டுமே இப்பொழுது இந்திய இராணுவம் இருக்கிறது. இம்மாதம் முப்பத்தோராம் தேதிக்குள் இங்கிருந்தும் இந்திய இராணுவம் முற்றாக வெளியேறி விடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மாதம் முப்பத்தோராம் தேதிக்குள் இலங்கையிலிருந்து இந்திய இராணுவம் முற்றாக விலக்கிக் கொள்ளப்படுமென்று இந்தியப் பிரதமர் வி.பி.சிங் மட்டுமல்ல இந்தியப் பாராளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்து நிகழ்த்திய அரசின் கொள்கை விளக்க உரையில் இந்திய ஜனாதிபதி ஆர்.வெங்கட்ராமனும் உறுதிபடத் தெரிவித்திருக்கிறார்.

போகிற போக்கில் பார்த்தால் இன்னும் சில தினங்களுக்குள்ளேயே இந்திய இராணுவம் இங்கிருந்து முற்றாக வெளியேறி விடுமென்றே தோன்றுகிறது.

எழுபத்தையாயிரத்திலிருந்து ஒரு இலட்சம் துருப்புக்கள் வரை நிலை கொண்டிருந்த ஈழத்தில் இன்று ஆயிரத்தைந்நூறு துருப்புக்கள் தான் இருப்பதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும் வெளிவிவகார அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தினா கூறியிருக்கிறார்.

இலங்கையில் ஜே.ஆர்.தலைமையிலான சிறிலங்கா அரசின் படைகள் உரிமைக்காக போராடிய போராளிகளை அடக்கி ஒடுக்குவதாகக் கூறிக் கொண்டு பொதுமக்களையே அழித்து ஒழிக்கும் செயல்களில் ஈடுபட்ட போது இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நல்லதோர் நிரந்தரத் தீர்வு காண்பதற்கு நடுவராக நின்று பணியாற்ற அப்போது பிரதமராக இருந்த அன்னை இந்திரா முன் வந்தார்.

சர்வகட்சி மாநாடென்றும் வட்டமேஜை மாநாடென்றும் காலத்தை இழுத்தடித்த ஜே.ஆர்.அன்னை இந்திரா மறைந்ததும் பிரதமராக வந்த ராஜீவ் காந்தியை தான் நினைத்தபடி ஆட்டுவித்தார்.

நடுவராக நின்ற இந்தியா ராஜீவின் தலைமையில் எதிரி பக்கம் சாய்ந்து தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படத் தொடங்கியது.



படிப்பகம்

www.padippakam.com



சிங்களப் படைகளுக்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் மோதல் ஏற்படாமல் தடுப்பதற்கு என்று ஈழத்துக்கு வந்தது அமைதிப்படை என்ற இந்திய இராணுவம்.

நாட்டில் அமைதி நிலவுவதற்கு ஆயுதங்களைக் களைய வேண்டு மென்று கூறிப் போராளிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைய வந்த இந்திய இராணுவம் நாட்டை விட்டே ஓடி மறைந்திருந்தவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கிப் பாதுகாப்பளித்து மக்களுடன் நின்ற போராளிகளுடன் மோதலை ஏற்படுத்தியது.

இது மட்டுமா போராளிகள் சிறைப்பிடித்த தங்கள் சிப்பாய்களை போராளிகளுடன் பேச்சு நடத்தி பகிரங்கமாகக் கையேற்றுக் கொண்ட மறுநிமிடம் "எங்கே புலிகள்" என்று பொதுமக்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கிய "சுத்த வீரர்கள்" தான் அமைதிப்படை என்ற இந்திய இராணுவத்தினர்.

மருத்துவமனைகள், ஆலயங்கள், தேவாலயங்கள், மசூதிகள், பள்ளிக் கூடங்கள் சிங்கள இராணுவமே நுழைய அஞ்சிய இடங்கள். ஆனால் இந்திய இராணுவம் இந்த இடங்களுக்குள்ளும் நுழைந்து பெண்கள் குழந்தைகளைக் கூட விட்டு வைக்காமல் கண்மூடித்தனமாகச் சுட்டுக் கொன்றது.

சித்திரவதை, கற்பழிப்பு, கொலை இலங்கை மக்கள் கண்டும் கேட்டுமறி-யாதளவிற்கு இந்திய இராணுவம் சாதனை செய்திருக்கிறது.

கிழக்குப் பாகிஸ்தான் பங்களாதேஷாகப் பிரிந்த போது அதற்கு மூல காரணமாக இருந்த இந்திய இராணுவம் அங்கும் இதே போன்று அட்டூழியங்கள் புரிந்ததும் உடனடியாக அதைத் திருப்பி அழைத்தார் அன்னை இந்திராகாந்தி.

இன்றும் அந்த அட்டூழியத்தை பங்களாதேசம் மறக்கவில்லை. ஈழத்தமிழ் மக்களும் டில்லி தர்பாரையும் இந்திய இராணுவத்தையும் என்றும் மறக்க மாட்டார்கள். அட்டூழியங்கள் சுவடுகள் அழியாமல் கிடக்கின்றன.

இதனால் தான் இந்தியப்படையை போங்கள் விரைந்து போங்கள் என்று கூறுகிறோம்.

சலோ, சலோ, ஜல்தி, சலோ!

15-03-1990 (ஈழநாதம்)



படிப்பகம்

www.padippakam.com



# சந்திரிகா தான் பதில் சொல்ல வேண்டும்

நிர்ப்பந்தத்தினால் அமைதியைக் காப்பாற்ற முடியாது. அது ஒருவரை மற்றவர் புரிந்து கொண்டால் தான் முடியும். அல்பர்ட் ஐன்ஸ்டின் என்ற அறிஞர் உதிர்த்த கருத்துக்கள் இவை. இந்த முத்துக்கள் இன்று நம்நாட்டுக்கு வெகு பொருத்தம். இலங்கை சுதந்திரம் அடைந்த 1948ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்களின் தாயகத்தின் ஒரு பகுதியான கிழக்கு மாகாணத்தில் உணவில் தன்னிறைவு காண்பதற்கு என்ற பெயரில் அரச ஆதரவுடன் சிங்களக் குடியேற்றம் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டது. இக் குடியேற்றத்தினால் இன்று கிழக்கின் பெரும்பாலான நிலம் சிங்களப் பகுதிகளாக்கப்பட்டு விட்டது.

விவசாய விருத்தி என்ற பெயரில் கிழக்கிலங்கை நிலம் அபகரிக்கப்பட்டு வருவது இன்று தொடர்ந்து கொண்டிருக்கிறது. கிழக்கில் தமிழ் மண்ணைப் பறித்த அதே சமயம், தமிழ் மக்களின் மற்றும் அடிப்படை உரிமைகளும் படிப்படியாகப் பறிக்கப்பட்டன. ஆட்சிக்கு வந்த அரசுகள் பேரினவாதிகளின் பின்னணித் திட்டங்களுடன் இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதை எதிர்த்தும் தமிழ் மண் பறிப்புக்கு



படிப்பகம்

www.padippakam.com



எதிராகவும், இழந்த உரிமைகளை மீளப் பெறுவதற்காகவும் தமிழ் மக்கள் காந்திய வழியில் போராட்டங்கள் நடத்தினர். ஜனநாயக வழியில் தங்கள் உரிமைகளை மீளப் பெறுவதற்கு தேர்தல்களில் தமிழ்த் தலைவர்கள் தமிழ் மக்களின் ஆணையையும் பெற்று வந்தனர்.

ஆனால் சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்களின் நிலத்தையும் உரிமைகளையும் பறித்தெடுத்ததுடன் இலங்கை சுதந்திரமடைந்து பத்தாவதாண்டில் அதாவது 1958ஆம் ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டு வரை, காலத்துக்குக் காலம் தமிழ் மக்களுக்கு எதிராக இனக்கலகத்தைத் தூண்டி தமிழினத்தின் உயிர், உடைமை, சொத்துக்கள் அழிப்பை மேற்கொண்டனர். இந்த நிலையில் தான் ஈழத் தமிழ் இளைஞர்கள் தம்மையும் மக்களையும் பாதுகாக்க ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கினர். ஆயுதம் ஏந்திய இளைஞர்கள் பலர் குழுக்களாய்ப் பிரிந்தும் இக்குழுக்களுக்கு உதவியளித்தவர்களால் பிரிக்கப்பட்டும் நின்றனர்.

பின்னர் இக்குழுக்களில் சில திசை மாறின.

மண்ணையும் மக்களையும் காப்பதற்காக ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கிய இளைஞர்களால் நாட்டில் காலத்துக்கு காலம் ஆட்சி பீடத்திலுள்ளவர்களின் ஆதரவுடன் தமிழ் மக்களுக்கு எதிராக ஏவிவிடப்பட்ட இனப்படுகொலைகளையும் கலகத்தையும் தடுத்து நிறுத்தத் தான் முடிந்தது.

இழந்த உரிமைகளை மீட்பதற்காக தொடர்ந்து போராடுவதைத் தவிர வேறு வழியில்லை. காந்திய வழியில் நடந்த அகிம்சைப் போராட்டம் ஆட்சியாளர்களினாலும் பேரினவாதிகளினாலும் ஆயுதம் கொண்டு அடக்கப்பட்டதுடன் ஜனநாயகத்தினால் நிராகரிக்கப்பட்டதினாலும் தமிழ் இளைஞர்களுக்கு தமிழ் மக்களையும் மண்ணையும் காப்பாற்றுவதற்கு ஆயுதப் போராட்டத்தை தவிர வேறு வழியிருக்கவில்லை.

இதைத்தான் ஜே.ஆரிலிருந்து இன்று சந்திரிக்கா வரை பயங்கரவாதம் என்று உலக நாடுகளில் தனது வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் மூலம் பிரச்சாரம் செய்து கோடிக்கணக்கில் ஆயுதங்களையும் போர்த் தளபாடங்களையும் இறக்குமதி செய்து அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. இந்நிலையில் தான் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு சுமுகமாக காணப்பட வேண்டும் என்ற யோசனை தெரிவிக்கப்பட்டது. மூன்றாம் தரப்பு நாடு ஒன்றின் உதவியுடன்



படிப்பகம்

www.padippakam.com



பேச்சு நடத்த விடுதலைப் புலிகள் கூறியதையும் அரசு ஒப்புக் கொண்டது. நோர்வே நாட்டை மூன்றாம் தரப்பு அனுசரணையாளராக இரு தரப்பும் ஏற்றுக் கொண்டன.

இதன் பின்னர் பேரினவாதிகள் எதிர்ப்புடன் ஆட்சி பீடத்திலுள்ளவர்களும் போர் மூலமே தீர்வு காண முனைகின்றனர். நோர்வே தனது சமாதான முயற்சிகளை மேற்கொண்டிருக்கையில் சாதகமான சூழ்நிலையில் பேச்சு நடாத்த விடுதலைப் புலிகள் ஒருதலைப் பட்சமாக போர் நிறுத்தம் செய்து அரசும் பின்பற்றும்படி கேட்டும் அரசு போரைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. விடுதலைப் புலிகள் நிபந்தனையற்ற பேச்சுக்குத் தயாராக சமாதான சூழ்நிலையை உருவாக்கிப் போர் நிறுத்தம் செய்து வருகின்றனர்.

இரண்டாயிரத்து ஓராண்டு பிறந்துள்ளது. இந்த ஆண்டிலாவது நாட்டில் போர் ஓய்ந்து அமைதி நிலவுமா என்றும் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்தை மூலம் தீர்வு கிடைக்குமா என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

நோர்வேயின் சமாதான முயற்சிக்கு பூரண ஒத்துழைப்புக் கொடுக்காமல் சமாதானப் பேச்சுவார்த்தை நடந்தாலும் போரும் தொடரும் என்று கூறி அரசு போரை தொடர்ந்து கொண்டிருக்கிறது புத்தாண்டுச் செய்தியில் ஜனாதிபதி சந்திரிக்கா சகல இனத்தவர்களுக்கும் இந்த நாட்டில் சமாதானமாகவும் அமைதியாகவும் சகோதரத்துவத்துடனும் வாழக் கூடியதான ஒரு சூழலை உருவாக்கிக் கொடுப்பதே தனது அரசின் ஒரே இலட்சியமாகும். என்று கூறியிருக்கிறார்.

இருபதாம் நுற்றாண்டில் நாம் எதிர்கொண்ட கசப்பானதும் நெருக்கடியானதுமான பயணம் இன்று பிறக்கும் இருபத்தோராம் நூற்றாண்டிலும் தொடரக் கூடாது. அன்பு கருணை சமத்துவக் கோட்பாடுகளை ஒவ்வொருவரும் கைக்கொள்வதன் மூலம் எம்முன்னுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வை எட்ட முடியும் என்றும் சந்திரிக்கா அம்மையார் கூறியிருக்கிறார். புரிந்துணர்வு இல்லாமல் இது சாத்தியமா? போர் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவித்து வரும் சந்திரிக்கா அரசு எப்படி அன்பு கருணை சமாதானத்தைக் கைக் கொள்ள முடியும்? இலங்கை ஜனாதிபதி சந்திரிக்கா தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

02-01-2001



படிப்பகம்

www.padippakam.com



## பயங்கரவாதமா: இன ஒழிப்பா?

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான சுமுகமான தீர்வு காணப்பட வேண்டுமென்றும், பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்றும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வலுப்பெற்ற அபிப்பிராயத்தைத் தொடர்ந்து, போரில் ஈடுபட்ட இரு தரப்பும் பேச்சு நடத்தச் சம்மதித்தன. இதற்கு முன்னரும் பேச்சுவார்த்தைகள் நடந்தாலும் உருப்படியாக எதுவும் நடைபெறாததால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்த்தத்தின் மூலமே பேச்சுக்கள் நடைபெற வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கூறினர்.

இதற்கு அரசும் சம்மதித்தது. பின்னர் நோர்வே நாட்டை இரு தரப்பும் பேச்சுவார்த்தைக்கு அனுசரணையாளராக ஒப்புக் கொண்டன. இலங்கையில் இனப் பிரச்சினையில்லை பயங்கரவாதப் பிரச்சினை தான் இருக்கிறது என்று ஆட்சிக்கு சுலபமாக வந்த ஒருவர் கூறினார். இதைத் தொடர்ந்து இங்கு பயங்கரவாதப் பிரச்சினை தான் இருக்கிறதென்பதை உலகம் முழுக்கப் பிரச்சாரம் செய்யும் பொறுப்பு இப்பொழுது இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது சில பத்திரிகை யாளர்களும் கூட இதையே தலையாய கடனாகக் கொண்டு பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு வேண்டும் என்று முதலில் சொன்னவரும் ஜனாதிபதி சந்திரிகா தான். விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை ஒழித்துக் கட்டினாலும் இனப்பிரச்சினை தீராத வரை மேலும் பல பிரபாகரன்கள் தோன்றுவார்கள் என்று சொன்னவரும் சந்திரிக்கா அம்மையாரே. தலைவர் பிரபாகரனை இந்திய விடுதலைவீரன் பகத்சிங்குடன் ஒப்பிட்டுச் சொன்னவரும் சந்திரிகா தான்.

பேரினவாதிகள் இலங்கையில் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அடிமைகளாக வைத்திருக்க வேண்டும் . அல்லது தமிழ் இனத்தை அழித்து ஒழிக்க வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கின்றனர். தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் தலைவர் பிரபாகரனையும் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தி தமது இனப்படுகொலையைத் தொடர்வதற்கு முன் வந்தனர். ஆட்சி அதிகார ஆசை கொண்ட சந்திரிகா அம்மையாரும் பேரினவாதிகள் வலையில் சிக்கினார். இலங்கையில் சமத்துவம் சமாதானம் சோஷலிசத்துக்காகவே தமது வாழ்நாளை அர்ப்பணித்தவர்கள் என்று கூறியவர்களும் கருதப்படுபவர்களும் பின்னர் இனவாதிகளாகவும், சிங்கள வெறியர்களாகவும் மாறியதை இந்த நாடே அறியும். தலைவர் பிரபாகரனை மாவீரன் பகத்சிங்குடன் ஒப்பிட்டுக் கூறிய அதே சந்திரிகா பின்னர் பிரபாகரனை கொடுமையான மனிதர் என்றும் வர்ணித்திருக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com



ஒரு பிரபாகரனை அழித்தால் பல பிரபாகரன்கள் தோன்றுவார்கள் என்று சொன்ன சந்திரிகா பின்னர் விடுதலைப் புலிகளையும் பிரபாகரனையும் அழித்தொழிக்கும் வரை ஓயப் போவதில்லை என்றும் கூறியிருக்கிறார்.

பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு சுமுகமான நிரந்தரமான தீர்வு காணப்பட வேண்டும் என்று முதலில் யோசனை கூறிய சந்திரிகா இப்பொழுது பேச்சுவார்த்தைக்கு சாட்டுச் சொல்லி காலத்தைக் கடத்துகின்றார். பேச்சுவார்த்தை நடந்தாலும் போரும் தொடரும் என்று அவரே சொல்கின்றார். போர் நிறுத்தமோ வடக்கிலும் கிழக்கிலும் ஆக்கிரமிப்புச் செய்துள்ள படைகளை விலக்கிக் கொள்வதோ இது பற்றிய பேச்சுக்கோ இடமில்லை என்றும் கூறுகிறார்.

விடுதலைப் புலிகள் ஒருதலைப் பட்சமாக போர் நிறுத்தம் செய்தாலும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாகத் தெரிவித்தாலும் இதற்கு சந்திரிகா செவிசாய்ப்பதாகத் தெரியவில்லை. இலங்கை அரசும் போர் நிறுத்தம் செய்து இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்கு உட்பட்ட சமாதானத் தீர்வு காண பேச்சுவார்த்தை நடத்த அரசு முன்வர வேண்டும் என்று ஐரோப்பிய நாடுகள் அழுத்தம் கொடுத்தாலும் சந்திரிகா கருத்துக்கெடுப்பதாகத் தெரியவில்லை.

அமைச்சர் கதிர்காமர் அடிக்கடி இந்தியாவுக்குச் சென்று வருவதன் விளைவோ காஷ்மீரில் ஒருதலைப் பட்சப் போர் நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தியிருக்கும் இந்திய அரசு, இலங்கை அரசு போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும் என்று யோசனை கூடச் சொல்ல முன்வரவில்லை. ஆனால் இலங்கையில் மீண்டும் அமைதி ஏற்படுவதற்கோ இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண்பதற்கோ பேரினவாதிகள் தயாராக இல்லை என்பதும் சந்திரிகா அம்மையாரும் இதனையே ஏற்றுக் கொண்டிருப்பதும் தெரிகிறது.

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை, பயங்கரவாதப் பிரச்சினை தான் இருக்கிறது என்று சொல்லி, இலங்கையில் தமிழ் இனத்தையே அழித்து ஒழிப்பதும் சிறுபான்மை இனங்களை அடக்கி ஒடுக்கி இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதை உறுதியாக்குவதும் தான் சிங்களப்பேரினவாதிகளி-னதும் சந்திரிக்கா அரசாங்கத்தினதும் ஒரே கொள்கையாகவும் திட்டமாகவும் தோன்றுகிறது.

இன்று இன ஒடுக்குமுறைக்கும் இன ஒழிப்புக்கும் துணை நிற்பவர்கள் நாளை கவலைப்பட நேரிடலாம். இது வரலாறு காட்டிய படிப்பினையாகும்.

03-01-2001



படிப்பகம்

www.padippakam.com



## இனியும் சந்தர்ப்பம் வருமா?

விடுதலைப் புலிகளின் போர் நிறுத்தத்தை ஏற்று அரசும் போர் நிறுத்தத்தைப் பிரகடனம் செய்து அமைதிப் பேச்சுவார்த்தை விரைவில் நடைபெறுவதற்கு வழிவகுக்க வேண்டும். இப்படி உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் கோரிக்கைகளும் அழுத்தங்களும் அதிகரித்து வரும் வேளையில் கடற்படையின் புதிய தளபதியாகப் பதவியேற்றுள்ள வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி உலகில் மற்றும் பல நாடுகளின் அனுபவத்திலிருந்து ஒரு கெரில்லா யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு சமாதானத் தீர்வே அவசியம் என்று கூறியிருப்பது சிந்தனைக்குரியது.

விடுதலைப் போராளிகள் இன்று கெரில்லாப் போரில் மட்டுமல்ல மரபு முறைப் போரிலும் கைதேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்று போர் முறை தெரிந்தவர்கள் சொல்கிறார்கள். நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாக சமாதானத் தூதுவரிடம் மட்டுமல்ல கொள்கைப் பிரகடனமாக நிகழ்த்தப்படும் மாவீரா் தின உரையிலும் வெளியிட்டு உலகமே மகிழ்ச்சி கலந்த அதிா்ச்சியில் திளைக்க வைத்ததும் விடுதலைப் புலிகள் தாம்.

புதிய கடற்படைத் தளபதியாக பதவியேற்கும் வைஸ் அட்மிரல் சந்தகிரி இலங்கைப் படை ஒன்றின் தளபதி என்ற முறையில் கடற்படை இப்போது நவீன போர் கப்பல்களாலும் படைச் சாதனங்களாலும் மிகுந்த வலிமை பெற்றிருக்கிறது என்றும் கடற்புலியை பெரும்பாலும் முற்றாகத் தோல்வியடையச் செய்திருப்பதாகவும் பெருமையுடன் கூறியிருக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com



சமீபத்தில் தரைப்படையின் தளபதியாகப் பதவியேற்ற லெப்டினன்ட் ஜெனரல் பலகல்ல போல் விடுதலைப் புலிகளை அழித்து ஒழிப்போம் என்று கடற்படைத் தளபதியாகப் பதவியேற்றுள்ள வைஸ் அடமிரல் தயா சந்தகிரி சவால் விடவில்லை என்றாலும் முப்படைகளின் இணைந்த முயற்சியினால் இலங்கையில் போருக்கு முடிவு கட்டலாம் என்றும் கடற்படைத் தளபதி சொல்லியிருக்கின்றார்.

சமாதானத் தீர்வு தான் கெரில்லாப் போருக்கு முடிவு என்பதை உலக நாடுகள் பலவற்றின் அனுபவத்திலிருந்து கண்ட உண்மை என்பதை கடற்படைத் தளபதி எடுத்துச் சொல்லியிருப்பது இத்தருணத்தில் அவரது துணிச்சலை எடுத்துக் காட்டுகிறது. பேச்சுவார்த்தை மூலம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதை கடந்த சில காலமாகக் கூறி வந்த இலங்கை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க சமாதானப் பேச்சுக்கான முயற்சிகள் நெருங்கி வந்து கொண்டிருக்கையில் போரைத் தொடர்வது என்று பிடிவாதம் பிடிப்பது எதற்காக?

ஆயுத வியாபாரிகளும் ஆயுதம் உற்பத்தி செய்யும் நாடுகளும் ஆயுத வியாபாரத்தில் பேரம் செய்யும் தரகர்களும் இலங்கையில் போர் தொடர வேண்டும் என்று விரும்புகிறவர்கள். ஆயுத பேரத்தில் ஊழல் மலிந்துள்ளதாக ஏற்கெனவே செய்திகள் வெளிவந்திருப்பதுடன் இது பற்றிய விசாரணையும் நடைபெற்று வருகிறது எனக் கூறப்படுகிறது.

ஆயுத வியாபாரிகள், ஆயுத உற்பத்தி நாடுகள், ஆயுதப் பேரத்தில் ஈடுபடும் தரகர்கள் ஒருபுறமும், இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் சொந்தம் என்றும் உரிமைகளுக்காக குரல் எழுப்பும் தமிழ் இனத்துக்கு இடமேயில்லை என்றும் கூக்குரலிடும் சிங்கள பௌத்தப் பேரினவாதிகள் ஒருபுறத்திலுமாக போர் தொடரப்பட வேண்டும் என்று விரும்புகின்றனர்.

இவர்கள் விடுதலைப் புலிகள் போரில் தோல்வியடைந்து வருவதாகவும், அவர்களுக்குப் போரிட ஆளில்லை என்றும், அவர்களுக்கு ஆயுதங்கள் வரும் வழிகள் எல்லாம் அடைபட்டு விட்டதாகவும், உரத்த குரலில் சத்தமிடுகின்றனர். சிங்களப் பேரினவாதப் பத்திரிகைகளும் கூட இதையே தான் எடுத்துக் காட்டி வருகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



இராணுவமும் அரசும் சொல்லும் கணக்கின்படி பார்த்தால் முன்னாள் விமானப் படைத் தளபதி ஹரி குணத்திலகா சமீபத்தில் சுட்டிக் காட்டியபடி இது வரை விடுதலைப் புலிகள் முற்றாக அழிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இப்பொழுது விடுதலைப் புலிகள் தாமாகவே முன் வந்து போர் நிறுத்தம் செய்துள்ள சமயத்தில் அரியாலையைப் பிடித்து விட்டோம் என்றும் மட்டுவில் சாவகச்சேரி ஆகியவற்றையும் சேர்த்து 139 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைத் தாங்கள் பிடித்து விட்டதாகவும் கூறுகின்றனர். அரசுதரப்பினர் வெற்றிப் பெருமிதம் கொள்கின்றனர்.

மாதக் கணக்கில், ஆண்டுக் கணக்கில் போராடி பரந்தன் கிளிநொச்சி, ஒட்டு சுட்டான், முல்லைத் தீவு, ஆனையிறவு, பளை எனப் பல இடங்களையும் அரசு படையினர் பிடித்து அவற்றைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும் படை பலத்தையும் பணபலத்தையும் செலவிட்டனர்.

இப்பகுதிகளை விடுதலைப் புலிகள் ஒரு சில தினங்களுக்கிடையிலேயே மீண்டும் கைப்பற்றினர் என்பதை அரசும் படையினரும் இன்று சுலபமாக மறந்து விட்டனர். இப்பொழுது படையினர் மீண்டும் பிடித்துள்ள பகுதிகளில் மக்கள் இல்லை என்பதும் இடிந்த உடைந்த கட்டிடங்களும் எரிந்து போன குடிசைகளும் தானுள்ளன என்பதும் சிங்களப் பொது மக்களுக்குத் தெரியாது.

போர் வேண்டும் என்று கூக்குரலிடுபவர்கள் போர் முனைக்குச் சென்றதில்லை, உயிர்ப் பலியும் கொடுத்ததில்லை. போரில் தங்கள் அப்பாவிப் பிள்ளைகளைப் பலிகொடுத்த கிராமத்து சிங்கள மக்கள் போர் முடிய வேண்டும் என்றே வேண்டுகின்றனர். போருக்குப் பெரும் தொகைப் பணத்தைச் செலவிடுவதினால் மக்கள் சொல்லொண்ணாக் கஷ்டமுறுகின்றனர். பல குடும்பங்கள் பட்டினி கிடக்கும் நிலையிலுள்ளனர். பேரினவாதிகளும் பேரினப் பத்திரிகைகளும் இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் சிங்களப் பொது மக்களுக்கு இன வெறியை ஊட்டி வயிற்றை நிரப்பப் போகிறார்கள்?

இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாட்டில் போரை நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வழிவகுத்து இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண சந்திரிகா அம்மையார் இனியும் காலம் தாழ்த்தாது முன்வர வேண்டும். இல்லையேல் இனியும் இப்படியானதொரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்காமல் போய்விடும்.

04-01-2001



படிப்பகம்

www.padippakam.com



# எங்கே நீதி?

மாமனிதர் குமார் பொன்னம்பலம் இவ்வுலகில் இருந்து அநியாயமாகப் பறிக்கப்பட்டு இன்றுடன் ஓராண்டு முடிவடைகிறது.

இன்னமும் இதைச் செய்த அக்கிரமக்காரர்கள் அல்லது கொலைகாரர்கள் கண்டு பிடிக்கப்படவில்லை. அடையாளம் காணப்படவும் இல்லை. துப்புத் துலக்குவதில் சூரப் புலிகள் என்று சில கொலைகளில் உடனடியாகவே கண்டு பிடிப்புச் செய்து வெளியிட்டு பெயர் பெற்றவர்கள் இதுவரை குமார் பொன்னம்பலத்தின் கொலையில் முன்னேற்றம் காண முடியாதிருப்பது ஆச்சரியம் தான்.

இளம் பெண்கள் இலங்கையின் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்தவர்களால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுக் கொடூரமாக கொலை செய்யப்பட்டதும் அந்த உடல்களையே மறைத்து தப்பிக் கொள்ளப் பார்த்ததுமான சம்பவங்கள் பல. இந்த அக்கிரமங்களை வெளிக் கொணர்ந்து இப்படுபாதகச் செயல்களில் ஈடுபட்டவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி குமார் பொன்னம்பலம் வாதாடித் தண்டனை பெற்றுக் கொடுத்தவர்.



படிப்பகம்

www.padippakam.com



இதற்கு யாழ்ப்பாணத்தில் கிருஷ்சாந்தி என்ற இளம் மாணவிக்கும் அவரது உறவினர்களுக்கும் நடந்த அக்கிரமங்கள் ஒரு உதாரணம். கொக்கட்டிச்சோலையை அரச படையினர் கொலைக் களமாக்கிய சம்பவத்தில் எவருமே நீதிமன்றத்தில் வாதாடுவதற்கு முன்வராத போது துணிந்து முன்வந்து வாதாடியவர் குமார் பொன்னம்பலம்.

இப்படி இன்னும் பல வழக்குகளை எடுத்துச் சொல்லலாம். இலங்கையில் தமிழ் மக்கள் அரசாங்கத்தினாலும் அரச படைகளினாலும் அடக்கி ஒடுக்கப்படுவதை அரசாங்க ஊடகத்துறையும் ராஜீயத்துறையும் மறைத்தும் திரித்தும் பிரசாரம் செய்து வந்த போது அவற்றை எதிர்த்து உண்மையை உலகிற்கு எடுத்துக் காட்டியவா் குமார் பொன்னம்பலம்.

தமிழ் மக்களையும் அவர்களது சொந்த மண்ணையும் பாதுகாப்பதற்காக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவதை ஆட்சியில் உள்ளவர்கள் பயங்கரவாதம் எனக் கொச்சைப்படுத்தி பிரசாரம் செய்த போது அது பயங்கரவாதமல்ல விடுதலைப் போராட்டம் என்று உலகிற்கு ஓங்கி உரத்த குரலில் உரைத்தவர் குமார் பொன்னம்பலம்.

இலங்கை ஆட்சியாளர்களுடன் புரையோடிப் போன இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் மட்டும் தீர்வு காண முடியாதென்பதை தெரிந்து கொண்ட குமார் பொன்னம்பலம் தனக்கென ஒரு தனிவழியை ஈழத்தமிழரின் அரசியல் பாதையில் வகுத்தார். ஈழத்தமிழர்கள் ஒரு தனித்தேசிய இனம், அவர்களுக்கென வடக்கு கிழக்கு மரபு வழித் தாயகமாக உள்ளது, ஈழத்தமிழருக்கு சுய நிர்ணய உரிமை இருக்கிறது என்பதை உலகிற்கு எடுத்துக் கூறியவர் குமாா் பொன்னம்பலம்.

தமிழ் மக்களின் தாயக விடுதலைப் போராட்டத்தை சர்வதேச அரங்கில் எடுத்துரைத்து நியாயத்துக்காக வாதாடியவர் குமார் பொன்னம்பலம்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலம் தமிழ் இளைஞர்கள் காரணமின்றி க்ண்டபடி கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைத்து சித்திரவதை செய்யப்பட்ட போது அவர்களுக்காக நீதிமன்றங்களில் வாதாடிப் பலருக்கும் விடுதலை பெற்றுக் கொடுத்த பெருமையும் குமார் பொன்னம்பலத்தையே சாரும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மத்தியிலும் இன ஒழிப்புக்கு எதிராக பகிரங்கமாகவே மும்மொழிகளிலும் ஊடகங்கள் வாயிலாகவும் நீதி கேட்டு



படிப்பகம்

www.padippakam.com



குரல் எழுப்பினார். தென்னாபிரிக்காவில் நடந்த பொது நலவாய நாடுகளின் உச்சிமாநாட்டைத் தொடர்ந்து அளித்த ஒரு பேட்டியில் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா தமிழ் மக்கள் வந்தேறுகுடிகள் என்று தெரிவித்ததை கடுமையாகச் சாடிய குமார் பொன்னம்பலம் சந்திரிகாவை பகிரங்க விவாதத்துக்கு வரும்படி சவால் விட்டிருந்தார்.

அஞ்சா நெஞ்சுடன் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்துக் கொண்டி-ருந்த குமார் பொன்னம்பலத்தை வஞ்சகமாக திட்டம் தீட்டி பேரினவாதம் பலி கொண்டது. குமார் மறைந்தாலும் அவர் இன்றும் தமிழ் மக்களின் உள்ளங்-களில் மாமனிதராக விளங்குகிறார்.

குமாரைக் கொலை செய்தவர்களை ஆண்டு ஒன்று கழிந்தும் கண்டு பிடிக்க முடியாதவர்கள் சில கொலைகளை உடனே கண்டு பிடித்து விடுவது விந்தை தான்.

களுத்துறைச் சிறையில் அடைக்கப்பட்ட தமிழ் கைதிகளில் ஒரு கைதி நேற்று முன்தினம் சிறைக் கூண்டுக்குள் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டாராம். அவரது கழுத்தில் வெட்டுக்காயம் காணப்பட்டதாம். விடுதலைப் புலி சந்தேக நபர்களுள் ஒருவரான அவரை விடுதலைப்புலிகள் ஒருவர் தான் கொலை செய்திருப்பதாக தெரிய வந்திருக்கிறதாம்.

வெலிக்கடைச் சிறையில் தொடர்ந்து இரண்டு தினங்கள் 52 தமிழ் கைதிகள் கொல்லப்பட்டது பற்றியும் எவர் மீதும் இதுவரை குற்றம் சாட்டப்படவில்லை. பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் கோரமாகக் கொலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களின் கொலை பற்றி இது வரை எவர் மீதும் குற்றம் சுமத்தப்படவில்லை.

களுத்துறைச் சிறைச்சாலையில் இதுவரை தமிழ் கைதிகள் தாக்கப்பட்டது, கொலை செய்யப்பட்டது பற்றி எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நேற்று முன்தினம் பாதுகாப்பான களுத்துறைச் சிறைச்சாலையில் ஒரு தமிழ் கைதியை சக தமிழ் கைதிகளான விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் கொலை செய்திருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் ஒரே நாளில்! குமார் பொன்னம்பலத்தின் கொலையை இன்னும் கண்டு பிடிக்கமுடியவில்லை.

எங்கே நீதி?

05-01-2001



படிப்பகம்

www.padippakam.com



# பேச்சுக்கு யார் தயாரில்லை?

போர் நிறுத்தம் இல்லை என்பது தெளிவாக்கப்பட்டு விட்டது. நத்தார் தினமான டிசம்பர் மாதம் 24ஆம் திகதி நள்ளிரவு 12 மணியிலிருந்து ஜனவரி மாதம் 24ஆம் திகதி வரை ஒரு மாத காலத்துக்குப் போர் நிறுத்தம் செய்வதாக விடுதலைப் புலிகள் ஒருதலைப் பட்சமாக பிரகடனம் செய்தனர்.

பேச்சுவார்த்தைக்குச் சாதகமான சூழ்நிலையை போர் நிறுத்தம் மூலம் ஏற்படுத்தலாம் என்று தெரிவித்த விடுதலைப்புலிகள் அரசாங்கமும் தங்களைப் பின்பற்றி போர்நிறுத்தம் செய்ய முன்வருமென்ற எதிர்பார்ப்பையும் வெளியிட்டனர்.

அரசாங்கமும் போர் நிறுத்தம் செய்து இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் போர் ஓய்ந்து நாட்டில் சமாதானம் நிலவ வேண்டும் என்றும் உண்மையிலேயே சமாதானத்தில் ஆர்வம் கொண்ட மக்களும் வெளிநாட்ட-வரும் விருப்பம் தெரிவித்தனர்.

போர் நிறுத்தம் பற்றி அரசிடமிருந்து உடனடியாகப் பதில் வரவில்லை. வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் சில தினங்கள் ஆழ்ந்து சிந்தித்த பின் தற்காலிகப் போர் நிறுத்தத்தில் நம்பிக்கை இல்லை என்றும் பேச்சுவார்த்தை நடைபெறும் போது அதன் போக்கைப் பொறுத்து போர் நிறுத்தம் மேற்கொள்-ளலாம் என்றும் சொன்னார்.

கடந்த வாரம் அமைச்சரவைக் கூட்டம் நடை பெற்ற பின் கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிப்பதற்கான பத்திரிகையாளர் மாநாடு நடைபெற்றது.



படிப்பகம்

www.padippakam.com



வெகுஜனத் தொடர்பு அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா இம்மாநாட்டில் விளக்கமளிக்கையில், போர் நிறுத்தம் தொடர்பாக விடுதலைப் புலிகள் செய்த பிரகடனத்துக்கு எவ்விதமான பதிலையும் அரசு அவர்களுக்கு அளிக்கப் போவதில்லை. பேச்சுக்களை ஆரம்பித்த பின்னரே போர் நிறுத்தம் பற்றி ஆராய முடியும் என்ற அரசின் முடிவை அறிவித்தார்.

திட்டவட்டமான அரசியல் யோசனைகளுடன் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும். நிரந்தரமான தீர்வொன்றைக் காண்பதற்கான பேச்சுக்களை நடத்தவே அரசு தயாராக இருக்கிறது. தற்காலிக ஏற்பாடுகளுக்குப் பதில் அளிக்க வேண்டிய அவசியம் அரசுக்கு இல்லை என்றும் அமைச்சர் யாப்பா தெரிவித்தார்.

போர் நிறுத்தம் இல்லை என்பதை மட்டுமல்ல தொடர்ந்து போர் முன்னெடுத்துச் செல்லப்படும் என்பதையும் அரசு தெளிவாக்கியிருக்கிறது.

பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் வர வேண்டும் என்று அமைச்சர்களும் அரசாங்கமும் சொல்லிக் கொண்டிருக்கிறதே தவிர பேச்சுவார்த்தைக்கு அனுசரணையாளராக இரு தரப்பும் ஒப்புக்கொண்ட நோர்வே அரசின் முயற்சிகளை அரசு வரவேற்பதாகவும் தெரியவில்லை. பேச்சுவார்த்தை முயற்சிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டதாகவும் தெரியவில்லை.

நோர்வேயின் விஷேச சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இவ்வாரம் இலங்கைக்கு வருவார் என்ற செய்திகளைத் தொடர்ந்து அமைச்சர் யாப்பாவிடம் கேட்கப்பட்ட போது அவர் வர மாட்டார் என்று பதிலளித்திருந்தார் அரசாங்கம் எப்படியான முயற்சிகளை எடுத்து வருகிறதென்பதை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

விடுதலைப் புலிகளுக்குப் பேச்சுக்களில் ஆர்வம் இல்லையென்றே தோன்றுகிறது என்று அமைச்சர் யாப்பா கூறியிருப்பதன் மூலம் அரசுக்கு பேச்சுக்களில் நம்பிக்கை இல்லை என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார்.

போர் நிறுத்தத்துக்கும் பேச்சுவார்த்தைக்கும் அரசாங்கம் தயாராக இல்லை. விடுதலைப் புலிகள் ஒருதலைப் பட்சமாகப் போர் நிறுத்தம் செய்திருந்த சமயத்தில் தென்மராட்சியில் மீதமாக விட்டு வைத்திருந்த கட்டிடங்களையும் பல்குழல் எறிகணைகளாலும் விமானக் குண்டு வீச்சுக்களாலும் தரைமட்டமாக்கி, பல சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தை சுலபமாக மீண்டும் கைப்பற்றியிருப்பதாகவும் அரசு அறிவித்திருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



தேர்தலுக்கு முன் மீண்டும் ஆனையிறவைப் பிடிப்போம் என்று இரத்தினசிறி விக்கிரமநாயக்கா விடுத்த சவாலை இனியாவது நிறைவேற்றலாம் என்று நினைக்கிறார்கள் போலும். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்த நவீன ஆயுதங்களும் போர்ச் சாதனங்களும் இந்தியாவிடமிருந்து வாங்கியுள்ள கடலோரக் காவற் கப்பல்களும் போரில் வெற்றியீட்ட முடியும் என்ற நம்பிக்கையை படைத்தளபதிகளுக்கும் அரசாங்கத்துக்கும் ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

இது மட்டுமல்ல மகா சங்கத்தைச் சேர்ந்த சிலர் படைக்கு ஆள் திரட்டித் தருவதாக உறுதியளித்திருப்பதும் சிஹல உறுமய, ஜே.வி.பி. போன்ற இனவாதக் கட்சிகளும் பேரினவாதிகளும் போர் நிறுத்தப்படக் கூடாது, போரைத் தொடர்ந்து பயங்கரவாதிகளை ஒழிக்க வேண்டும் என்று பக்கப்பாட்டு பாடுவதும் அமைச்சர்களுக்கும் அரசுக்கும் உற்சாகத்தைத் தந்திருக்க வேண்டும். பயங்கரவாத ஒழிப்பு என்ற பிரச்சாரத்துடன் இனப்படுகொலையை, இன அழிப்பை வெற்றிகரமாக நிறைவேற்றலாம் என்று அரசு கருதுகிறது.

மிருசுவிலில் படையினரால் புதைக்கப்பட்டவர்கள் திருகோணமலையில் கடற் தொழிலுக்குச் சென்ற போது சுட்டுக் கொல்லப்பட்டவர்கள், சித்தாண்டியில் சுட்டுக் கொன்று தலை கொய்யப்பட்டவர்கள் எல்லோருமே 'பயங்கரவாதிகள்' என்று கணக்கு காட்டப்படுபவர்கள் தாம்.

போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினையைத் தீர்த்து அமைதியேற்படுவதற்கு இலங்கை அரசை சம்மதிக்க வைக்க முடியாத சர்வதேச சமூகம் இனி என்ன செய்யப் போகிறது? இனப்படுகொலைக்கு ஒத்துழைப்புக் கொடுக்கப் போகிறதா? தமிழ் மக்கள் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் சுயநிர்ணய உரிமையுடன வாழ்வதற்கு வழிதேடும் போது உதவியும் ஒத்துழைப்பும் அளிக்கப் போகிறதா? இனியும் ஐ.நா. மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறதா?

படையிலிருந்து ஆயுதங்களுடன் தப்பியோடியவர்களால் இப்பொழுதே நாட்டில் கொலை கொள்ளைகள் கூடியிருக்கிறது இனியும் இது அதிகரித்தால் நாடு தாங்குமா?

07-01-2001



படிப்பகம்

www.padippakam.com



# தமிழர்களின் ஜனநாயகம்

போர் நிறுத்தம், போர்நிறுத்தம் என்று தொடர்ந்து வந்த கோரிக்கைக்கு பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் என்னதான் சொல்லி வந்தாலும் நாட்டின் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடமிருந்து நல்ல பதில் கிடைக்கும் என்று மக்கள் எதிர் பார்த்திருந்தனர். இதற்கு இறுதியாகவும் உறுதியாகவும் போர் நிறுத்தம் இல்லையென்று பதில் சொல்லி இருக்கிறார் அவர்.

பேச்சுவார்த்தை மேசைக்கு வருமாறு நான் விடுத்த அழைப்பை விடுதலைப் புலிகள் ஏற்றாக வேண்டும். அதன் பின்னரே போர் நிறுத்தம் ஒன்றைப் பற்றி நாம் ஆராய முடியும் என்று சந்திரிகா அம்மையார் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

செய்மதித் தொலைத் தொடர்பு மூலம் யாழ்ப்பாண மக்களுக்கும் வட பகுதி மக்கள் அனைவருக்கும் கடந்த திங்கட்கிழமை ஆற்றிய உரையிலேயே சந்திரிகா அம்மையார் போர் நிறுத்தம் என்ற கோரிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார்.

இதேசமயம் பழைய விவகாரங்களையும் ஜனாதிபதி தமதுரையில் நினைவூட்டியிருக்கிறார்.

முன்பு நடந்த பேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப் புலிகள் பொய்களையே கூறினார்கள் என்றும் ஜனாதிபதி சாடியிருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் காரணமாக பதிலுக்கு எனது அரசின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளுக்கான முழுப்பொறுப்பும் புலிகளையே சாரும் என்றும் சந்திரிகா அம்மையார் வட பகுதி மக்களுக்கு ஆற்றிய உரையில் கூறியிருக்கிறார்.

கிருஷாந்தி என்ற இளம் மாணவி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு உறவினர்களுடன் சேர்த்துக் கொலை செய்யப்பட்டுப் புதைத்ததிலிருந்து சில தினங்களுக்கு முன் மிருசுவிலில் எட்டுப்பேர் வெட்டிக் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டது வரை இராணுவத்தின் சகல நடவடிக்கைகளுக்கும் விடுதலைப் புலிகளே பொறுப்பேற்க வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா கருதுகிறார்.



படிப்பகம்

www.padippakam.com



இதேநேரம் எனது அரசு போரை வெறுக்கிறது. எந்த ஒரு பிரச்சினையும் வன்முறையினாலோ, போரினாலோ உகந்த முறையில் தீர்க்கப்படும் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்லியிருக்கிறார். ஆனால் விடுதலைப் புலிகளை அழித்துத் தீர்த்துக் கட்டும்வரை ஓயமாட்டோம் என்று அவரது பிரதமரும், வெளிவிவகார அமைச்சரும் அறைகூவல் விடுவதையும் அம்மையார் ஆதரித்தே வருகிறார்.

இதே சமயம் எனது அரசாங்கம் ஜனநாயக ரீதியானது எமக்கு ஜனநாயகத்தில் ஆழமான நம்பிக்கை இருக்கிறது. அத்துடன் மனித உரிமைகளைப் பேணுவதற்கு முன்னுரிமை கொடுக்கிறோம் என்றும் கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி சந்திரிகா மட்டுமல்ல இவருக்கு முன் ஆட்சியிலிருந்தவர்களும் தமிழ் மக்களுக்கு எந்தவித உரிமைகளும் கொடுக்கக் கூடாது என்று கூச்சலிடும் பேரினவாதிகளும் கூட ஜனநாயகம் பற்றியும் பேசுவதற்குத் தவறுவதில்லை.

ஜனநாயக முறையில் தான் இலங்கையில் பொதுத்தேர்தல் நடைபெற்று வருகின்றது. என்ன தில்லுமுல்லுகள் தேர்தலில் நடந்தாலும் முடிவு ஜனநாயக முறையில் கிடைத்தது என்றே சொல்லப்படுகிறது. தமிழ் மக்களுக்கும் ஜனநாயக உரிமை இருப்பதாகவே ஆட்சியிலிருப்பவர்களும், ஆட்சி பீடத்திலிருப்பவர்களும் ஆட்சிக்கு வருவதற்குக் காத்திருப்பவர்களும் கூறியிருக்கிறார்கள்.

1956ஆம் ஆண்டு சந்திரிகா அம்மையாரின் தகப்பன் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா சிங்களம் மட்டும் இலங்கையின் ஒரே உத்தியோக மொழி என்ற கொள்கையை முன் வைத்தார். தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று ஆட்சி பீடத்துக்கு வந்தார்.

இதே சமயம் தமிழ் மக்களின் தாயகமான வடக்கிலும், கிழக்கிலும் பாராளுமன்றத்துக்கு போட்டியிட்ட அனைத்துத் தமிழ் பேசும் பிரதிநிதிகளும் சிங்களம் மட்டும் என்ற கொள்கையை எதிர்த்தும் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து கோரியும் தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றுப் பாராளுமன்றம் சென்றனர்.

ஆனால் தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியில் தங்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கிய ஆணை பெரும்பான்மை ஜனநாயகத்தினால் நிராகரிக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com



அந்நியரின் ஆட்சி இலங்கையில் ஏற்படுவதற்கு முன் இருந்தது போன்று தமிழீழ அரசை மீள அமைப்பதற்குத் தமிழ் மக்கள் தங்கள் பிரதிநிதி-களுக்கு ஒட்டுமொத்தமாக ஒரே குரலில் 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஆணை வழங்கினர்.

ஆனால், தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியில் வழங்கிய ஆணையை சிங்கள மக்கள் ஜனநாயக ரீதியில் வழங்கிய ஆணை நிராகரித்து விட்டது.

இன்று சந்திரிகா அம்மையார் ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்திருப்பதாகக் கூறுவது பெரும்பான்மை ஜனநாயகத்தைப் பற்றியது தான்.

ஜனநாயகம் என்றாலும், மனிதாபிமானம் என்றாலும் சந்திரிகா அம்மையார் மட்டுமல்ல சிங்களத் தலைவர்களும், சிங்கள அரசியல்வாதிகளும் பெரும்பான்மை மக்களை மட்டுமே கருத்தில் கொண்டு சொல்வதும் செய்வதும் தான் நடைமுறை.

பெரும்பான்மை ஜனநாயகம் ஆட்சி செலுத்தும் வரை சிறுபான்மை ஜனநாயகத்துக்கு இங்கு இடமேயில்லை. இது கடந்த காலம் தந்த பாடம்.

ஜனநாயகமும், சாத்வீகமும் தோல்வியடைந்த நிலையில் தான் விடுதலைப் புலிகள் உருவானார்கள். ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கினார்கள்.

தமிழ்தேசிய இனமான தமிழினத்தின் உரிமைகளை மதித்து அவர்களுக்குரிய ஜனநாயக உரிமைகளை ஏற்று அவர்களே தங்கள் பாதுகாப்பையும், சுதந்திரத்தையும் காப்பாற்றிக் கொள்வதற்கு ஜனநாயக உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் வரை நாட்டில் அமைதி ஏற்படுவது சுலபமல்ல.

தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை ஏற்று மதிக்கும் மனப்பக்குவம் பெரும்பான்மை ஜனநாயகத்துக்கு வரும்வரை அம்மையார் நினைப்பது போல் போர் நிறுத்தம் வர முடியாது என்பதே உண்மை!

11-01-.2001



படிப்பகம்

www.padippakam.com



## சொல்கெய்மின் சொல்லுக்கு...!

காது கேளாதவர்கள் பொதுவாக மற்றவர்களை விட அதிகம் சத்தம் போட்டுத் தான் பேசுவார்கள். தங்களைப் போல் மற்றவர்களுக்கும் காது கேட்காது என்று கருதுவது தான் இதற்குக் காரணமோ தெரியாது. இனப்பிரச்சினைக்கு அமைதியான முறையில் நிரந்தரமான சுமுகமான தீர்வு காணப்பட வேண்டும். இருதரப்பும் சந்தித்துப் பேசித் தீர்வு காண வேண்டும் என்று எல்லோருமே யோசனை கூறி வந்தனர். பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். பேச்சுவார்த்தை மேசைக்கு விடுதலைப் புலிகளைக் கொண்டு வருவதற்காக அவர்களைப் பலவீனப்படுத்துவதற்காக போர் புரிகிறோம் என்று சந்திரிகா அரசின் அமைச்சர்களும் சொல்லி வந்தனர். படைத்தளபதிகளும் கூறி வந்தனர்.

நேரடிப் பேச்சினாலும் அரசை நம்ப முடியாது என்றும் மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தத்துடன் பேசுவதானால் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று விடுதலைப் புலிகள் சொன்னார்கள். வெளிநாட்டுத் தலைவர்கள் பலா் இலங்கை இனப்பிரச்சினைக்கு உதவி செய்ய முன்வந்த போது சந்திரிகா அரசு அதை ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை.

மூன்றாந்தரப்பு ஒன்றின் உதவியுடன் பேச முன்வந்தால் பேசத் தயார் என விடுதலைப் புலிகள் சொன்ன போது அதை அரசினால் மறுக்க முடியவில்லை. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவரை சந்திரிகா மூன்றாந்தரப்பு உதவியாளராகச் சொன்ன போது விடுதலைப் புலிகள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. பின்னர் நோர்வே நாட்டை இருதரப்பினரும் ஏற்றுக் கொண்டனர்.



படிப்பகம்

www.padippakam.com



நோர்வே மீது களங்கம் கற்பிக்க பேரினவாதிகளும் பேரினவாத அமைப்புக்களும் பேரினவாதப் பத்திரிகைகளும் இன்று வரை முயற்சி செய்து கொண்டு தானிருக்கின்றன. இப்பொழுது விடுதலைப் புலிகளை நம்ப முடியாது எங்களை ஏமாற்றி விட்டார்கள் என்றும் ஆளும் அமைச்சர்கள் மட்டுமல்ல எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களும் மகாசங்கத்தினரும்கூட கூறிவருகின்றனர்.

காது கேளாதவர் கதைப்பது போல் இவர்களும் விடுதலைப் புலிகளை நம்ப முடியாது என்று கூறுகின்றனர். அவர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக இருந்தால் மற்றவர்களை நம்புவார்கள்.

ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ளவும் இருவருமே விட்டுக் கொடுத்துப் பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக்கவும் நேர்மையாகவும் நடத்தக் கூடியவர்களாக இருந்தால் மூன்றாந் தரப்பு நாடு ஒன்றை உதவியாளராகவோ அனுசரணையாளராகவோ மத்தியஸ்தராகவோ தேவை என்று கேட்க வேண்டிய அவசியமே ஏற்பட்டிராதே! நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயார் என்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மூன்றாந்தரப்பு அனுசரணையாளராக வந்த நோர்வேயின் விஷேச சமாதானத் தூதுவரிடம் தெரிவித்தார். அவர் அதை கொழும்பில் பகிரங்கமாகவும் அறிவித்தார்.

இதில் அமைச்சர்களும் மற்றும் பேரினவாதிகளும் சந்தேகம் தெரிவித்தனர். பின்னர் பிரதமரும் அமைச்சர்களும் மட்டுமல்ல படைத் தளபதியும் கூட மாவீரர் தின உரையில் தலைவர் பிரபாகரன் என்ன சொல்கிறார் என்று காத்திருப்போம் என்றார்கள். மாவீரர் உரையிலும் தலைவர் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை தகுந்த சூழ்நிலையில் நடைபெற வேண்டுமென்பதை தெளிவுபடுத்திப் பேசினார். இதன் பின்னரும் கூட அரசாங்க அமைச்சர்களோ படைத்தளபதிகளோ ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

நத்தார் நாளிலிருந்து ஒரு மாதத்துக்கு ஒருதலைப்பட்சமாகப் போர் நிறுத்தம் செய்கிறோம். அரசாங்கமும் இதைப் பின்பற்றி பேச்சுவார்த்தைக்கு தகுந்த சூழ்நிலையை ஏற்படுத்தட்டும் என்று விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

போர் நிறுத்தம் என திடீர் என்று ஏன் அறிவிக்க வேண்டும், நோர்வே சமாதானத் தூதுவரைச் சந்தித்த போதோ மாவீரர் தின உரையின் போதோ ஏன் போர் நிறுத்தம் பற்றி அறிவிக்கவில்லை என்று அரசாங்கம் சந்தேகம் கிளப்புகிறது. போர் நிறுத்தம் செய்திருப்பது வெறும் பாசாங்கு தான், மீண்டும் போருக்கு ஆயத்தப்படுத்தவே போர் நிறுத்த நாடகம்., விடுதலைப் புலிகளை



படிப்பகம்

www.padippakam.com



நம்ப முடியாது என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையும் இப்போது மீண்டும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

விடுதலைப் புலிகளை நம்ப முடியாது என்பதால் தானே மூன்றாம் தரப்பு நாடு ஒன்றை அனுசரணையாளராக ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் மூலம் விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்தை மீறாமல் பார்த்துக் கொள்ளலாமே! பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று ஒரு பேச்சுக்கு அதாவது உலக நாடுகளை ஏமாற்றுவதற்காக அரசு கூறி வந்திருக்கிறது என்பதே உண்மை.

விடுதலைப் புலிகள் பேச்சுக்கு சம்மதிக்க மாட்டார்கள் என்று இவர்கள் சொல்லி வந்தது போலவே கருதியும் வந்திருக்கிறார்கள்.

ஆனால் விடுதலைப் புலிகளோ நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குச் சம்மதித்ததுடன் ஒருதலைப் பட்சமாகப் போர் நிறுத்தம் செய்து உலக நாடுகளின் அனுதாபத்தையும் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுது புதிய புதிய காரணத்தை ஜனாதிபதி சந்திரிகாவிலிருந்து ஆளும் கட்சியின் கடைசி ஆசனப் பிரதிநிதி வரை கண்டுபிடித்துக் கூறி வருகின்றனர். அமைச்சர்களும் பேரினவாதிகளும் மட்டுமல்ல ஜனபதிபதி சந்திரிகாவும் கூட போர் நிறுத்தத்தையோ பேச்சுவார்த்தையையோ இப்பொழுது விரும்புவதாகத் தெரியவில்லை. விடுதலைப் புலிகளை அழித்து ஒழிப்போம் என்று அடிக்கடி முழக்கமிடும் பிரதமர் இரத்தினசிறி விக்கிரமநாயக்காவைத் தான் இவர்கள் எல்லோரும் பின்பற்றுகிறார்களா அல்லது அவரை இப்படி முழக்கமிடச் சொல்லி விட்டு பின்னால் நின்று தாளம் போடுகிறார்களா?

என்றாலும் இவர்களையும் இவர்களின் பேச்சுக்களையும் நம்பி நோர்வேயின் விசேஷ சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இந்தியா, லண்டன் என்று நாடு நாடாகச் சென்று மீண்டும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அமைதித் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கையுடன் இலங்கை வந்திருக்கிறார். நேர்மையாக முயற்சித்து நம்பிக்கையுடன் வந்திருக்கிறார் எரிக் சொல்ஹெய்ம். பாவம் கசாப்புக் கடைக்காரர்களிடம் கருணையை எதிர்பார்ப்பது போல் வந்திருக்கிறார் சொல்ஹெய்ம். சொல்ஹெய்ம்மின் சொல்லுக்காவது இலங்கை மதிப்புக் கொடுக்குமா?

12-01-2001



படிப்பகம்

www.padippakam.com



# பாரதம் பார்க்காதது ஏன்?

என்ன நடக்குமோ ஏது நிகழுமோ என்ற அச்சமும் கவலையும்! பிள்ளைகளுக்கு எதுவும் விபரீதமாக நடந்து விடக் கூடாது என்று இறைவனை மன்றாடிக் கொண்டிருந்த பெற்றோர்கள், யாழ்ப்பாண நகரம் மீண்டும் ஒரு போர்க்களத்தைச் சந்திக்க வேண்டி நேர்ந்து விடுமோ என்று அச்சமும் கவலையும் மக்களுக்கு. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம் விவேகத்துடன் நடந்தது ஆறுதலளித்திருக்கிறது.

இதேசமயம் அநாவசியமான ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி யாழ்ப்பாணத்திலும் பயங்கரவாதம் தலைவிரித்தாடுகிறது என்று கூக்குரலிட்டு மனித உயிர்களைப் பலி கொள்வதற்கு இடம் வைக்காமல் வெகு சாமர்த்தியமாக யாழ். பல்கலைக்கழக சமூகம் நடந்து கொண்டிருப்பதைப் பாராட்ட வேண்டும்.

கிழக்குப் பல்கலைக்கழக சமூகம் தமது பங்களிப்பை வெற்றிகரமாக செலுத்தியிருப்பதும் பாராட்டுக்குரியது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்திய போரை நிறுத்தி நாட்டில் சமாதானத்தை நிலை நாட்டுவதற்கு அரசு முன்வர வேண்டும் என்றும் தமிழ் மக்களின் அபிலாசையை நிறைவேற்றக் கோரியும் யாழ். பல்கலைக்கழக சமூகம் ஜனவரி 17 ஆம் திகதியன்று பொங்குதமிழ் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வில் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த அனைத்துத் தரப்பினரும் வேறுபாடு எதுவுமின்றி ஒத்துழைத்து ஆதரித்துப் பங்கு கொள்ள வேண்டும் என்று பல்கலைக்கழக சமூகம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

இங்கு யாழ். ஆயர் நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் முதலிய ஆன்மீகத் தலைவர்களும் கல்விமான்கள், அறிஞர்கள், கலாநிதிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் சகல தரப்பைச் சேர்ந்த மக்களும் பொங்கு தமிழ் நிகழ்வில் தாங்களும் ஒருவர் என்ற நிலையில் ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்க முன்வந்தார்கள்.

Self Determination- சுயநிர்ணய உரிமை என்றால் என்ன? இதற்கு எளிதாக கிடைக்கும் தமிழ் -ஆங்கில அகராதி தரும் விளக்கம் இது.

A Firm attiude of mind assumed for one self சுயமாக எற்படும் மன உறுதி. The right of a people to decide or choose their own political status தங்களுடைய



படிப்பகம்

www.padippakam.com



அரசியல் அந்தஸ்த்தை (ஆட்சிமுறையை) ஒரு மக்கள் சமுதாயம் தாங்களே நிர்ணயிக்கும்- வகுத்துக் கொள்ளும் உரிமை என்று கூறுகிறது.

இந்த சுயநிர்ணய உரிமையைத் தான் தமிழ் மக்கள் கோருகிறார்கள். சுயநிர்ணயக் கோரிக்கையை பிரதானமாக வைத்தே பொங்குதமிழ் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சுயநிர்ணய உரிமை என்ற வார்த்தையைக் கேட்டாலே அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமருக்கு ஏன் இவ்வளவு வெறுப்பு வருகிறது என்பது தான் புரியவில்லை!

பிரிட்டிஷ் அமைச்சர் பீற்றர் ஹெயின் சமீபத்தில் கொழும்புக்கு வந்திருந்த போது சுய நிர்ணய உரிமை பற்றி ஒரு வார்த்தை சொல்லி விட்டார். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும் - என்று பீற்றர் ஹெயின் சொன்னதால் ஆத்திரமடைந்த அமைச்சர் இங்கு வருபவர்கள் கண்டபடி பேசக்கூடாது என்று எச்சரித்தார். பிரிட்டிஷ் அரசுடன் தாம் இது பற்றிப் பேசப் போவதாகவும் கூறியிருந்தார்.

கதிர்காமருக்குப் பிடிக்காத சுயநிர்ணய உரிமை என்ற வார்த்தை யாழ்ப்பாணத்தில் உரத்த குரலில் ஒலிப்பதற்கு படையினர் விடுவார்களா, விடமுடியுமா,? போரை நிறுத்தும்படியும், சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென்றும் குரல் எழுப்புவதற்கு அனுமதித்தால் போர் தொடரும் என்பது தான் எனக்குத் தெரியும் .சமாதானப் பேச்சுப் பற்றித் தெரியாது என்று கூறிய பிரதமர் விக்கிரமநாயக்காவின் மதிப்பென்னாவது?

இலங்கையில் என்ன நடைபெறுகிறது என்பதை உலகம் கவனித்துக் கொண்டுதானிருக்கிறது. போர் நிறுத்தத்துக்காவும் சமாதானத்துக்காகவும் குரல் கொடுப்பதையும் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை கோரிக் குரல் எழுப்புவதற்கும் ஆயுதம் தாங்கிய படைகளைக் கொண்டு தடை செய்யும் இலங்கை அரசாங்கத்தின் ஜனநாயகத்தை உலகம் புரிந்து கொள்ளும். சுயநிர்ணய உரிமை வேண்டும் என்று குரல் கொடுக்க முடியாத தமிழ் மக்களின் நிலையையும் உலக நாடுகள் புரிந்து கொள்ள முடியாதா?

உலக நாடுகள் ஒரு புறமிருக்கட்டும் உலகில் ஜனநாயகத்துக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்கும் பாரத நாடு பக்கத்திலிருந்து கூட பார்க்காமலிருப்பது ஏன்?

18-01-2001



படிப்பகம்

www.padippakam.com



# வழிகாட்ட வேண்டும்

மக்கள் விழித்து எழுந்தால் அந்த எழுச்சியை சுலபத்தில் அடக்க முடியாது. கட்டுப்படுத்தவும் முடியாது என்பது உலக நாடுகள் பலவற்றில் வரலாறு கண்ட உண்மை.

உலக நாடுகள் பலவற்றிலும் அனுபவரீதியாகக் கண்ட இந்த உண்மையை இன்னமும் சில நாடுகள் உணர்ந்து நடந்து கொள்ள மறுக்கின்றன.

சகல சக்திகளுடன் சகல வசதிகளையும் அனுபவித்து வந்த முடியுடை மன்னர்கள் மக்களை மறந்து வாழ்ந்ததால் துன்பத்தைத் தாங்க முடியாத மக்கள் விழித்தெழுந்து முடியாட்சியையே வீழ்த்திய வரலாறுகளும் உண்டு.

சமீபகாலத்தில் கூட ஆட்சி பீடத்துக்கு அதிகார பலத்துடன் வந்தவர்கள் மக்களை மறந்து அதிகாரம் செலுத்தியதால் மக்கள் கிளர்ந்தெழுந்து ஆட்சியைக் கவிழ்த்த வரலாறுகளும் உண்டு.

மக்களால் ஆட்சி பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்களும் சில சமயங்களில் சகல அதிகாரங்களையும் தம்மிடம் குவித்து வைத்து சர்வாதிகாரிகளாக நடந்து மக்களின் வெறுப்பைத் தேடி வீழ்ந்த கதைகளும் இருக்கின்றன.

ஜனநாயகம் பற்றி எல்லோருமே பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். ஆனால், இலங்கையில் ஜனநாயகம் பற்றிப் பேசுபவர்கள் எதை ஜனநாயகம் என்று சொல்லுகிறார்களென்பது புரிந்து கொள்ள முடியாமலிருக்கிறது.

சிஹல உறுமயவும் ஜனநாயகம் பற்றித் தான் பேசுகிறது. ஜனதா விமுக்தி பெரமுனவும் ஜனநாயகம் என்று சொல்கிறது. ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் ஜனநாயகம் என்று சொல்லித் தான் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்டு வந்தார்.

தேசிய சிறுபான்மை இனமான இந்நாட்டின் பூர்வீகத் தமிழ் குடிகளான மக்களைப் பார்த்து போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று சூளுரைத்தார் ஜே.ஆர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்கி மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்துக்கே சகல



படிப்பகம்

www.padippakam.com



அதிகாரங்களும் உள்ள ஜனநாயகத்தை கொண்டு வரப்போவதாகச் சொல்லி ஆட்சிக்கு வந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியைத் துறக்கத் தயாராக இல்லை.

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்றும் கூறி வந்தாலும் தமிழ் இனத்தை அடக்கி ஒடுக்கவும் அழித்தொழிக்கவுமே திட்டமிட்டு நடக்கும் போரைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்.

ஜனநாயகம் பற்றிப் பேசும் ஜனாதிபதியும் பெரும்பான்மை ஜனநாயக வாதியாகவே தான் செயல்படுகிறார்.

இலங்கையில் சிறுபான்மையினருக்கு ஜனநாயக உரிமை இருப்பதாக ஆட்சி பீடத்துக்கு வந்தவர்களும் இன்று ஆட்சி பீடத்திலிருப்பவர்களும் கருதுவதாகத் தெரியவில்லை.

ஜனநாயக ரீதியில் உரிமைக் குரல் எழுப்பிய போதும் சாத்வீக முறையில் போராடிய போதும் ஆயுத பலம் கொண்டு தமிழ் மக்களை அடக்கியபடியால் தான் இன்று தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுகிறார்கள்.

இன்று சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரியும் போரை நிறுத்தக் கேட்டும் பொங்கு தமிழ் நிகழ்ச்சியை ஜனநாயக முறையில் அமைதியாக நடத்துவதற்கு யாழ்ப்பாணப் படைத்தளபதி அனுமதியளிக்க மறுத்தார். பொலிஸ் அதிகாரியோ பொங்கு தமிழ் நிகழ்வு நடந்தால் தடியடி துப்பாக்கிப் பிரயோகம் தொடங்குமென்று மிரட்டினார்.

பல்கலைக்கழகத்தைச் சூழ பொலிஸ் படையும், தரைப்படையும் குவிக்கப்பட்டுப் பெரும் போருக்குத் தயார் செய்யப்பட்டது.

ஆனால் மக்களும் பல்கலைக்கழகச் சமூகமும் புத்திசாதுர்யத்துடன் மக்கள் எழுச்சியை வெற்றிகரமாக எடுத்துக் காட்டி விட்டனர்.

விழித்தெழும் மக்களின் எழுச்சியைக் கட்டுப்படுத்த முடியாதென்பதை படையினரும் அரசும் உணர்ந்து திருந்தி நடந்து கொள்வதற்கு வடக்கிலும் கிழக்கிலும் நடந்த பொங்கு தமிழ் நிகழ்ச்சியின் எழுச்சி வழிகாட்ட வேண்டும்.

19-01-2001



படிப்பகம்

www.padippakam.com



# நாடு எங்கே போகிறது?

"பயங்கரவாதிகளை" எதிர்த்துப் போராடி அழிப்பதற்குப் படைக்கு ஆள் திரட்டும் இயக்கம் எதிர்பார்த்த மாதிரி வெற்றிகரமாக நிறைவேறவில்லை.

தேச பக்தியுள்ள சிங்கள இளைஞர்கள் முண்டியடித்துக் கொண்டு பட்டாளத்திற்கு ஆள் திரட்டும் முகாம்களில் நீண்ட வரிசைகளில் நின்றதாகப் பத்திரிகைகளில் படங்களுடன் செய்தி வெளிவந்ததை மக்கள் மறந்து விட்டார்கள் என்றே தோன்றுகின்றது.

பட்டாளத்துக்கு இருபதாயிரம் பேர் தேவை என்று சில மாதங்களுக்கு முன் தெரிவித்த ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க புலிப் படையில் தங்கள் உயிரைத்தாமே மாய்த்துக் கொள்வதற்கு போராளிகள் முன்வருவது பற்றியும் வியப்புத் தெரிவித்திருந்தார்.

படையில் சேர்ந்து பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கு சிங்கள இளைஞர்கள் தேச பக்தியுடன் முன்வராதது பற்றி ஜனாதிபதி சந்திரிக்கா கவலை தெரிவித்துமிருந்தார். சிங்கள இளைஞர்களுக்கு நிறைய தேசபக்தி இருக்கிறதென்றும் அவர்களுக்கு சரியான முறையில் அந்த பக்தியை ஊட்டாதது தான் குறையென்றும் தேசபக்தி நிறைந்த ஒரு பிக்கு பதில் சொன்னார்.

இத்துடன் பிக்கு நிற்கவில்லை. தனக்கு வெகுஜன ஊடகங்களில் பிரசாரம் செய்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டால் இருபதாயிரம் இளைஞர்களை மட்டுமல்ல அறுபதாயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்களைத் தம்மால் திரட்டித் தர முடியுமென்றும் அந்தப் பிக்கு தெரிவித்திருந்தார்.

இன்னும் இருபதாயிரம் இளைஞர்கள் படையில் சேர்ந்தால் இப்போதுள்ள நவீன ஆயுதங்கள், படைக்கலன்களுடன் பயங்கரவாதிகளை போரில் முறியடிக்கலாம் என்று படைத்தளபதியும் சில மாதங்களுக்கு முன் கூறியிருந்தார்.

சில வாரங்களுக்கு முன் இலங்கையின் பிரதமர் இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஒரு வைபவத்தில் பேசுகையில் தாம் பௌத்த விகாரைகளுக்குச் சென்று அந்த விகாரைகள் மூலம் படைக்கு ஆள் திரட்டப் போவதாக அறிவித்திருந்தார்.

ஒவ்வொரு விகாரை மூலமாகவும் ஒவ்வொரு தொகை இளைஞர்களைத் திரட்டிப் படையில் சேர்க்கப் போவதாகவும் பிரதமர் இரத்தினசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார். வாழ்க பௌத்த தர்மம்!



படிப்பகம்

www.padippakam.com



படைக்கு ஆட்களைத் திரட்டிக் கொடுத்துப் போரில் பயங்கரவாதிகளை அழித்து ஒழிக்கப் போவதாக நம்பிக்கையுடனிருக்கும் பிரதமர் இரத்தினசிறி விக்கிரமநாயக்கவினால் படையில் ஆள்பலத்தைப் பெருக்க முடியவில்லை, "பயங்கரவாதிகளை" அழித்து ஒழிக்கவும் முடியவில்லை.

ஆனால் போர் தொடங்கிய காலத்திலிருந்து அரச தரப்பினாலும் படைத்தரப்பினாலும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்ட புலிகளின் தொகையைக் கணக்கிட்டால் இப்பொழுது விடுதலைப் புலிகளில் ஒருவர் கூட எஞ்சியிருக்க முடியாது.

இதே சமயம் அரச படைகளில் தேசபக்தியுடன் சேர்த்துக் கொள்ளப்பட்ட பலர் சொல்லிக் கொள்ளாமலே தேசத்தைக் காப்பாறுவதற்காக வெளியேறிச் சென்று விட்டனர். அவர்கள் சும்மா போகவில்லை, அவர்கள் தாம் பெற்ற ஆயுதப் பயிற்சியுடன் ஆயுதங்களையும் தங்களுடனேயே கொண்டு சென்று விட்டனர்.

தேசபக்தியுள்ள ஆயுதபாணிகளைத் தேடிப்பிடித்து மீண்டும் படையில் சேர்த்துக் கொள்ள எடுத்த முயற்சிகள் பெரிய அளவில் பயனளிக்கவில்லை.

ஆனால் நாட்டில் நடைபெறும் பல கொள்ளைச் சம்பவங்களிலும் ஆட்கடத்தல், கொலைச் சம்பவங்களிலும் இருவர் மூவராக படையிலிருந்து தப்பியோடிய இவர்கள் அகப்பட்டுள்ளனர்.

இப்படிக் கொலை கொள்ளைகளில் அகப்பட்டவர்களை மீண்டும் படைகளில் சேர்த்து இது தான் தண்டனை என்று வடக்குக் கிழக்குக்கு அனுப்பப்படுவார்களோ தெரியவில்லை.

லலித் அத்துலத்முதலி தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்த போது வடக்கிலும் கிழக்கிலும் எல்லைப் பகுதிகளில் கடும் குற்றவாளிகளை குடியேற்றப் போவதாக அறிவித்து சில இடங்களில் குடியேற்றியுமிருந்தார்.

சில தினங்களுக்கு முன் ஒரு புராதன பௌத்த ஆலய பிக்கு தலைமையில் இயங்கிய கொள்ளைக் கோஷ்டியை பொலிஸார் கைது செய்த போது அதிலிருந்தவர்களில் இருவர் இராணுவத்தையும் விமானப்படையையும் சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்திருக்கிறது.

ஆயுதங்கள் பலவும் அவர்களிடமிருந்து மீட்கப்பட்டிருப்பதுடன் கொள்ளையடித்த பொருட்களும் மீட்கப்பட்டிருக்கின்றன. இலங்கையில் பயங்கரவாதம் ஒழிக்கப்படுகிறதா? அல்லது வளர்க்கப்படுகிறதா? நாடு எங்கே போகிறது?

22-01-2001



படிப்பகம்

www.padippakam.com



# போரா சமாதானமா?

இந்தக் கேள்விக்கு நல்ல பதில் சொல்வதற்கு இன்னமும் இடம் இருப்பதாக நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் நம்புகின்றார்.

இந்த நம்பிக்கையுடன் தான் சமாதானத் தூதுவர் லண்டனுக்கு அவசரமாகப் போயிருக்கிறார். இன்று நள்ளிரவுடன் விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக பிரகடனப்படுத்திய ஒரு மாதப் போர் நிறுத்தம் முடிவடைகிறது.

இப்போர் நிறுத்தத்துக்கு சாதகமாக அரசும் போரை நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தைக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும கொடுக்கப்பட்ட அழுத்தத்தையும் கோரிக்கையையும் அரசு செவிசாய்க்காமல் உதாசீனப்படுத்தி விட்டது.

பேச்சுவார்த்தை தொடங்கி நடக்கையில் அதன் போக்கைப் பொறுத்துப் போர் நிறுத்தத்தைத் தீர்மானிக்கலாம் என்று சந்திரிகா அரசு கூறிவிட்டது.. ஆனால் அரசு போரைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறது. படை நகர்வு துரிதமாகிக் கொண்டிருக்கிறது. விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் நான்கு தோல்வியடைந்து விட்டதாகவும் அரசு அறிவித்திருக்கிறது.

பேச்சுவார்த்தையின் போக்கைப் பொறுத்து போர் நிறுத்தத்தைத் தீர்மானிக்கலாம் என்று கூறிய அரசு பேச்சுவார்த்தைக்கான எந்த முயற்சியையும் மேற்கொள்வதாகத் தோன்றவில்லை.

ஆனையிறவை மீண்டும் கைப்பற்றுவதே அரசின் நோக்கமாகத் தெரிகிறது. விடுதலைப் புலிகளை அழித்து ஒழிக்கும் வரை ஓயமாட்டோம் என்று பிரதமர் இரத்தினசிறி விக்கிரமநாயக்க முதல், ஆட்சியிலிருப்போர் அனைவருமே சூளுரைத்து வருகின்றனர்.

எவர் சமாதானம் பேசினாலும் எமக்குக் கவலையில்லை. ஆனால் எவர் சொன்னாலும் வெற்றி பெறும் வரை போரை நிறுத்தப் போவதில்லை என்று பிரதமர் இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஹொரணையில் நடந்த வைபவமொன்றில் பேசியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதமர் இப்படிப் பேசியிருப்பதொன்றும் ஆச்சரியமானதல்ல. நோர்வேயின் சமாதானப் பங்களிப்பு முடிந்துபோன விஷயமென்று கடந்த பொதுத்தேர்தல் பிரசாரத்தின் போதே கூறியிருந்தார் அவர்.



படிப்பகம்

www.padippakam.com



இராணுவத்துக்கு ஆள் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பிரதமர் மூன்று வருடங்களுக்குள் இந்தப் போரை முடித்துவிட வேண்டுமென்றும் மூன்று வருடங்களின் பின் இராணுவம் அபிவிருத்திப் படையாகப் பயன்படுத்தப்படுமென்றும் சொல்லியிருக்கிறார்.

இராணுவத்தைவிட்டு ஆயுதங்களுடன் தப்பியோடியவர்கள் இப்பொழுது எப்படியான அபிவிருத்தியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது பிரதமருக்குத் தெரியவில்லையோ? தென்னிலங்கையில் நடைபெறும் கொலை கொள்ளைகளில் ஈடுபட்டு அகப்பட்டோரில் அநேகமானவர்கள் இராணு-வத்திலிருந்து தப்பிச் சென்றவர்களே!

போரில் வெற்றி பெற்ற பின்னர் தானா அபிவிருத்திப்படை உருவாக வேண்டும். பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டால் முழு இளம் சக்தியையும் நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்த முடியுமே.

நோர்வே சமாதானத் தூதுவர் லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசுகிறார். போர் நிறுத்தம் முடிந்ததும் மீண்டும் போர் தொடங்கி விடாமல் தடுத்து, மேலும் சில வாரங்களுக்கு போர் நிறுத்தத்தை நீடிக்கும்படி கேட்பதற்காகவே அவர் பேச்சுவார்த்தை நடத்துகிறாராம்.

இந்தச் சில வாரங்களுக்குள்ளாவது அரசின் மனதை மாற்றிப் பேச்சுவார்த்தையைத் தொடங்கலாம் என்பது சமாதானத் தூதுவரின் நப்பாசை. படைக்கு ஆள் திரட்டும் பிரதமர் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பேசும் பேச்சு தமிழருக்கெதிராகக் கக்கப்படும் விஷமாக இருக்க மாட்டாதென்று சொல்ல முடியுமா?

இந்த நிலையில் போரைத் தொடர்ந்து நடத்தும் அரசின் முடிவில் மாற்றத்தை எதிர்பார்க்க முடியாதென்றே தோன்றுகின்றது. போரின் மூலம் தான் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்போம் என்று தீர்மானமாக இருக்கும் அரசாங்கம் போர் நிறுத்தத்துக்கும் பேச்சுவார்த்தைக்கும் மனவிருப்புடன் முன்வருமா?

மீண்டும் உக்கிரமான போர் தொடங்குவது இனித் தவிர்க்க முடியாதென்றே தோன்றுகின்றது. சர்வதேச சமூகம் இனியாவது வல்லான் வகுக்கும் வழியிலிருந்து விலகி இந்த நாட்டின் பூர்வீகக்குடிகளான தமிழர் பாதுகாப்பாகவும், கௌரவமாகவும், சுதந்திரமாகவும் வாழவழிகாண முன் வரப் பிரார்த்திப்போம்.

24-01-2001



படிப்பகம்

www.padippakam.com



## மனிதாபிமானத்துடன் சொல்லலாமே!

புனித ரம்ழான் மாதத்தையொட்டி காஷ்மீரில் ஒருமாதப் போர் நிறுத்தத்தை தன்னிச்சையாகப் பிரகடனப்படுத்திய இந்தியாவின் வாஜ்பாய் அரசு இப்பொழுது மீண்டும் ஒரு மாதத்துக்கு அதை நீடித்திருக்கிறது. காஷ்மீர பிரச்சினைக்கு அமைதியான தீர்வொன்றைக் காணவே இந்தியா விரும்புகிறதென்றும் தீவிரவாதிகள் தொடர்ந்து வன்முறையில் இறங்கிய போதிலும் அங்கு அமைதியை ஏற்படுத்தவே இரண்டாவது தடவையாகவும் போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டிருப்பதாக பிரதமர் வாஜ்பாய் அறிவித்திருக்கிறார்.

போர் நிறுத்தத்துக்கு தீவிரவாதக் குழுக்கள் சாதகமான பதிலை அளிக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் கூறியிருக்கும் பிரதமர் வாஜ்பாய், வன்முறைகள் தொடர்ந்து கொண்டிருக்கும் போது பேச்சுவார்த்தை நடைபெறுவதில் எந்தப் பயனும் இல்லை என்றும் தெரிவித்திருக்கிறார். இந்திய மாநிலங்கள் சிலவற்றில் நடைபெறும் வன்முறைக் கிளர்ச்சிகளை எடுத்துக் காட்டித் தான் கதிர்காமரும் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாக்கி இவர்கள் கை ஓங்கினால் இந்தியாவுக்கே ஆபத்தாகி விடுமென்று பூச்சாண்டி காட்டி வந்துள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com



இந்தியாவிலுள்ளவர்களுக்கே இல்லாத அக்கறை இலங்கையிலிருந்து வெளிவரும் சில சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு ஏற்பட்டு விடுதலைப் புலிகளுக்கும் காஷ்மீர், அசாம் தீவிரவாதிகளுக்கும் தொடர்பிருப்பதாகவும் கண்டுபிடித்து வெளியிட்டிருக்கின்றன. இவற்றுக்கேற்றாற்போல இந்தியாவில் சில மேதாவிப் பத்திரிகைகளும் டொக்டர் சுப்பிரமணியம்சுவாமியும் கற்பனையில் விடுதலைப் புலிகளுக்கும் அங்குள்ள விடுதலைப் போராளிகளுக்கும் முடிச்சுப் போட்டு இந்தியாவே சீர்குலைந்து விடுமென எச்சரிக்கை செய்யவும் தவறுவதில்லை.

ஆனால் இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் நிரந்தரத் தீர்வு காணும் முயற்சியில் தகுந்த சூழ்நிலையை உருவாக்குவதற்கு வாய்ப்பாக விடுதலைப் புலிகள் நத்தார் தினத்திலிருந்து ஒரு மாத காலத்திற்கு தன்னிச்சையாகப் போர் நிறுத்தம் பிரகடனப்படுத்திய போது அதை இலங்கை அரசு அலட்சியப் படுத்தி விடுதலைப் புலிகளைக் கிண்டல் செய்ததை இந்திய மேதாவிகள் கண்டு கொள்ள மறுத்து விட்டனர்.

போர் நடக்கும் போது பேச்சுவார்த்தையும் நடத்தலாமென்று இலங்கை ஜனாதிபதியும், அமைச்சர்களும் கூறிய போதும் அவர்கள் மௌனமாக இருந்தனர். இலங்கையில் விடுதலைப் புலிகளைக் கண்டிப்பதற்கு மூக்கை நுழைக்கும் இந்திய அரசியல்வாதிகள் அவர்கள் போர் நிறுத்தம் செய்த போது எதுவுமே பேசவில்லை.

இப்பொழுது இந்தியப் பிரதமரே இரண்டாவது தடவையாகவும் காஷ்மீரில் தன்னிச்சையாகப் போர் நிறுத்தத்தை நீடித்து பேச்சுவார்த்தைக்கு வருமாறு தீவிரவாதிகளை அழைத்திருப்பதுடன் போர் நடக்கும் போது பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தமில்லையென்றும் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

எதற்கெல்லாமோ இந்தியாவின் உதவியை நாடும் இலங்கை அரசு, இந்திய மாநிலங்களை சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கு பதிலாக எடுத்துக் காட்டும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், இந்தியப் பிரதமர் வாஜ்பாய் காஷ்மீரில் ஒருதலைப் பட்சமாகப் போர் நிறுத்தம் செய்து, போர் நடக்கும் போது பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தமில்லை என்று அர்த்தபுஷ்டியுடன் தெரிவித்திருக்கும் கருத்து இலங்கை அமைச்சர்களுக்கும் அரசுக்கும் கேட்குமோ, புரியுமோ தெரியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



காஷ்மீரிலும் அந்தப் பூமியின் மக்கள் விடுதலைக்காகவே போராடுகிறார்கள். அவர்களைத் தீவிரவாதிகள் என்று இந்தியா முத்திரை குத்தியிருக்கிறது. இலங்கையில் தமிழ் மக்கள் பாதுகாப்பாகவும் கௌரவமாகவும் சுயநிர்ணய உரிமையுடன் சுதந்திரமாகவும் வாழ வழி விட வேண்டுமெனக் கோரிப் புலிகள் போராடுகிறார்கள்.

காஷ்மீரில் ஜனநாயக வழியில் போராடினார்கள். ஐ.நா. சபை காஷ்மீர மக்களின் விருப்பத்தை ஜனநாயக முறையில் நிறைவேற்ற வேண்டுமென்று எப்போதோ கூறிவிட்டது. இந்தியாவில் ஆட்சி பீடத்துக்கு வந்தவர்கள் இதை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார்கள். தேர்தல் மூலம் காஷ்மீர் இந்தியாவின் மாநிலம் என்று நிரூபிக்கிறார்கள். இலங்கையிலும் ஜனநாயக முறையில் வடக்கு கிழக்கில் மீண்டும் இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு மக்கள் 1977ஆம் ஆண்டில் தெளிவாக ஆணை பிறப்பித்து விட்டார்கள்.

தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்கு காந்தீய வழியில் சாத்வீகப் போராட்டம் நடத்தினார்கள். இவை யாவும் உதாசீனப்படுத்தப்பட்டன. இதன் பின்னர் தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கினார்கள். இப்பொழுது போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்து இலங்கையில் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டுமென்பதில் உலக நாடுகளே ஆர்வம் காட்டுகின்றன.

ஆனாலும் பயங்கரவாதிகள் என்று இலங்கை அரசினால் முத்திரை குத்தப்பட்ட விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் அமைதியான சூழ்நிலையில் இது நடைபெறுவதற்காக தன்னிச்சையாகப் போர் நிறுத்தம் செய்த போதும் வன்முறையைக் கைவிடாமல் விடுதலைப் புலிகள் மீது பழி சுமத்திப் பிரசாரம் செய்வதிலேயே அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

சந்திரிகா அரசு சமாதானம் பற்றிப் பேசுவதெல்லாம் வெறும் பம்மாத்து. அது போர் முரசு கொட்டுகிறது. சர்வதேச சமூகம் இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

சந்திரிகா அரசுக்கு மனிதாபிமான உதவி வழங்கும் வாஜ்பாய் அரசு காஷ்மீரில் கடைப்பிடிக்கும் போர் நிறுத்தத்தையும் பேச்சுவார்த்தைக்குத் தேவையான சூழ்நிலை பற்றியும் கொஞ்சம் கதிர்காமருக்கும் சந்திரிகா அரசுக்கும் இந்த நேரத்திலாவது மனிதாபிமானத்துடன் சொன்னாலென்ன!

25-01-2001



படிப்பகம்

www.padippakam.com



## என்ன தவறு?

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் அதாவது அரசாங்கத்தின் மொழியில் சொன்னால் விடுவிக்கப்படாத வன்னிப் பகுதியில் கடந்த ஆண்டில் ஐம்பத்து மூன்று சிசுமரணங்கள் நிகழ்ந்துள்ளன என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

புதுக்குடியிருப்பில் இயங்கும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் இருபத்தெட்டு சிசு மரணங்களும் அக்கராயனில் இயங்கும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இருபத்தைந்து சிசு மரணங்களும் நிகழ்ந்துள்ளன என்று தகவல்கள் கூறுகின்றன.

இறந்து பிறந்த, பிறந்து இறந்த சிசுக்களும் இவற்றில் அடங்கும். கர்ப்பிணித் தாய்மார் கர்ப்பமாக இருக்கும் போது போஷாக்குள்ள உணவு வகைகளை உண்ணாமல் விடுவதால் அவர்களின் வயிற்றில் இருக்கும் சிசுக்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

இவை ஆண்டு தோறும் நிகழும் சம்பவங்கள் தான். எதிர்காலத்தில் இப்பெண்களுக்குப் போஷாக்குள்ள உணவு வகைகளை வழங்க தொண்டர் அமைப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அக்கறை உள்ளவர்கள்



படிப்பகம்

www.padippakam.com



ஆலோசனை கூறுகின்றனர்.

இதேபோல் பிறக்கும் குழந்தைக்கும் போஷாக்குள்ள உணவுகள் கிடைக்காததால் பல்வேறு நோய்களுக்கு ஆளாகி மரணத்தைத் தழுவிக் கொள்கின்றன. வன்னிப் பகுதிக்கு பொருளாதாரத் தடை அமுல் செய்யப்பட்டு வருகிறது. இதனால் போஷாக்குள்ள உணவுகள் அப்பகுதிக்கு செல்ல முடியாமலுள்ளது. உணவுத் தடையில்லையென்றும் விடுவிக்கப்படாத பகுதிகளுக்கும் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் அரசாங்கம் இடையிடையே புள்ளி விபரங்களுடன் அறிக்கைகள் விடுவதும் வழக்கம்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தை என்ற பேச்சு வந்ததும் விடுதலைப் புலிகளின் தலைவர் நிபந்தனை விதிக்கிறாரென்றும் உணவுப் பொருள்களுக்கு அரசு தடை விதிப்பதாகச் சொல்கிறார் என்றும் கூறிய அரசாங்கம் உணவுப் பொருள்களுக்கு தடையில்லாமல் அப்பகுதிகளுக்கும் அனுப்பப்படுவதாகப் புள்ளி விபரங்களுடன் தெரிவித்தது.

மருந்துப் பொருள்களும் உணவுப் பொருள்களும் அனுப்பப்படுவதாக அரசாங்கம் புள்ளி விபரங்களுடன் அறிக்கை விடுவது மட்டுமல்ல இப்பொருள்களை விடுதலைப் புலிகள் தட்டிப் பறித்து விடுவதாகவும் அடிக்கடி பிரசாரம் செய்து வந்தது.

இது வெளியுலகிற்கு எடுத்துக் காட்டுவதற்காக மட்டுமின்றி தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் மீது வெறுப்புக் கொள்வதற்காகவும் செய்யப்படும் ஒரு பிரசாரமாகவே செய்யப்படுகிறது.

புள்ளி விபரங்களால் மக்களின் பசியையோ நோயையோ மாற்றிவிட முடியாது. அரசாங்கம் நீதியாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்வதாக வைத்துக் கொண்டாலும் இவற்றைக் கையாளும் அரச அதிகாரிகள் அனைவருமே நேர்மையாகவும் நீதியாகவும் நடந்து கொள்வார்களென்றும் சொல்ல முடியாது.

பல சந்தர்ப்பங்களில் வன்னிப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்ட உணவுப் பொருள்களும் மருந்து வகைகளும் கூட வழியில் பாதுகாப்புப் படையினரால் கொண்டு செல்ல விடாமல் தடுக்கப்பட்ட சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்ட காலந் தொடக்கம் தமிழர் மீது சிங்களப் பேரினவாதிகள் ஆரம்பித்து வைத்த துவேஷம் இப்பொழுது வளர்ந்து பெரிய விருட்சமாகப் படர்ந்திருக்கிறதே யொழிய குறையாதது மட்டுமல்ல இனிமேலும் குறைவதற்கான வாய்ப்பிருப்பதாகவும் தோன்றவில்லை.

இப்பொழுது விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று பூதாகரமாகக் காட்டிச் செய்யப்படும் பிரச்சாரமும் தமிழருக்கெதிராக செய்யப்படும் நடவடிக்கையே.

அரசுத்துறையாகவிருந்தாலும் வேறு துறையாக இருந்தாலும் இன்று தமிழன் என்றால் சந்தேகத்தோடும் வெறுப்போடும் பார்ப்பவர்களைத் தான் சிங்களச் சமுதாயத்தில் காண முடிகிறது.

பிந்துனுவெவ தமிழ் இளைஞர்கள் மோசமாகப் படுகொலை செய்யப்பட்ட போது அக்கொலைகளில் சிங்களக் கிராமவாசிகளான பெண்களும் கூடப் பங்கு கொண்டிருந்தார்களென்றால் நாட்டில் எந்த அளவுக்கு தமிழ்த் துவேஷம் என்ற விஷம் விதைக்கப்பட்டிருக்கிற-தென்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இந்த நாட்டில் இனியும் இன ஒற்றுமையை ஏற்படுத்த முடியுமா? போரை நிறுத்தி சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள அரசு தயாரில்லை. இதற்குப் பேரினவாதிகள் இடம் கொடுக்கப் போவதுமில்லை.

இந்த இனத்துவேஷத்தை விதைத்து அறுவடைக்குக் காத்திருப்போரில் பெரும் பங்கு சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளையே சாரும்..

இன்றைய நிலையில் பேராசிரியர் எஸ்.ஜே. இம்மானுவல் லண்டன் பாராளுமன்றக் கட்டிடத்தில் பிரிட்டிஷ் எம்.பிக்கள் மற்றும் ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்தவர்களுக்கு நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டது போல இலங்கை தமிழ் இன ஒழிப்பையும் நாட்டின் அழிவையும் நோக்கிய பாதையிலேயே போய்க் கொண்டிருக்கிறது. சிசு மரணங்களும் இன ஒழிப்புத்தான் என்பதில் என்ன தவறு!

26-01-2001



படிப்பகம்

www.padippakam.com



## கட்டுண்டோம் பொறுத்திருப்போம்

விடுதலைப் புலிகள் அமைப்பை பிரிட்டிஷ் அரசு தடை செய்ய வேண்டுமென்பதிலும் உலக நாடுகளில் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்து அந்த அமைப்பைச் சேர்ந்தவர்களை உலக நாடுகளிலிருந்து வெளியேற்றிவிட வேண்டுமென்பதிலும் அமைச்சர் கதிர்காமரும் சந்திரிகா அரசும் மிகத்தீவிரமாக கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். இலங்கையில் போரைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளையும் தலைவர் பிரபாகரனையும் ஒழித்து அழிப்பதில் கதிர்காமர், சந்திரிகா மட்டுமல்ல பிரதமர் இரத்தினசிறி விக்கிரமநாயக்கவும் மற்றும் அமைச்சர்களும் இராணுவத் தளபதியும் உறுதியாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில சிங்களப் பத்திரிகைகள் இவர்களெல்லோருக்கும் மேலாக விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று பட்டம் கட்டுவதற்கு எங்கெங்கே எப்படியெப்படியெல்லாம் தகவல்களைத் தமது செய்திகளுக்குச் சாதகமாகத் திரட்ட முடியுமோ அவற்றையெல்லாம் திரட்டி செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிடுவதுடன் மக்கள் கருத்து என்ற மாயையையும் ஆசிரியருக்குக் கடிதங்களாக வெளியிட்டுத் தயாரித்து புதிய பிரச்சார கலாசாரத்தையே உருவாக்கி நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மட்டுமல்ல தமிழ்ச் சமூகத்துக்கு எதிராகவும் துவேசத்தை ஊட்டி வளர்க்கின்றன.

1956ஆம் ஆண்டில் சிங்களம் மட்டுமே என்ற கோஷத்தை எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க முதலில் எழுப்பினார். இதையே சேர் ஜோன் கொத்தலாவை ஏற்றுக் கொள்ளாத போதிலும் பதவிக்கு



படிப்பகம்

www.padippakam.com



வரவேண்டுமானால் இதுதான் வழி என்று ஐக்கிய தேசியக் கட்சித் தூண்கள் சொன்னதும், அவரும் அதே வழியில் தொடர்ந்தார். ஆனாலும் யார் முதல்வர் என்ற நிலையில் சேர் ஜோன் தோல்வியைத் தழுவ பண்டாரநாயக்க ஆட்சிக்கு வந்தார். இந்தப் பதவிக்கு வருவதற்கு பௌத்த பிக்குகள் பெரும் காரணமாக இருந்தனர். இதன் விளைவாக பௌத்த பிக்குகளுக்கு பண்டாரநாயக்க முதல் மரியாதை செலுத்தத் தொடங்கினார், தொடக்கி வைத்தார்.

வகுப்பு வாதம் பெருக்கெடுத்தது. 1956இல் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேறியது. இனத்துவேஷம் வளர்ந்தது. இங்கினியாகலையில் இன மோதல் ஏற்பட்டு இங்கினியாகலை, அம்பாறையில் குடியேறிய தமிழர்களும் அவர்களுடன் முஸ்லிம்களும் அடித்து விரட்டப்பட்டனர். இந்த இனக்குரோதம் வளர்ந்து நாட்டில் முதல் தடவையாக நன்கு திட்டமிடப்பட்டு தமிழ் இனத்துக்கு எதிராக 1958ஆம் ஆண்டில் நாடு முழுவதும் கலகம் தூண்டி விடப்பட்டது. சமஷ்டிக்கட்சித் (தமிழரசுக் கட்சி) தலைவர்களின் பெயர்களைச் சொல்லி அவர்களுக்கு எதிராகவே இந்த இயக்கம் என்று சிங்களத் தலைவர்கள் கூறி வந்தாலும் சிங்களப் பகுதியில் தமிழை மறந்து போய் வாழ்ந்த தமிழர்கள் கூடத் தாக்கப்பட்டுத் துரத்தப்பட்டனர்.

துரத்தப்பட்ட தமிழர்கள் தமது தாயக பூமியான வடக்கு கிழக்குக்கு வந்து தஞ்சமடைந்தனர். வடக்குக் கிழக்கில் தமிழர் பெரும்பான்மையாக வாழ்வதை இல்லாமல் செய்துவிட முடிவு செய்த பேரினவாதம் 1948ஆம் ஆண்டில் உணவில் தன்னிறைவு என்ற மந்திரத்துடன் ஆரம்பித்து வைத்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை தீவிரப்படுத்தியது.

மீண்டும் ஜே..ஆர். ஆட்சிக்கு வந்ததும் 1977ல் திட்டமிட்டுத் தொடங்கப்பட்ட இனக்கலகத்தின் போது தென்னிலங்கையிலிருந்து அகதிகளாகக் கப்பலில் வந்த தமிழர்களில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் 1958ம் ஆண்டைப் போல திருக்கோணமலைத் துறைமுகத்தில் இறங்க முடியாது போய்விட்டது. காரணம் திருமலையில் சிங்களக் குடியேற்றம் அதிகரித்திருந்ததே!

1983ஆம் ஆண்டில் இலங்கையில் இனக்கலவரம் மீண்டும் நாடு முழுவதும் தூண்டிவிடப்பட்ட போது தமிழர்கள் வடக்கிலும் போய் தஞ்சம் புகமுடியாதபடி அவர்களைத் தாக்கி கடலுக்குள் போய் விழும்படி துரத்தலாமென்றே பேரினவாதிகள் கனவு கண்டனர். தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடியதால் பேரினவாதப் பயங்கரவாதிகளின் திட்டம்



படிப்பகம்

www.padippakam.com



நிறைவேற முடியாமல் போய் விட்டது. இப்பொழுது விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாதிகள் என்று உலகம் முழுவதிலும் பிரசாரம் செய்து வரும் அரசு தனது அரச பயங்கரவாதத்தினால் அடிக்கடி அப்பாவித் தமிழ் இளைஞர்களைக் கொலை செய்து அவர்களைப் புலிப் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தி கொஞ்சம் கொஞ்சமாக இன ஒழிப்பை செயல்படுத்தி வருகிறது.

இதே சமயம் தமிழ்ப்பிரதேசத்தை அபகரிப்பதில் பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயரில் வடக்கு கிழக்கில் குவிக்கப்பட்டுள்ள படையினரைக் கொண்டும் செயல்படுத்துகிறது. கிழக்கில் பல இடங்களை அபகரித்து திட்டமிட்டு சிங்களவர்களைக் குடியேற்றுவதுடன் சில இடங்களில் முஸ்லிம்களைக் குடியேற்றி முஸ்லிம் தமிழர்களுக்கிடையில் இன மோதலுக்கும் வழி வகுத்து வருகிறது. இப்போது கடைசியாக கல்குடாத் தொகுதியில் வாகரைப்பகுதியில் புதிய பிரதேச செயலகம் அமைப்பதற்கு புதிய பிரிவை ஏற்படுத்துவதற்கும் அரசு துரிதமாக ஏற்பாடு செய்துள்ளது.

வடக்கு கிழக்கில் மேலும் சிங்களக் குடியேற்றத்தையும் ஒப்புக்கு முஸ்லிம்களையும் குடியேற்றி திட்டமிட்ட முறையில் நிறைவேற்றிவிட்டு பேச்சுவார்த்தை மேசையில் தமிழர்களுக்கென தாயக பூமி எங்கே இருக்கிறதென்று கேட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. முதலில் தமிழர் தாயகம் என்ற பிரச்சினை இல்லாமல் தீர்த்து விட்டால் பின்னர் முஸ்லிம்கள் பிரச்சினையைத் தீர்ப்பது என்ன பெரிய பிரச்சினையா என்று பேரினவாதிகள் கருதலாம்.

இவர்கள் சமாதானத்தில் எப்படி நாட்டம் கொள்வார்கள், உலக நாடுகளால் இதை புரிந்து கொள்ள முடியவில்லையா? பயங்கரவாதம் என்று பூச்சாண்டி காட்டி சில தமிழர்களினதும் சில முஸ்லிம்களினதும் உதவியுடன் இந்த நாட்டின் பூர்வீகத் தமிழ் இனத்தை இல்லாதொழிக்கும் பேரினவாதத்துக்கும் அரச பயங்கரவாதத்துக்கும் சர்வதேச சமூகமும் அயல் நாடான இந்தியாவும் துணை நிற்கிறதே என்பது தான் வேதனையிலும் வேதனை.

ஆனால் கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும் என்ற பாரதியின் வாக்கு தமிழ் இனத்திற்கு மன உறுதியைக் கொடுக்க வேண்டும்.

27-01-2001



படிப்பகம்

www.padippakam.com



## நம்பிக் கெட்டவர்கள் யார்?

போர் நிறுத்தம் பேச்சுவார்த்தை என்ற பேச்சுத் தொடங்கியதும் விடுதலைப் புலிகளை நம்ப முடியாதென்றும் அவர்களின் கடந்தகால நடவடிக்கைகள் இதற்கு ஆதாரமென்றும் ஜனாதிபதி சந்திரிகா முதல் பேரினவாதிகள், பேரினவாதப் பத்திரிகைகள் வரை குரல் கொடுக்கத் தவறுவதில்லை.

யார் யாரை நம்பினார்கள், நம்பிக்கைக்கு மாறாக நடந்து கொண்டவர்கள் யார், நம்பிக் கெட்டவர்கள் யார்? இலங்கைக்கு பிரிட்டிஷார் சுதந்திரம் வழங்க முன் வந்த போது தமிழ் மக்களுக்குள்ள உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமானால் பாராளுமன்றத்தில் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் சம பலப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமென்று ஜி..ஜி.. பொன்னம்பலம் கோரிக்கை வைத்தார்.

இதை ஐம்பதுக்கைம்பது என்று சிங்களத் தலைவர்கள் கிண்டல் செய்தனர். இக்கோரிக்கைக்காக வாதாட ஜி..ஜி. லண்டன் சென்றார். இலங்கையின் முதல் பிரதமமந்திரி டி.எஸ்.சேனநாயக்க மற்றைய தமிழ்த் தலைவர்களிடம் சிங்களவர்களுக்குள்ள அனைத்து உரிமைகளும் தமிழர்களுக்கு இருந்து வரும் என்று வாக்குறுதியளிக்க அவர்களும் அதை நம்பிக் கையெழுத்து வைக்க தமிழர் சம்மதத்துடன் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது.

பாகிஸ்தானின் ஜின்னா போல் அன்றே தமிழர் தாயகத்துக்கு சுயநிர்ணய உரிமையோ சுதந்திரமோ தமிழர் எல்லோருமே ஒன்று சேர்ந்து கேட்டிருந்தால் இன்றைய அவலநிலை ஈழத்தமிழருக்கு ஏற்பட்டிருக்காது. சுதந்திரம் கிடைத்து



படிப்பகம்

www.padippakam.com



ஓராண்டுக்குள்ளாகவே மலையகத் தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டது. அன்றும் தமிழர் ஒற்றுமைப்படவில்லை. இந்த நிலையில் தான் தமிழ் மக்கள் தமது மொழி, பிரதேசம், கலை, பண்பாடு, ஆகியவற்றைப் பாதுகாக்கவும் பேணவும் இணைப்பாட்சி என்ற சமஷ்டி ஆட்சி அமைப்பு வேண்டுமென்று கோரி தந்தை செல்வா தலைமையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தோன்றியது.

இக்கோரிக்கையை ஜனநாயக ரீதியில் பெறுவதற்கு தமிழரசுக் கட்சி முனைந்தது. டி.எஸ்.சேனநாயக்க கொடுத்த வாக்குறுதிக்கு மாறாக தமிழ் மொழிக்குரிய அந்தஸ்தை இல்லாமல் செய்து சிங்களம் மட்டுமே இலங்கையின் ஒரேயொரு உத்தியோக மொழி எனப் பிரகடனப்படுத்தும் சிங்களம் மட்டும் சட்டத்தை 1956ம் ஆண்டில் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க கொண்டு வந்தார்.

இதே சமயம் உணவில் தன்னிறைவு என்ற கோஷத்துடன் டி.எஸ். சேனநாயக்க கிழக்கில் ஆரம்பித்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நீடித்து தமிழ் மண் அபகரிப்புத் தொடர்ந்தது. இந்த நிலையில் ஜனநாயக முறையில் உரிமைகளைப் பெறுவதற்கு உதவியாக பாராளுமன்றத்துக்கு வெளியேயும் காந்தீய வழியில் அஹிம்சைப் போராட்டங்களை தமிழ் அரசுக் கட்சி தலைமை தாங்கி நடத்தியது.

ஜனநாயக ரீதியில் வடக்கு கிழக்குத் தமிழ் மக்களின் ஆணையைத் தமிழ்ப் பிரதிநிதிகள் பெற்றுப் பாராளுமன்றத்துக்கு வந்த போதிலும் ஜனநாயக முறையில் தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை பெரும்பான்மை ஜனநாயகம் நிராகரித்தது. சிங்களப் பெரும்பான்மை ஜனநாயகத்திடம் தமிழ் சிறுபான்மை ஜனநாயகம் ஒவ்வொரு தேர்தலின் பின்னரும் பாராளுமன்றத்தில் தோல்வியையே கண்டது. ஜனநாயக முறையில் உரிமைக் கோரிக்கை வெற்றி பெறாததால் இந்தியாவில் காந்தி கண்ட வெற்றியை நினைத்து இங்கும் தமிழரசுக் கட்சியினர் அஹிம்சைப் போராட்டம் தொடங்கி நடத்தினர். ஆனால் சிங்கள அதிகார பீடம் குண்டர்களின் துணையுடன் நிராயுதபாணிகளான தமிழ் அஹிம்சைப் போராளிகள் மீது ஆயுதபலத்தைப் பிரயோகித்து அடக்கி ஒடுக்கியது.

இதனைத் தொடர்ந்து சிங்களப் பேரினவாதிகள் தமிழ் இனத்தையே உரிமைக்குரல் கொடுக்காமல் தடுக்கவும் அடக்கி ஒடுக்கவும் தமிழ் மக்களைத் தங்கள் சொந்த இடங்களிலிருந்து அடித்து விரட்டவும் திட்டமிட்டு முதலில்



படிப்பகம்

www.padippakam.com



1956ஆம் ஆண்டில் அம்பாறை இங்கினியாகலையிலும் 1958ம், 77ம், 83ம் ஆண்டுகளில் நாடு முழுவதிலும் தமிழ் மக்களுக்கு எதிராக இனக்கல-வரங்களைத் தூண்டித் தமிழர்களுக்கு உயிரழிவையும் உடமை அழிவையும் ஏற்படுத்தினார்கள்.

பேரினவாதப் பயங்கரவாதமும் அரச பயங்கரவாதமும் இணைந்து தமிழரின் அழிப்பிலீடுபட்டதைத் தொடர்ந்து தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடி இந்த அழிவைத் தடுத்து நிறுத்தினர். பேரினவாதப் பயங்கரவாதம் தடுத்து நிறுத்தப்பட்டதால் அதை மீண்டும் பெரிய அளவில் நடத்தி தமிழரின் அழிப்பில் வெற்றி பெறுவதற்காக தமிழரின் உரிமைப் போராட்டத்தையும் தற்பாதுகாப்பையும் "பயங்கரவாதம்" என்று முத்திரை குத்தி உலகெங்கும் பிரச்சாரம் செய்து ஆயுத பலத்தையும் பெருக்கி வருகிறது அரசு.

இப்பொழுது பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயரில் படை திரட்டும் பணியுடன் சிங்கள மக்கள் மத்தியில் மீண்டும் இன வெறியைத் தூண்டி இராணுவ மயப்படுத்தலுடன் தமிழ் இன ஒழிப்புத் திட்டமும் பேரினவாதிகளின் பின்னணியில் செயல்படத் தொடங்கிருப்பதற்கான அறிகுறிகள் வெளிவருகின்றன.

1958 முதல் 1983ம் ஆண்டு வரையான இனக்கலவரங்களைப் போல இப்பொழுது தொடங்கினால் விடுதலைப் புலிகளிடம் ஆயுதம் இருப்பதாலும் தென்னிலங்கையில் தமிழரைக் குடிவைத்து அதிக வாடகை பெற்றுப் பிழைக்கும் சிங்கள மக்களின் எதிர்ப்பையும் தேட வேண்டியிருப்பதாலும், மீண்டும் ஒரு இனக்கலகம் வந்தால் உலக நாடுகளின் ஆதரவுடன் தமிழ் ஈழம் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டு விடுமென்பதாலும் புதிய வியூகத்துடன் தமிழ் இன ஒழிப்புக்குத் திட்டமிடப்படுவதாகவே தோன்றுகிறது.

இனத்துவேஷத்துடன் இராணுவ மயப்படுத்தி பயங்கரவாத ஒழிப்பு என்ற போர்வையில் தமது திட்டத்தை நிறைவேற்ற அவர்கள் ஒன்றிணைந்-துள்ளனர். ஆனால் தமிழர்களோ, தமிழரையும், மண்ணையும் பாதுகாக்க.....?

நம்பிக்கைக்குரியவர்கள் யார், நம்பிக் கெட்டவர்கள் யார்?....

02-02-2001



படிப்பகம்

www.padippakam.com



# நல்ல சந்தர்ப்பம் இது!

இலங்கை சுதந்திரம் அடைந்து 53ஆவது ஆண்டு விழாவான இன்று அதனை இலங்கை அரசும் பெரும்பான்மைச் சமூகமும் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றது.

1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதி பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இலங்கையில் தமக்கிருந்த ஆதிக்கத்தைக் கையளித்து விட்டு வெளியேறினர்.

இந்தக் கையளிப்பு நிகழ்ச்சியில் லண்டனில் இருந்து மகாராணியின் சார்பில் வந்த பிரிட்டிஷ் கோமகன் கலந்து கொண்டு சுதந்திர இலங்கையின் முதல் பிரதமரான டி.எஸ்.சேனநாயக்கவிடம் ஆட்சியைக் கையளித்தார்.

இலங்கை சுதந்திரம் பெற்ற தினத்திற்கு ஐந்து தினங்களுக்கு முன்னர் தான் இந்தியாவில் காந்தி மகாத்மா சுட்டுக் கொல்லப்பட்டார்.

காந்தி மகாத்மா கொல்லப்பட்ட செய்தி இலங்கையில் தமிழ் மக்களை ஆறாத்துயரில் ஆழ்த்தியது. அவர்கள் அழுது புலம்பினர். உறவினர் ஒருவர் மாண்டது போல் தொடர்ந்து ஒரு மாத காலத்துக்கு துக்கம் அனுஷ்டித்தனர்.

தமிழ் மக்கள் காந்தி மகாத்மாவின் மறைவுக்காக அனுஷ்டித்த துக்கம் இலங்கையின் சுதந்திர தினத்திலும் துக்கம் கொண்டாட வைத்தது.

முதல் சுதந்திர தினத்தன்று தமிழர் அனுஷ்டித்த துக்கம் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கிய பிரிட்டிஷார் திருகோணமலைக் கடற்படைத் தளத்தையும், நீர்கொழும்பு விமானப்படைத்தளத்தையும் அன்று தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்..

சுதந்திரம் கிடைப்பதற்கு முன் தமிழருக்கு சிங்களவருடன் பாராளுமன்றத்தில் சம பல பிரதிநிதித்துவம் வேண்டும் என ஜி..ஜி..பொன்னம்பலம் கூறி லண்டனில் வாதாடுவதற்காக சென்றிருந்த சமயம் டி.எஸ்.சேனநாயக்கா கொடுத்த வாக்குறுதியை நம்பி சுதந்திரத்தை வரவேற்றுக் கையொப்பம் இட்ட தமிழ்த் தலைவர்களில் ஒருவரான வவுனியா செல்லப்பா சுந்தரலிங்கம், திருகோணமலை கடற்படைத் தளத்தை 1957ஆம் ஆண்டில் பண்டாரநாயக்கா இலங்கை அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என கோரிய போது எதிர்த்தார்.



படிப்பகம்

www.padippakam.com



தமிழ் மக்களின் சம்மதமின்றி திருகோணமலைக் கடற்படைத் தளத்தை இலங்கை அரசிடம் கொடுக்கக் கூடாதென்று தமிழ் மக்கள் பிரிட்டிஷ் அரசுக்குத் தந்திகள் அடிக்க வேண்டுமென்று சுந்தரலிங்கம் கோரிக்கை விடுத்தார். இதே சமயம் 1948ஆம் ஆண்டில் பெற்றது முழுமையான சுதந்திரமல்லவென்றும் திருமலைக் கடற்படைத் தளமும், நீர்கொழும்பு விமானப்படைத்தளமும் இலங்கையிடம் ஒப்படைத்தாலே சுதந்திரம் முழுமை-யடையுமென்றும் பண்டாரநாயக்கா வலியுறுத்தி வந்தார்.

திருமலைக் கடற்படைத் தளத்தைத் தமிழ் மக்கள் சம்மதமின்றி கையளிக்கக் கூடாதென்று கூறிய சுந்தரலிங்கத்தை ஏகாதிபத்திய அடிவருடி என்று சிங்கள மக்கள் கிண்டல் செய்தனர். சுந்தரலிங்கம் கேட்டுக் கொண்டபடி தமிழ் மக்களும் லண்டனுக்குத் தந்தியடிக்க முன்வரவில்லை.

1948இல் சமபலப் பிரதிநிதித்துவத்தை ஆதரிக்காத தமிழ்த்தலைவர்களில் ஒருவர். 1956இல் திருமலைக் கடற்படைத் தளத்தையாவது தடுத்து நிறுத்தி திருமலையைக் காப்பாற்றலாமென நினைத்ததும் நடக்கவில்லை.

1948ஆம் ஆண்டிலேயே அன்றைய தமிழ்த் தலைவர்கள் எதிர்காலம் பற்றிச் சிந்தித்து ஒற்றுமையுடன் செயற்பட்டிருந்தால் இன்று ஈழத்தமிழருக்கு இந்த அவலநிலை ஏற்பட்டிருக்குமா?

போனது போகட்டும் தமிழன் இன்றுள்ள அவல நிலையை நீக்குவதற்காகவாவது இன்றைய தமிழர்கள் ஒற்றுமைப்பட வேண்டாமா? ஒன்று சேர வேண்டாம் இடையூறாவது செய்யாமலிருக்க வழி காண வேண்டாமா?

ஜனநாயக ரீதியாக தமிழ் மக்கள் உரிமையுடன் வாழ்வதற்காக நடத்திய போராட்டங்கள் பெரும்பான்மை ஜனநாயகத்தினால் நிராகரிக்கப்பட்டன.

காந்திய வழியில் நடத்திய அஹிம்சைப் போராட்டங்கள் பேரினவாதக் குண்டர்களினாலும், அரசின் துணையுடன் கூடிய ஆயுத பலத்தினாலும் அடக்கி ஒடுக்கப்பட்டன.

இதன் பின்னர் தான் தங்கள் நிலத்தையும், மக்களையும் பாதுகாத்து சுதந்திரமாக வாழ்வதற்கு தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடத் தொடங்கினர். இன்று இந்தப் போராட்டம் "பயங்கரவாதம்" என்று கொச்சைப்-



படிப்பகம்

www.padippakam.com



படுத்தப்பட்டு உலகெங்கும் பிரச்சாரம் செய்து "சுதந்திரம், சுயநிர்ணய உரிமை" என்று பேசுவதற்கே சுதந்திரம் இல்லாமல் அடக்கி ஒடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் தான் பெரும்பான்மைச் சமூகம் இன்று சுதந்திரத்தைக் கொண்டாடுகிறது. தமிழ்த்தேசிய இனமான இலங்கையின் பூர்வீகக் குடிமக்கள் சுதந்திரம் என்று பேசவே முடியாத நிலையில் எதிர்காலம் பற்றி ஏங்கிக் கொண்டிருக்கின்றனர்.

பெரும்பான்மை மக்கள் கூட இன்று பொருளாதாரத்தில் நசுக்கப்பட்டு பொருளாதார சுதந்திரம் எப்போது கிடைக்கும் என்ற ஏக்கத்தடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

பேரினவாதிகளுக்கும் "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள" நினைப்பவர்களுக்கும் இன்றைய நிலை சாதகமாக இருக்கலாம். ஆனால் இது என்றுமே நீடிக்கும் என்று சொல்ல முடியாது.

அன்றைய தமிழ்த் தலைவர்கள் விட்ட தவறை இன்றுள்ளவர்களும் செய்து விட்டுப் பின் சிந்தித்துக் கவலையுறாமலும், தமிழ்ச் சந்ததி சாபமிடாமலும் செயல்பட வேண்டிய காலம் இது.

இன்று இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை என்று சொல்லுமளவுக்கு இல்லை. இன்று உலக நாடுகள் கவலையும் அக்கறையும் செலுத்துமளவுக்கு உலகப் பிரச்சினையாகி விட்டது. இப்பொழுது சமாதான முயற்சியில் நோர்வேயின் விஷேச தூதுவர் சில படிகளைத் தாண்டி முன்னேறிக் கொண்டிருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒருதலைப் பட்சமாக போர் நிறுத்தம் செய்து அதை மேலும் ஒரு மாதம் நீடித்து சமாதானப் பேச்சுவார்த்தைக்கு விட்டுக் கொடுத்து நல்ல வழிகாட்டியிருக்கிறார்.

இலங்கையின் சுதந்திரத்தை இந்நாட்டு மக்கள் "சுதந்திரமாகக்" கொண்டாடும் சூழ்நிலை அடுத்த ஆண்டிலாவது நிகழ்வதற்கு பெரும்பான்மைச் சமூகத் தலைவர்கள் தான் இனி வழி வகுக்க வேண்டும். நல்லதே செய்வார்களென்று எதிர்பார்ப்போம். சொல்ஹெய்மின் முயற்சி தொடரும் நல்ல சந்தர்ப்பமும் இதுவே தான்.

04-02-2001



படிப்பகம்

www.padippakam.com



## தீர்வு எப்படி அமைதி எப்போது?

இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் நிரந்தரமான சுமுகமான தீர்வு காண வேண்டுமென்பதிலுள்ள அக்கறையையும் ஆர்வத்தையும் விட, விடுதலைப் புலிகள் அமைப்பை பிரிட்டன் "பயங்கரவாத இயக்கம்" என்று முத்திரை குத்தி தடை செய்ய வேண்டுமென்பதில் தான் இலங்கை ஜனாதிபதிக்கும் அவரது அரசுக்கும் அக்கறையும் ஆர்வமும் அதிகமாக இருக்கிறது

விடுதலைப் புலிகளின் அமைப்பை பிரிட்டிஷ் அரசு பயங்கரவாத அமைப்பாக, அது தயாரிக்கும் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று சந்திரிகா அரசின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் லண்டனுக்கு நேரில் சென்று பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்து வலியுறுத்தியிருக்கிறார்.

மற்றும் பிரிட்டிஷ் அமைச்சர்களையும் கதிர்காமர் சந்தித்து விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கமென்று தடைசெய்ய வேண்டுமென்பதன் அவசியத்தை வற்புறுத்தினார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு நல்லதொரு அரசியல் தீர்வை அமைதிப் பேச்சுவார்த்தை மூலம் கண்டு நாட்டில் அமைதியை ஏற்படுத்தி நாட்டை முன்னேற்ற வேண்டுமென்பது பற்றி கதிர்காமர் தாம் சென்ற நாடுகளிலெல்லாம் வற்புறுத்தியதாகச் செய்திகள் வெளிவந்ததில்லை.



படிப்பகம்

www.padippakam.com



விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத இயக்கமென்று தடை செய்ய வேண்டுமென வற்புறுத்தியதுடன் சிறுவர்களை விடுதலைப் புலிகள் தங்கள் படைகளில் சேர்த்துக் கொள்கிறார்கள் என்று சிறுவர்களுக்காகவும் அவர் ஓலமிட்டதாகத் தான் செய்திகள் வந்தன.

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் சிறுவர்கள் உட்பட இளைஞர்கள் பாதுகாப்பையும் மீறிக் கோரமாகக் கொலை செய்யப்பட்டது பற்றியோ, மிருசுவிலில் ஐந்து வயதுப் பாலகன் கூட கழுத்து வெட்டப்பட்டுப் புதைக்கப்பட்ட அநியாயத்தைப் பற்றியெல்லாம கூட கதிர்காமர் சொன்னதில்லை. சொல்லவும் மாட்டார். இந்தக் கொடுமைகள் கதிர்காமரின் கண்ணுக்குத் தெரியவும் மாட்டாது.

இப்பொழுது விடுதலைப் புலிகளை பிரிட்டன் பயங்கரவாத இயக்கம் என்று தடை செய்வதால், விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நடைபெறுவதற்கு நோர்வே நாடு முயற்சி செய்த பேச்சுவார்த்தைகள் பாதிக்கப்பட மாட்டாது என்று இலங்கை ஜனாதிபதி சந்திரிகா கூறியிருக்கிறார்.

இதற்கு உதாரணமாக, வடஅயர்லாந்துப் பிரச்சினையில் இங்கிலாந்து பேச்சுவார்த்தை நடத்தியதை சந்திரிகா எடுத்துக் காட்டுகிறார். வட அயர்லாந்துப் பிரச்சினையை இலங்கை இனப்பிரச்சினையுடன் ஒப்பிட்டுப் பேசுவதே அர்த்தமற்றது.

இலங்கையில் தமிழ்த் தேசிய இனம் தனக்கெனப் பாரம்பரியமாக ஒரு பிரதேசத்தைக் கொண்டிருந்தது மாத்திரமல்ல, போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரிட்டிஷார் என்று அந்நியர்கள் இந்த நாட்டை ஆக்கிரமிப்பதற்கு முன் இந்தப் பிரதேசத்தின் ஆட்சியதிகாரம் தமிழர் கைகளில் தானிருந்தது என்பதற்கு ஆதாரமுண்டு.

நாட்டுக்கு வெள்ளையர்கள் சுதந்திரம் கொடுத்த போது இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை ஏற்றுக் கொண்டவர்கள் தமிழ் மக்களுக்கு எதிராக எந்தவித பாகுபாடும் காட்டப்படமாட்டாதென்றும் அனைத்து மக்களும் சமமாகவே மதித்து நடத்தப்படுவார்கள் என்றும் வாக்குறுதியளித்திருந்தனர். பெரும்பான்மைச் சமூகத் தலைவர்களின் வாக்குறுதியை நம்பித் தமிழ்த் தலைவர்கள் ஒத்துழைப்பு வழங்கினார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



சுதந்திரம் பெற்றபின் தமிழ் மக்களின் உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டன. அவர்களின் தாயக பூமியாகிய வடக்குக் கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் அவர்களின் மண் அபகரிக்கப்பட்டது. இன்று தமிழர்களுக்கென தாயக பூமி என்று ஒன்று இல்லையென்று கூறுமளவுக்கு இனக்கலகங்கள் தூண்டிவிடப்பட்டன. இன்று பயங்கரவாதிகளுக்கு எதிரான தாக்குதல் என்று காரணம் காட்டியும் தமிழ் மக்கள் தங்கள் சொந்த இடங்களிலிருந்து விரட்டப்பட்டு அநாதைகளாக அகதிகளாக அலைந்து திரிய திட்டமிட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியில் தமது உரிமைகளைப் பெறுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் பெரும்பான்மை ஜனநாயகத்தினால் நிராகரிக்கப்பட்டது. அகிம்சை வழியில் தமது உரிமைகளுக்காகத் தமிழ் மக்கள் போராடிய போது ஆயுத பலம் கொண்டு குண்டர்களாலும் அரச படைகளினாலும் தமிழர்களின் உயிரும் உடமைகளும் அழிக்கப்பட்டு அடக்கி ஒடுக்கப்பட்டது.

தங்கள் மக்களையும் மண்ணையும் பாதுகாக்கவும் தமது சுயநிர்ணய உரிமையை நிலை நாட்டவும் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப்-போராடுகின்றனர் இதைப் பயங்கரவாதம் என முத்திரைகுத்தி இன ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

வட அயர்லாந்துப் போராட்டத்தில் இலங்கை ஆட்சியாளர்களைப் போலவோ சிங்களப் பேரினவாதிகளைப் போலவோ இங்கிலாந்து இன அடிப்படையில் அல்லது மத அடிப்படையில் ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடவில்லையே...!

வட அயர்லாந்துப் பிரச்சினையில் அழிவுகளை நிறுத்தி உண்மையான அமைதி காண வேண்டுமென்ற ஆர்வமும் அக்கறையும் விருப்பமும் இங்கிலாந்து ஆட்சியாளருக்கும் இங்கிலாந்து மக்களுக்கும் இருக்கிறது.

இங்கு இலங்கையில் அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்பது போல் ஆட்சியாளர்கஞுக்கு இருக்கும் அழிப்பு நோக்கமே பேரினவாதிகளுக்கும் இருக்கிறது. இந்நிலையில் இங்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது எப்படி! அமைதி ஏற்படுவது எப்போது?

12-02-2001



படிப்பகம்

www.padippakam.com



## யாருக்குப் பயன்படும்?

இருபது மில்லியன் (இரண்டு கோடி) அமெரிக்க டொலர் பணத்தை இலங்கையில் "பிரிவினைவாத பயங்கரவாதிகளுக்கு" எதிராகப் போரிடுவதற்குத் தேவையான முக்கிய ஆயுதங்களை வாங்குவதற்காக பாகிஸ்தானின் இராணுவ ஆட்சி கடனாக வழங்க முன்வந்துள்ளது.

இந்தக் கடன் திட்டம் பற்றிய விபரங்கள் இப்பொழுது ஆராயப்பட்டு வருவதாக இராணுவத் தரப்பில் பேசும் அதிகாரியான பிரிகேடியர் சரத் கருணாரத்ன தெரிவித்திருக்கிறார். கடந்த வருடம் மே மாதத்தில் இலங்கை இராணுவம் ஆனையிறவில் வீழ்ந்த பின் விடுதலைப் புலிகள் முன்னேறிச் சென்றனர். அச்சமயத்தில் சுமார் நாற்பதாயிரம் படையினர் அங்கு இருந்தனர்..



படிப்பகம்

www.padippakam.com



இவ்வேளை இலங்கை உதவி கோரிய போது முதலில் உதவிக்கு ஓடி வந்த நாடுகளில் பாகிஸ்தானும் ஒன்று.

பல்குழல் எறிகணைகள் உட்பட பல சாதனங்களை பாகிஸ்தான் கடந்த காலங்களில் இலங்கைக்கு வழங்கியிருக்கிறது. இலங்கை பாகிஸ்தானின் பக்கம் அதிகமாகச் சாய்ந்து விடுமோ என்ற அச்சத்தில் தான் இந்தியா பின்னர் இலங்கைக்கு "மனிதாபிமான உதவியாக" பீரங்கிகள் பொருத்தப்பட்ட கப்பல்களையும், பணத்தையும் வழங்கி உதவியதாகக் கருதப்படுகிறது.

இப்போது இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் நிரந்தரமான அமைதித்தீர்வு காண்பதற்காக இருதரப்பும் ஏற்றுக் கொண்ட நோர்வே நாடு சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. பேச்சுவார்த்தை எப்போது தொடங்கும், நாட்டில் மீண்டும் அமைதி ஏற்படுமா? என்று இலங்கை மக்கள் குறிப்பாக தமது சொந்த நாட்டிலேயே அநாதைகளாக, அகதிகளாக அலைந்து திரியும், தமிழ் மக்கள் ஆவலோடும், ஏக்கத்தோடும் எதிர்பார்த்து நிற்கும் சமயம் இது.

இந்தச் சமயம் இரண்டு கோடி அமெரிக்க டொலர் பணத்தை போருக்கு அவசியத் தேவையான ஆயுதங்களை பாகிஸ்தான் வழங்குவதற்கு முன் வந்திருக்கிறது. கடன் வழங்கும் நாடுகளும் உதவி வழங்கும் நாடுகளும் கூட இவற்றிற்குரிய பணத்துக்குத் தங்கள் நாட்டுப் பொருட்களையே விலைக்குக் கொடுப்பது தான் வழக்கம்.

பாகிஸ்தானிலும், நிறையப் போருக்கான ஆயுதங்கள் இருக்கின்றன. இன்னமும் அணு ஆயுதங்களையும் கூட பாகிஸ்தான் தயாரித்துக் கொண்டிருக்கிறது. தனது ஆயுதங்களைத் தவணைக் கடனில் இலங்கைக்குக் கொடுப்பதற்கு வியாபார ரீதியிலும் பாகிஸ்தான் முன்வந்திருக்கலாம். இலங்கைக்கு உதவி செய்வதன் மூலம் இலங்கையுடன் நெருங்கிய நட்புறவைப் பலப்படுத்திக் கொள்ளவும் பாகிஸ்தான் முன்வந்திருக்கலாம்.

பாகிஸ்தான் தனி நாடாகப் பிரிந்த காலம் தொட்டு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமுள்ள உறவு சீர் குலைந்தே இருக்கிறது. இரண்டு தடவைகள் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் போரும் நடந்திருக்கிறது. இனியும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் எச் சமயத்தில் மோதல் ஏற்படுமென்றும் சொல்ல முடியாது.



படிப்பகம்

www.padippakam.com



இரு நாடுகளுமே தங்கள் நாட்டில் கலகத்தைத் தூண்டி விடுவதாக பரஸ்பரம் குற்றச்சாட்டுகளைச் சுமத்தத் தவறியதில்லை. காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணாத வரை இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நெருங்கிய நட்புறவு ஏற்படுவதற்கான வாய்ப்பில்லை, காஷ்மீர் பிரச்சினை தீர்வதற்கான சந்தர்ப்பமும் சாத்தியமும் தோன்றவில்லை.

இந்நிலையில் இலங்கையுடன் நட்புறவைப் பலப்படுத்திக் கொள்ள பாகிஸ்தான் விரும்புவதும் அதற்கான முயற்சிகளை மேற்கொள்வதும் இயல்பு. சீனாவுடன் இந்தியாவுக்கு முன்னர் போல் ஆத்மார்த்தமான நட்பு இல்லை. பாகிஸ்தானுக்கும் சீனாவுக்குமிடையில் நெருங்கிய நட்புறவு இருக்கிறது.

எனவே, தனது அயல் நாடுகளுடன் பாகிஸ்தான் நட்புறவை வளர்த்துக் கொள்வதற்கு முயற்சி செய்வதும் உதவி செய்வதும் இயல்பே. பாகிஸ்தான் பக்கமோ, சீனா பக்கமோ, இலங்கை சாய்ந்து விடக்கூடாதே என்று இந்தியாவும் இலங்கை அரசுக்கு சகல உதவிகளையும் செய்யத் தொடங்கி விட்டது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கையுடன் வர்த்தக ஒப்பந்தமும் செய்து இந்தியப் பொருள்கள் தாராளமாக இலங்கையில் குவிவதற்கும் வழி கண்டிருக்கிறது.

பாலஸ்தீனத்தில் அராபியர்களைக் கொன்று குவித்து, அராபியர்களின் இடங்களையும் ஆக்கிரமித்துள்ள இஸ்ரேலும் இலங்கைக்கு உதவி செய்கிறது. ஆயுதங்கள் வழங்குகிறது. இத்தனை பெரிய நாடுகளும் அரசுகளும் இலங்கைக்கு ஆயுதங்கள் வழங்கி ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்குத் தயாராக இருக்கும் போது இலங்கைக்கு என்ன குறை...!

வாழ்க்கைச் செலவுப் பழுவால் நிமிர முடியாமல் பட்டினி கிடக்கும் மக்கள் பல குழல் எறிகணையையும் துப்பாக்கிக் குண்டுகளையும் மற்றும் வெடி மருந்துகளையும் சாப்பிட்டுப் பசியாற முடிந்தால் இலங்கையில் விவசாயம், கடற்றொழில் என்று எதுவுமே தேவைப்படாது.

சுண்டைக்காயளவு இலங்கையில் தாம் பாதுகாப்பாகவும் கௌரவமாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதற்காகப் போராடும் சில ஆயிரக்கணக்கான தமிழ்ப் ‘‘பொடியன்களுக்கு’’ எதிராக இத்தனை அரசுகள் கொடுக்கும் ஆயுதங்களும் பின்னர் யாருக்கு எதிராக, எதற்காகப் பயன்படப் போகின்றனவோ?

15-02-2001



படிப்பகம்

www.padippakam.com



## பயங்கரவாதத்தில் பயங்கரவாதம்

தென்னிலங்கையில் தலங்கமை என்ற இடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஒரு விடுதிக்குள் புகுந்த ஆயுதம் தாங்கிய கொள்ளைக் கோஷ்டி ஒன்று அங்கிருந்து பணம், நகைகள், செலுலார் தொலைபேசிகள் ஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

நேற்று முன்தினம் கொழும்புக்கும் பதுளைக்கும் இடையே வட்டகொடை என்ற இடத்துக்குச் சமீபத்தில் தபால் ரயில் வண்டி தடுத்து நிறுத்தப்பட்டு ஆயுதம் தாங்கிய பத்துப்பேர் கொண்ட ஒரு கும்பல் பிராயாணிகளிடமிருந்து பணம் மற்றும் ஆபரணங்களையும் கொள்ளையடித்துச் சென்றிருக்கிறது.

கொள்ளைக் கும்பலின் முரட்டுத்தனத்தினால் ஒரு குழந்தை உட்பட பத்துப்பேர் காயமடைந்து நுவரெலியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளத்துக்குச் சமீபத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு கைது செய்யப்பட்ட கொள்ளைக் கோஷ்டி ஒன்றிடமிருந்து றொக்கட் லோஞ்சர் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



இராணுவத்திடமிருந்து பெறப்பட்ட சுமார் ஐநூறு மீற்றர் தூரத்துக்குள் இலக்கொன்றைத் தாக்கக் கூடிய றொக்கட் லோஞ்சர் ஒன்றும், ரி 56 ரக துப்பாக்கிகள், அதற்கான ரவைகள், கிரனைட்டுகள், ரம்போ கத்திகள் என பலதரப்பட்ட ஆயுதங்கள் இந்தக் கும்பலிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

சில தினங்களுக்கு முன் கொழும்பு திருகோணமலை ரயிலிலும் பிரயாணிகளிடமிருந்து ஆயுதக் கும்பல் ஒன்று பணத்தையும் நகைகளையும் கொள்ளையடித்தது. சில வாரங்களுக்கு முன் தபால் ரயிலில் தபால் பைகள் கொள்ளையடிக்கப்பட்டன. சம்பளப் பணம் என்பனவும் கொள்ளையிடப்பட்டன.

சில தினங்களுக்கு முன் கொழும்பு நகரில் பொறளையில் கொரியாவைச் சேர்ந்த ஒருவர் கட்டுநாயக்காவிலிருந்து கொழும்புக்கு வந்து சேர்ந்த போது ஆயுதக் கும்பல் ஒன்று ஆயுத முனையில் அவரது பஜிரோ ஜீப் வண்டியைக் கடத்திச் சென்றது.

கடந்த சில மாதங்களாகவே கொழும்பிலும் தென்னிலங்கையிலும் மற்றும் பகுதிகளிலும் கொள்ளைகளும் கொலைகளும் அதிகரித்து வருகின்றன.

பெண்கள் தனியாக இருக்கும் வீடுகளுக்குள்ளும் இந்த ஆயுதக் கும்பல்கள் நுழைந்து பெண்களைக் கட்டி வைத்துக் கொள்ளை அடித்திருக்கின்றன. பாலியல் வல்லுறவுச் சம்பவங்களும் பல இடங்களில் நடந்திருக்கின்றன.

இந்தக் கொலை கொள்ளைச் சம்பவங்களில் அகப்பட்டவர்களில் இராணுவத்தில் சேர்ந்து "பயங்கரவாதிகளை" எதிர்த்துப் போராடி நாட்டைக் காப்பற்றுவதற்கு "தேசவிசுவாசத்துடன்" சேர்ந்து பின்னர் ஆயுதங்களுடன் தப்பியோடியவர்களும் உள்ளனர். புத்தளத்துக்குச் சமீபத்தில் "ரொக்கட் லோஞ்சருடன்" அகப்பட்டவர்களிலும் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களும் இருந்தனர்.

இச்சம்பவங்கள் வடக்கில் அல்லது கிழக்கில் அல்லது வடகிழக்கு எல்லைக் கிராமங்களில் நடைபெற்றிருந்தால் "விடுதலைப் புலிகள்" தான் இந்தக் கொலைகளுக்கும் கொள்ளைகளுக்கும் காரணமென்று முத்திரை குத்தியிருப்பார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



சமீபத்தில் திருகோணமலையில் "கம்பியூட்டர்" சாதனங்கள் சில கொள்ளையடிக்கப்பட்டன. கொழும்பிலிருந்து வெளிவரும் "தி ஐலண்ட்" என்ற ஆங்கிலத் தினசரியும் அதன் சகோதரத்துவப் பத்திரிகையான "திவயினவும்" விடுதலைப் புலிகள் தான் இவற்றைக் கொள்ளையடித்தனர் என்று முதல் பக்கச் செய்தியாக வெளியிட்டன. தென்னிலங்கையில் இக்கொலை கொள்ளைச் சம்பவங்கள் நடைபெறுவதால் புலிகள் மீது பழி போட முடியவில்லை.

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களில் மொத்தத் தொகையினர் எவ்வளவு என்று இன்னமும் அறிவிக்கப்படவில்லை. அவர்கள் கொண்டு சென்ற ஆயுதங்கள் எவ்வளவு? என்ன விதமான ஆயுதங்களை அவர்கள் கொண்டு சென்றார்கள் என்பதற்கு எந்த அறிவிப்பும் இல்லை.

"பயங்கரவாத ஒழிப்பு" என்று உலகெங்கும் சென்று "ஐயோ ஆயுதம் கொடுத்துக் காப்பாற்றுங்கள்" என்று உலக நாடுகளிடமெல்லாம் இருந்து கேட்டுப் பெற்ற ஆயுதங்கள் இப்போது நாட்டில் கொலைக்கும் கொள்ளைக்கும் தான் பயன்படுகின்றன.

உள்நாட்டில் தமிழர், சிங்களவர், இஸ்லாமியர் என்று வேற்றுமை பார்த்தா இந்த ஆயுதக் கும்பல்கள் கொலையிலும், கொள்ளையிலும் ஈடுபடுகின்றன, வெளிநாட்டவர்களைக் கூட இவர்கள் விட்டுவைக்கிறார்களா?

ஹோட்டல் நடத்தி வந்த ஜேர்மனியர் கொலை செய்யப்பட்டார்; அவரது மகள் மானபங்கம் செய்யப்பட்டாள், கொரியாக்காரரின் வாகனம் கடத்தப்பட்டது. வாய்ப்புக் கிடைத்தால் அரசு சொல்லும் "பயங்கரவாதி" வீட்டிலும் இவர்கள் கொள்ளையடிப்பார்கள். "பயங்கரவாத கனவுகளை" ஒழிப்பதற்குப் புறப்பட்ட இவர்கள் தான் இன்று மிகப்பெரிய பயங்கரவாதிகளாக உருவாகியிருக்கிறார்கள்.

கணக்கு வழக்கில்லாமல் ஆயுதங்களைச் சில நாடுகள் அள்ளிக் கொடுக்கின்றன. பயங்கரவாத ஒழிப்புக்குப் பதிலாகப் பெரிய பயங்கரவாதம் உருவாகிப் பூதமாக வளர்ந்து வருகிறது. இதை இனிக்கட்டுப்படுத்துவது சுலபமல்ல. இனியாவது சிங்கள மக்கள் விழித்துக் கொள்வார்களா?

16-02-2001



படிப்பகம்

www.padippakam.com



## நல்லதாகத் தோன்றவில்லையே!

சில வருடங்களுக்கு முன் இலங்கையில் இல்லாத ஒன்றைக் கற்பனை செய்து ஒரு பத்திரிகை நிறுவனத்தைச் சார்ந்த சிங்கள ஆங்கில வெளியீடுகள் தொடர்ச்சியாகச் செய்திகளை வெளியிட்டு வந்தன.

''நாம் தமிழர்'' இயக்கம் வேகமாகப் பரவுகிறதென்றும் தோட்டப்-பகுதிகளில் இரவிரவாகவும் ஆலயங்களிலும் இந்த இயக்கத்தின் இரகசியக் கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவென்றும் செய்திகள் வெளி வந்து கொண்டிருந்தன.

'தவச குரூப்' பத்திரிகைகளில் ஒரு நாளைக்கு ஒரு செய்தியாவது



படிப்பகம்

www.padippakam.com



“நாம் தமிழர் இயக்கம்” பற்றி வராமலிருந்ததில்லை. 1970ம் ஆண்டு-களிலிருந்து 1971ம் ஆண்டின் முற்பகுதி வரை இந்தச் செய்திகள் வந்து கொண்டிருந்தன. தமிழ் நாட்டில் சி.பா. ஆதித்தனார் “நாம் தமிழர் இயக்கம்” என்ற ஓர் இயக்கத்தை ஆரம்பித்து அரசியலிலும் சமூகமட்டத்திலும் சில சாதனைகளைச் செய்தவர்.

ஆதித்தனார் இந்த இயக்கத்தை இலங்கையில் பரப்ப வேண்டுமென்று விரும்பியதில்லை. திராவிடர் கழகம் திராவிட முன்னேற்றக் கழகங்களின் பகுத்திறிவுக் கொள்கைகள் இலங்கையில் முன்னரே பரவத் தொடங்கியிருந்தன.

இந்திய விடுதலைக்காகப் போராடிய இந்திய தேசிய காங்கிரஸின் விடுதலைப் போராட்டத்துக்கு இலங்கையில் பெரும் ஆதரவு இருந்தது. காந்தி, நேரு போன்ற தலைவர்கள் இலங்கைக்கு வருகை தந்து சுதந்திர தாகத்தை இங்கேயும் ஏற்படுத்தி தமது விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு திரட்டினர்.

இந்திய தேசிய காங்கிரஸின் விடுதலைப் போராட்டம் தான் இலங்கையில் விடுதலைக் குரலுக்கு உந்து சக்தியாக விளங்கியது. இதன் விளைவாகத் தான் “யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ்” விடுதலைக் குரலோடு தோன்றியது. ஆனால் 1970களில் “தவச குரூப் பத்திரிகைகள்” “நாம் தமிழர் இயக்கம்” என்ற பெயரை வைத்து வெளியிட்ட செய்திகள் எல்லாம் தமிழர்களுக்கு எதிரான ஒரு பிரசாரத்தை நோக்கமாகக் கொண்டிருந்தது.

இக்கால கட்டத்தில் கொள்ளைகளும், வன்செயல்களும் சில சில இடங்களில் தலையெடுத்தன. இச்சம்பவங்களுக்கும் நாம் தமிழர் இயக்கத்துக்கும் இந்தப் பத்திரிகைகள் முடிச்சுப் போட்டன.

இந்தப் பத்திரிகைகள் இந்தப் பிரச்சாரத்தை தெரிந்தே வேண்டுமென்றே செய்தனவா அல்லது தெரியாமல் செய்தனவா என்பது இன்று வரை வெளியாகவில்லை.

இந்தப் பத்திரிகைகள் “நாம் தமிழர் இயக்க” பிரச்சாரத்தை வெளியிட்டுக் கொண்டிருக்கையில் இலங்கையில் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சியை ஆயுதக் கிளர்ச்சியால் கவிழ்த்துப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான முயற்சிகளும் ஆயத்தங்களும் நடைபெற்றுக் கொண்டிருந்தன.



படிப்பகம்

www.padippakam.com



1971ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கொழும்பிலும், கம்பஹா மாவட்டத்திலும், யாழ்ப்பாணத்திலும் ஆயுதக் கிளர்ச்சி வெடித்த போது தான் இந்த விஷயமே வெளிவந்தது.

இதன் பின்னர் உடனடியாக இந்தியா உதவிக்கு விமானப்படையை அனுப்பியது. கொழும்பில் பிரமுகர்கள் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

வடகொரியா, சீனா போன்ற நாடுகள் மீதும் இலங்கை சந்தேகம் கொண்டது. இந்த ஆயுதப்புரட்சி முயற்சி அடக்கி ஒடுக்கப்பட்டது. றோகண விஜயவீர தலைமையிலான ஜனதா விமுக்திப் பெரமுன தான் ஆயுதக்-கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கியது என்ற இரகசியம் வெளிவந்தது.

இந்தக்குட்டு அம்பலமானதும் ''நாம் தமிழர் இயக்கம்'' என்ற பிரசாரமும் ''தவசகுருப்'' பத்திரிகைகளில் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்த ''நாம் தமிழர் இயக்க'' செய்திகளும் மறைந்து விட்டன.

இப்பொழுது நிலைமை வேறு விதமாக வடிவம் பெற்றிருக்கிறது. ஜே.வி.பி. என்ற ஜனதா விமுக்தி பெரமுன அரசாங்க அலுவலகங்களில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முடுக்கிவிட்டு மூன்றாவது தடவையாக ஆயுதக்கிளர்ச்சிக்கு திட்டமிட்டு வருவதாக சிஹல உறுமய செயலாளர் குற்றம் சாட்டியிருக்கிறார்.

நாட்டின் இன்றைய நெருக்கடியான நிலையில் இனப்போருக்கு முடிவு கட்டுவதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று சிஹல உறுமய செயலாளர் கோரியிருக்கிறார்.

இவரது எச்சரிக்கையையும் அழைப்பையும் பார்த்தால் இப்போது ''கிளர்ச்சி வேண்டாம்'' என்று சொல்வதாகவே இருக்கிறது. என்றாலும் நாட்டில் குறிப்பாகத் தென்னிலங்கையில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் கொள்ளைகளைப் பார்க்கையில் எதிர்காலம் நல்லதாகத் தோன்றவில்லை.

எத்தனை காலத்துக்குத் தான் ''புலிப் பயங்கரவாதிகளை'' சொல்லிக் கொண்டிருப்பது...?

17-02-2001



படிப்பகம்

www.padippakam.com



## இதுதானா ஜனநாயகம்?

பயங்கரவாத இயக்கங்கள் என்று பிரிட்டிஷ் அரசு தயாரித்து வெளியிடவிருக்கும் பட்டியலில் விடுதலைப் புலிகள் அமைப்பின் பெயரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், விடுதலைப் புலிகளை பிரிட்டிஷ் அரசு பிரித்தானியாவில் தடை செய்ய வேண்டும் என்றும் இலங்கை அரசு பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கோரி வருகிறது.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அமைதியாகப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு இரு தரப்பும் அனுசரணையாளராக ஏற்றுக் கொண்ட



படிப்பகம்

www.padippakam.com



நோர்வே நாடு சமாதான முயற்சிகளைத் தொடங்கிய சமயத்திலேயே விடுதலைப் புலிகளை பிரிட்டன் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை இலங்கை அரசு முன்வைத்தது.

சந்திரிகா அரசின் வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் லண்டனுக்குச் சென்று பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் உட்பட பல அமைச்சர்களையும் சந்தித்து விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இலங்கையிலும் இந்தக்கோரிக்கையை கதிர்காமரும் மற்றும் ஆட்சி பீடத்தில் உள்ளவர்களும் உரக்க வலியுறுத்தினர். பிரித்தானியாவில் உள்ள சிங்கள சமூகத்தவர்களும் இலங்கையிலுள்ள பெரும்பான்மையின அரசியல் கட்சிகளும் ‘விடுதலைப் புலிகளை பிரிட்டன் பயங்கரவாத இயக்கம்’ என்று பிரகடனப்படுத்தி தடை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தன.

மனுக்களும், கடிதங்களும் பிரிட்டனுக்கும், உள்நாட்டிலுள்ள பிரிட்டிஷ் தூதரகங்களுக்கும் போய் சேரத் தொடங்கின. உள்நாட்டில் ஜனாதிபதி சந்திரிகாவே விடுதலைப் புலிகளை பிரித்தானிய அரசு ‘பயங்கரவாத இயக்கம்’ என்று தடை செய்ய வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார்.

அமைச்சர் கதிர்காமரோ விடுதலைப் புலிகளை பிரிட்டன் தடை செய்யாவிட்டால் இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் பாதிக்கும் என்று மிரட்டினார். விடுதலைப் புலிகளை தடை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை சிங்களப் பத்திரிகைகளிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் ஒரு பெரும் இயக்கமாக வளர்ந்து வருவது கண்டு தமிழ் பல்கலைக்கழக மாணவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்ய வேண்டாமென்றும் சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க உதவி செய்யுமாறு கோரியும் பிரிட்டிஷ் அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.

சிஹல உறுமய என்ற ஒரு இனவாத அரசியல் கட்சி விடுதலைப் புலிகளை பிரிட்டிஷ் அரசு தடை செய்ய வேண்டும் என்று கோரி பிரிட்டிஷ் அரசுக்கு மகஜர் அனுப்புவதற்காக பொதுமக்களிடம் கையெழுத்து சேகரிக்கத் தொடங்கியது.

பன்னிரெண்டு இலட்சம் கையெழுத்து சேகரிப்பதாகத் தெரிவித்து கையெழுத்துத் திரட்டியது. இந்த மகஜரில் இலங்கையில் உயர்ந்த பௌத்த மத பீடங்களான மல்வத்தை அஸ்கிரிய பீடாதிபதிகளும் ஒப்பமிட்டு ஆசீர்வதித்துள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com



இப்பொழுது பிரிட்டனில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை பிரிட்டிஷ் அரசு பயங்கரவாத இயக்கம் என்று முத்திரை குத்தி தடை விதிக்க வேண்டும் என்பது கூட ஒரு இனப்பிரச்சினையாக உருவாக்கப்பட்டிருக்கிறது.

சிங்கள மக்கள் மத்தியில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மட்டுமல்ல தமிழ் மக்களுக்கு எதிரான பிரச்சாரமே வளர்ந்து கொண்டிருக்கிறது. தமிழ் மக்களுக்கு எதிராகவல்ல பயங்கரவாத விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று ஜனாதிபதி சந்திரிகா சொன்னாலும் இந்த நடவடிக்கைகளினால் பாதிக்கப்படுவது தமிழ் மக்கள் தான்.

விடுதலைப் புலிகள் வேறு தமிழ் மக்கள் வேறு என்று காவல் துறையும் பாதுகாப்புத் துறையும் கூட வேறுபடுத்திப் பார்ப்பதாகத் தெரியவில்லை. இலங்கையில் விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டுமென்று நடைபெறும் கையெழுத்து வேட்டைக்கு அரசியல் தலைவர்களிலிருந்து ஆன்மீகத் தலைவர்கள் வரை எந்த இடையூறுமின்றி கையெழுத்துப் பெற முடிகிறது.

வவுனியாவில் பல்கலைக்கழக மாணவர்கள் விடுதலைப் புலிகளை தடை செய்ய வேண்டாமெனக் கோரும் மகஜரில் கையெழுத்துப் பெற்றுக் கொண்டிருந்த போது காவல் துறையினர் தடுத்து மாணவர்களை விசாரணையும் செய்து சிலரைக் கைது செய்யவும் முயற்சி செய்தனர்

கிழக்கு மாகாணத்தில் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் கையெழுத்துப் பெற்ற போது படையினர் தடுத்தனர். ஒரு எம்.பி தலையிட்டு தடுத்ததால் மாணவர்கள் தொடர்ந்து கையெழுத்துப் பெற முடிந்தது. நேற்று மீண்டும் மாணவர்கள் கையெழுத்துப் பெற்றுக் கொண்டிருந்த போது படையினர் தடுத்து கையெழுத்துப் பெற்ற பிரதிகளைப் பறித்துள்ளனர். மாணவர்களை விசாரணையும் செய்தனர்.

பிரிட்டிஷ் அரசுக்கு மகஜர் மூலம் கோரிக்கை விடுவதற்கு தமிழ் மாணவர் கையெழுத்துப் பெறுவது கூட பயங்கரவாதமா? இந்த உரிமைகூட இலங்கையில் தமிழர்களுக்கு இல்லையா, இதுதானா இலங்கையில் ஜனநாயகம்? பிரித்தானிய அரசாங்கத்தால் இதையும் கூடப்புரிந்து கொள்ள முடியாதா?

18-02-2001



படிப்பகம்

www.padippakam.com



## தமிழனின் தலைவிதி

ஒரு பெரிய பிரமுகரைச் சந்திப்பதற்காக அவரைத்தேடி ஒருவர் வந்து வாசலில் நின்று அந்தப் பிரமுகருடன் பேசிக் கொண்டிருக்கிறார். இந்தச் சமயம் பார்த்து நலிந்த பிச்சைக்காரன் ஒருவன் "ஐயா பிச்சை" என்று கேட்கிறான்.

பிரமுகர் கோபம் கொண்டு பிச்சைக்காரனை அடித்துக் கீழே விழுத்தி விடுகிறார்.



படிப்பகம்

www.padippakam.com



இதைப் பார்த்துக் கொண்டு நின்ற வந்த விருந்தாளி பிச்சைக்காரனைப் பார்த்து நீ ஏனப்பா இந்த நேரத்தில் வந்து பிச்சை கேட்டாய் அவர் அடித்தது நியாயம் தானே என்று பிச்சைக்காரனைப் பார்த்துச் சொல்வாரா?

அல்லது "பாவம்" அவன் பிச்சை தானே கேட்டான். அவனைப் போய் இப்படி அடித்து வீழ்த்தி விட்டீர்களே என்று நியாயம் கேட்பாரா? இது உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் பல வருடங்களுக்கு முன் சொன்ன ஒரு உவமானக் குட்டிக்கதை .

இன்று பிரிட்டிஷ் அரசாங்கம் அந்த விருந்தாளியின் நிலையில் தான் இருக்கிறது.

உரிமைகள் பறிக்கப்பட்டு அவனது நிலத்தையும் அபகரித்து அவன் தனது நாமத்தையே சொல்ல முடியாமல் அவனது இருப்பிடத்தையே இல்லாமல் செய்து சொந்த மண்ணிலேயே அநாதைகளாக, அகதிகளாக்கப்பட்டுள்ள தமிழினத்தின் விடிவுக்காக, விடுதலைக்காக வேறு வழியின்றி ஆயுதமேந்திப் போராடும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை "பயங்கரவாதிகள்" என்று உலக முழுவதிலும் பிரச்சாரம் செய்து பிரித்தானியாவும் அதைப் பயங்கரவாத இயக்கமாக முத்திரை குத்தி அதன் செயற்பாடுகளைத் தடை செய்ய வேண்டுமென்று ஸ்ரீலங்கா பெரும்பான்மை ஜனநாயக அரசும் பேரினவாதிகளும் வற்புறுத்தி நிற்கின்றன.

இவை அந்த வசதி படைத்த செருக்கு நிறைந்த வீட்டுக்காரரின் நிலையிலுள்ளன.

தமிழ் மக்களோ எங்கள் இனத்தை, எங்கள் பூர்வீகத் தாயகத்தை எங்களுக்குச் சொந்தமில்லையென்று கூறி எங்கள் மண்ணை அபகரித்துக் கொண்டு எங்கள் பரம்பரையையே இல்லாதொழிக்கும் திட்டமிட்ட செயலில் ஒன்று தான் விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் "பயங்கரவாதிகள்" என்று முத்திரை குத்திப் பிரித்தானியாவில் தடைசெய்ய வேண்டுமென்ற நிர்ப்பந்தம். விடுதலை இயக்கத்தை தடைசெய்ய வேண்டாம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு உதவியும் ஒத்துழைப்பும் தாருங்கள் என்று பிரித்தானிய அரசைக் கோருகின்றனர்.

இவர்கள் அந்தப் பிச்சைக்காரனின் பரிதாப நிலையிலிருப்பவர்கள். வீட்டுக்கு வந்த விருந்தாளியின் நிலையிலிருப்பது இன்று பிரிட்டிஷ் அரசு தான்.



படிப்பகம்

www.padippakam.com



விடுதலைப்புலிகள் இயக்கத்தை "பயங்கரவாத இயக்கம்" என்று முத்திரை குத்தித் தடை செய்யப் போகிறதா? இலங்கைக்கு 1948ஆம் ஆண்டு சுதந்திரம் வழங்கிய சமயத்தில் தமிழ் மக்கள் இருந்த நிலையையும் இன்று அவர்கள் படும் இன்னல்களையும் கணிப்பிட்டுப் "பயங்கரவாதப் பிரச்சினைக்கு" முன்னர் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு அவசரமாகக் காணப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துச் சொல்லப் போகிறதா? உணர்த்தப் போகிறதா?

விடுதலைப் புலிகளை அழித்து ஒழிப்பது தான் தங்கள் ஒரே நோக்கம் என்ற இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா முதல் பிரதமர் இரத்னசிறி விக்ரமநாயக்கா, வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் சாதாரண கடைசி ஆசன எம்.பி.கள் வரை மட்டுமல்ல பேரினவாத இயக்கங்களும் பேரினவாதிகளும் பேரினவாதப் பத்திரிகைகளும் கங்கணம் கட்டி நிற்கின்றன.

எந்தத் தீர்வு காண்பதென்றாலும் போரில் வெற்றியீட்டி அதை முடிவுக்குக் கொண்டு வந்த பின்னர் தான் பரிசீலிக்க வேண்டும் என்பது கருணையே வடிவான புத்த பெருமான் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதாகக் கருதப்படும் மகாநாயக்க தேரோக்களும் கூறியிருக்கின்றனர்.

தமிழ் மக்களுக்கு காப்பரணாக விளங்கும் விடுதலைப் புலிகளை அழித்து ஒழித்து விட்டால் தமிழினத்தை அழித்து ஒழித்த மாதிரித்தான் என்பது அவர்களுக்குத் தெரியும்.

"பயங்கரவாத ஒழிப்பு" என்ற பெயரில் தமிழ் ஒழிப்புக்கு இராணுவத்திலிருந்து கடைநிலைச் சிங்கள மகன் வரை சிங்கள மக்களை ஒன்று திரட்டுவதில் வெற்றி பெற்றுள்ள அரச யந்திரமும் பேரினவாத ஊடகங்களும் ஒரு கல்லில் இரு மாங்காய் என்ற ரீதியில் யு.என்.பி. தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவையும் சீண்டி இழுப்பது அல்லது அவர் மீது வெறுப்பை ஏற்படுத்துவது என்ற யுக்தியைக் கையாள்கிறது. அது நமக்குத் தேவையில்லை.

தமிழனுக்கு சொந்த நிலமே இல்லாமல் அவன் பிறந்த மண்ணிலேயே அழிக்கப்படுவதாயிருந்தாலும் கூட இங்கு தமிழர்கள் சிலர் கதிர்காமர்களாகவே இருக்க முடிவு செய்து விட்டார்கள் போலும்! தமிழன் தலைவிதியை என்னவென்பது?

19.02.2001.



படிப்பகம்

www.padippakam.com



## தேவாலயத்தின் மீதான தாக்குதல்

இனவாத, மதவாதக் கும்பலொன்று கிறிஸ்தவ தேவாலயமொன்றினுள் ஞாயிற்றுக்கிழமை பூசை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் நுழைந்து அங்கு கூடியிருந்த பக்தர்கள் மீது காட்டுமிராண்டித்தனமாக தாக்குதல் நடத்தியதுடன் தேவாலயத்தையும் அடித்து உடைத்துச் சேதப்படுத்தியுமிருக்கிறது.

நாட்டைப் பற்றியும் நாட்டின் எதிர்காலத்தைப் பற்றியும் அக்கறை கொண்டவர்களும் இந்தச் சம்பவம் பற்றிக் கவலைப்படுவார்கள். இன்று ஆட்சி பீடத்திலுள்ளவர்களும் மதபீடத் தலைவர்களும் பேரினவாதிகளும் குறிப்பாகப் பேரினவாதப் பத்திரிகைகளும் எந்தப் பாதைக்கு மக்களை இட்டுச் செல்வதற்கு வழிகாட்டுகிறார்கள் என்பதை நாட்டின் நலனில் அக்கறையுள்ளோர் உணர்ந்து கொண்டிராமலிருக்க முடியாது.

பொலநறுவை மாவட்டத்தில் ஹிங்குராண்கொடைப் பொலிஸ் பிரிவிலுள்ள நுவரவத்த என்ற இடத்திலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



பொல்லுகள், கம்புகள் மற்றும் தீப்பந்தத் தடிகளுடன் தேவாலயத்தில் பூசை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் நுழைந்த ஒரு கும்பல் அங்கு திரண்டிருந்த மக்கள் மீது காட்டுமிராண்டித் தனமாகத் தாக்குதல் நடத்தியிருக்கிறது. இத்தாக்குதலில் முப்பத்தைந்து பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் மூவரின் நிலை ஆபத்தானதாக உள்ளது.

தேவாலயத்தின் யன்னல்கள், கதவுகள், கதிரைகள் மற்றும் தளபாடங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. மக்களின் கதறல்கள் அவலக்குரல்கள், கூக்குரல்களோ மதபோதகரின் குரலோ இந்தக் குண்டர் கும்பலின் காதுகளில் விழவில்லை.

இச்சம்பவம் கொழும்பிலோ அல்லது பெருநகரப் பகுதிகளிலோ நடைபெறவில்லை. கிராமப் பகுதியிலுள்ள ஒரு தேவாலயத்தில் நடைபெற்றிருக்கிறது. இந்தக் குண்டர் கும்பலில் வந்து அட்டகாசம் செய்தவர்களில் கிராமத்தவர்களே இருந்திருக்கின்றனர்.

கிராமப்புறத்து மக்கள் பொதுவாக அமைதி வாழ்க்கையையே விரும்புகிறவர்கள். இவர்கள் இது போன்ற பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட மாட்டார்கள். இந்தப் பயங்கரவாதக் குண்டர்களின் தாக்குதலுக்குப் பின்னணியில் இனவாத, மதவாத சூத்திரதாரிகள் இருந்திருக்க வேண்டும்.

கடந்த வருடக் கடைசியில் மலையகத்தில் பண்டாரவளையில் பிந்துனுவெவ என்ற கிராமத்தில் வழி தவறிச் சென்றிருந்த தமிழ் இளைஞர்களுக்கு மறுவாழ்வளிப்பதற்காக அமைக்கப்பட்ட புனர்வாழ்வு முகாமுக்குள் காவல்துறையினரின் பாதுகாப்பையும் தாண்டி கிராமத்தவர்களைக் கொண்ட பயங்கரவாதக் கும்பல் காட்டுமிராண்டிகளையும் விட மோசமான முறையில் தாக்குதல் நடத்தி நிராயுதபாணிகளான முப்பது தமிழ் சிறுவர்க-ளையும் இளைஞர்களையும் கொன்றழித்தது.

இதில் கொல்லப்பட்டவர்களும், பாதிக்கப்பட்டவர்களும் தமிழர்களாகையால் இத்தாக்குதல் பற்றியோ, இத்தாக்குதலுக்குள்ள பின்னணி பற்றியோ விசாரித்து அறிய வேண்டுமென்றோ இதில் சம்பந்தப்பட்டவர்களைப் பிடித்து தண்டனை கொடுக்க வேண்டுமென்றோ எவரும் அக்கறைப்பட-வில்லை.



படிப்பகம்

www.padippakam.com



பிந்துனுவெவ படுகொலைகளைத் தொடர்ந்து அதன் பின்னணிகளை விசாரணை செய்து அறிந்து நடவடிக்கை எடுத்திருந்தால் இன்று நுவரவத்த தேவாலயத் தாக்குதல் நடைபெற்றிருக்காது. விடுதலைப் புலிகளை "பயங்கரவாதிகள்" என்று ஆரம்பித்த பிரச்சாரம் இப்போது பிரிட்டனில் தடை செய்வதற்காக அமைச்சர் கதிர்காமரிலிருந்து பேரினவாதிகளும், பேரினவாதப் பத்திரிகைகளும் தமிழ் இனத்துக்கே இந்த நாட்டில் இடைமில்லையென்று முடுக்கி விடப்பட்ட இனத்துவேஷம் பீறிட்டுக் கிளப்பப்பட்டிருக்கிறது.

இந்த நாட்டின் ஜனாதிபதியான சந்திரிகா அம்மையாரே தமிழரை வந்தேறு குடிகள் என்று சொன்னால் மற்றவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? விடுதலைப் புலிகளுக்கு எதிரான விஷமப் பிரச்சாரம் தமிழ் இனத்தை அழிப்பதற்கான மறைமுக முயற்சியாகத் தீவிரப்படுத்தப்பட்ட போது இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்குரியது என்ற குரல்களும் ஒலிக்கத் தொடங்கி விட்டன.

இது முன்னரே ஒலித்தது. என்றாலும் விடுதலைப் புலிகளைப் பயங்கர-வாதிகளாக்கி தமிழ் இன ஒழிப்புக்கு எடுக்கும் முயற்சியோடு "சிங்கள பௌத்த நாடு" என்ற கோஷமும் முன்வைக்கப்படுகிறது.

இலங்கையில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட ஆஸ்பத்திரி அதிஸ்டலாபச் சீட்டுகளில் "ஆஸ்பத்திரிகளுக்கு அடையாளமாக" கைக்கொள்ளப்பட்ட "சிலுவை" போன்ற இலச்சினையை அந்தச் சீட்டிலிருந்து எடுக்க வேண்டுமென்று எதிர்ப்புத் தெரிவித்து, அதில் வெற்றியும் பெற்றது சிங்கள பௌத்த பேரினவாதம்.

நல்ல வேளையாக இந்த தேவாலயச் சம்பவம் வேறு இடத்தில் நடந்திருந்தால் "விடுதலைப் புலிப்பயங்கரவாதிகள்" மீது பழி சுமத்தியிருப்-பார்கள்.

"விடுதலைப் புலிப்பயங்கரவாத" பிரசாரம் எங்கே கொண்டு போய்விடப் போகிறதோ? அளவுக்கதிகமாக ஆயுதங்கள் குவிவதும், கொலை, கொள்ளைகள் நாட்டில் அதிகரித்து வருவதும் இன, மத துவேஷப் பிரச்சாரங்-களும் செயல்களுடன் அதிகரித்து வருவதும் நாட்டுக்கு நல்ல அறிகுறி-யாகத் தோன்றவில்லை.

21-02-2001



படிப்பகம்

www.padippakam.com



## இனியாவது வழிபிறக்குமா?

இனியும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தை முயற்சிகளை அரசாங்கம் காலம் கடத்தினால் இந்நாட்டு மக்கள் மட்டுமல்ல சர்வதேச சமூகம் கூட சலிப்படைந்துவிடும். பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்ற யோசனை தெரிவிக்கப்பட்டதும் இலங்கை அரசும் தனது நோக்கமே பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தான் என்று கூறியது.

இதற்காகத் தான் விடுதலைப் புலிகளுடன் போர் புரிவதாகவும் அரசு விளக்கம் சொன்னது. போரில் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தி பேச்சுவார்த்தை மேசைக்கு அவர்களைக் கொண்டு வருவதற்காகவே போரை நடத்துவதாக அரசின் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் மட்டுமல்லாது இராணுவத் தளபதிகளும் காரணம் சொல்லி வந்தனர்.

சமாதானத்தை கொண்டு வருவதற்காகவே போர் புரிகிறோம் என்று கூறிய ஜனாதிபதி சந்திரிகா இது சமாதானத்துக்கான போர் என்று அழைத்தார்.



படிப்பகம்

www.padippakam.com



நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் சம்மதிக்க வேண்டும் என்று அரசு விடுதலைப் புலிகளுக்கு எச்சரிக்கை விடுத்தது.

விடுதலைப் புலிகளுக்கு போரில் தான் நாட்டமேயொழிய பேச்சுவார்த்தையில் அவர்களுக்கு விருப்பமில்லையென்றும் பேச்சு-வார்த்தைக்குப் புலிகள் முன்வரமாட்டார்களென்றும் அரசு மட்டுமல்ல பேரினவாதிகளும் பேரினவாதப் பத்திரிகைகளும் உரக்கச் சத்தமிட்டனர்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் சாமாதானப் பேச்சுவார்த்தைக்கு உதவியாளராக இரு தரப்பினரும் ஏற்றுக் கொண்ட நோர்வேயின் விசேஷ சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் பொதுத்தேர்தல் முடிந்த பின் இலங்கைக்கு வந்து வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்த போது நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று அவர்கள் தெரிவித்தனர்.

சமாதானத் தூதுவர் கொழும்பு திரும்பி ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியதுடன் செய்தியாளர்களைச் சந்தித்த போதும் விடுதலைப் புலிகள் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று சொன்னார். இதையும் கூட ஆட்சியாளர்களும் அரச படையினரும் பேரினவாதிகளும் நம்பத் தயாராக இருக்கவில்லை.

மாவீரர் தின உரையில் தலைவர் என்ன சொல்கிறாரென்று பொறுத்திருப்போம் என்று படைத்தளபதியும் ஆட்சியாளர்களும் சொல்லிச் சறுக்கினார்கள்.

மாவீரர் தின உரையில் தலைவர் தெளிவாக நிபந்தனையற்ற பேச்சுக்குத் தாயார் என்று உறுதிப்படுத்தினார். இதன் பின்னரும் அரசும் படைகளும் போருக்குத் தயார் செய்ததுடன் பேச்சுவார்த்தை என்ற பேச்சையே எடுக்க மறுத்தன.

நோர்வேயின் விசேஷ சமாதானத்தூதுவர் எடுத்த முயற்சிகளுக்கும் ஆட்சி பீடத்திலுள்ளவர்கள் முட்டுக்கட்டை போட்டு வந்தனர். விடுதலைப் புலிகள் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை என்று சொன்னாலும் நிபந்தனை போடுவதாகப் பிரச்சாரம் செய்தனர். சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்புக் கொடுக்காத அரசும் பேரினவாதிகளும் “விடுதலைப் புலிகளை மிகக் கொடுமையான பயங்கரவாதிகள்” என்று சித்திரித்து உலகம் முழுவதிலும் பிரச்சாரம் செய்வதிலும் தீவிரமாக ஈடுபட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com



விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்த்து பிரிட்டனில் தடை விதிக்க வேண்டுமென்று இலங்கை ஜனாதிபதி வெளியுறவு அமைச்சர் மற்றும் பேரினவாத இயக்கங்களும் ஏன் ஆன்மிகத் தலைவர்களான பௌத்த பிக்குகளும் சகல முயற்சிகளும் செய்தனர்.

போர்க்களத்தில் துப்பாக்கி பிடிப்பதிலும் போருக்கு வியூகம் வகுப்பதிலும் மட்டுமல்ல சமாதானத்திற்கு வழி காட்டுவதிலும் வல்லவர்கள் என்பதை விடுதலைப் புலிகள் எடுத்துக் காட்டி ஆளும் கட்சியினைத் திக்குமுக்காடச் செய்திருக்கின்றனர்.

ஒரு தலைப்பட்சமாக நத்தார் தினத்திலிருந்து ஒரு மாதம் போரை நிறுத்துவதாக அறிவித்த விடுதலைப் புலிகள் இப்பொழுது மூன்றாவது மாதமாகவும் போர் நிறுத்தத்தை நீடித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் போர் நிறுத்த காலத்திலும் போரை முன்னெடுத்துச் சென்ற அரச படையினர் ஆனையிறவை மீண்டும் கைப்பற்றும் தமது திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலையில் நிற்கின்றனர்.

போர் நிறுத்தத்தினால் பல இழப்புக்களைச் சந்திக்க நேர்ந்துள்ள போதிலும் மக்களின் துன்பங்கள் நீங்கவும் நாட்டில் அமைதியேற்படவும் சமாதானப் பேச்சுக்குக் காத்திருப்பதாக விடுதலைப் புலிகள் தமது அறிக்கையில் தெளிவாகத் தெரிவித்துள்ளனர். சர்வதேச சமூகம் அரசுக்கு அழுத்தம் கொடுத்து இலங்கை இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு முன்வரச் செய்யுமாறும் புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்

காஷ்மீரில் போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தைக்கு தீவிரவாதக் குழுக்களை முன்வருமாறு கோரிக்கை விடுத்துக் காத்திருக்கும் இந்தியப் பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்துப் பேசுவதற்கு சந்திரிகா அம்மையார் இந்தியாவுக்குச் சென்றிருக்கிறார். விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை இனியும் தட்டிக் கழிக்க முடியாது என்ற நிலையில் அம்மையார் திரும்பி வந்து இனியாவது சமாதான முயற்சிக்கு வழிவகுப்பாரென்று எதிர்பார்ப்போம்.

24-02-2001



படிப்பகம்

www.padippakam.com



## காலம் மாறும் காத்திருப்போம்!

விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டுமென்று பிரித்தானியா அரசைக் கோரும் கோஷங்களும், கையெழுத்து வேட்டைகளும், பாதயாத்திரைகளும், ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் கொழும்பிலும் மற்றும் தென்பகுதியிலும் கடந்த சில வாரங்களாக நடைபெற்று வருகின்றன.

விரைவில் கள்ளத்தனமாக கொழும்பிலும் மற்றும் இடங்களிலும் விற்பனை செய்யப்படும் ஆயுதங்களுக்குத் தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும், பாத யாத்திரைகளும் நடத்தப்பட வேண்டிய நிலை உருவாகியிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



கொழும்பில் கள்ளச் சந்தையில் ரி. 56 ரக துப்பாக்கி பதினையாயிரம் ரூபாய்க்கு விற்பனையாகிறதென்றும் கையெறிகுண்டு ஐந்நூறு ரூபாய்க்கு கிடைக்கிறது என்றும் காவல்துறையில் பொறுப்பு வாய்ந்த பதவியிலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவரே தெரிவித்திருக்கிறார்.

சிறிய ஆயுதப் பாவனைகளின் அதிகரிப்பு குறித்து கொழும்பில் அண்மையில் ஒரு கருத்தரங்கு நடந்தது. இக்கருத்தரங்கில் பேசிய ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரியான செனவிரத்தின கள்ளச்சந்தையில் மலிவு விலைக்கு ஆயுதங்கள் கிடைப்பது பற்றித் தெரிவித்தார்.

இலங்கையில் ஆயுதங்களைத் தவிர ஏனைய சகல பொருள்களினதும் விலைகள் விஷம் போல் ஏறியுள்ளன என்பதையும் அந்த ஓய்வு பெற்ற அதிகாரி சுட்டிக் காட்டத் தவறவில்லை. விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டுவதன் மூலமே நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியுமென்றும் சில மாதங்களுக்குள் இதை நிறைவேற்றி விட முடியும் என்றும் இலங்கையின் பிரதமர் நம்பிக்கையுடன் கூறி படைக்கு இளைஞர்களைத் திரட்டும் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

ஆன்மீகத் தலைவர்களான மடாதிபதிகளும் போர் புரிந்து விடுதலைப் புலிகளை வெற்றி கொண்டதன் பின்னரே சமாதானம் பற்றிப் பேசலாமென்று கூறிவிட்டார்கள். "பயங்கரவாதிகளான விடுதலைப் புலிகளை" அழித்து ஒழிப்பதைத் தவிர இப்போது இலங்கையில் வேறு எந்தப் பிரச்சினையும் இல்லை. மக்களுக்கு எந்தக் கவலையும் கிடையாது என்னும் ரீதியில் அரசும் பேரினவாதிகளும் பேரினவாதப் பத்திரிகைகளும் பிரச்சாரம் செய்து மக்களை வேறு திசையில் கவனம் செலுத்தாமல் இருக்க கவனமாகச் செயல்படுகின்றன.

இலங்கையில் ஒருமைப்பாடு என்பதும், ஒற்றுமை என்பதும், இலங்கை முழுவதும் சிங்கள பௌத்தர்களுக்குரியதென்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைகின்றது. தமிழர்களுக்கெனத் தனியான தாயகமோ பிரதேசமோ இல்லையென்றும் அவர்கள் கூறுவதிலிருந்தே தேசிய ஒருமைப்பாடு, ஐக்கியம், சுயநிர்ணயம் என்பவை யாருக்கு என்பது தெளிவாகிறது.

இந்தக் குரலை எழுப்பி பெரும்பான்மைச் சமூக மக்களை வாழ்க்கைச் செலவு உயர்வு பற்றியோ விலைவாசிகள் பற்றியோ சிந்திப்பதற்கு இடமில்லாது



படிப்பகம்

www.padippakam.com



செய்து விடுகின்றனர். வசதி படைத்தவர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும், ஆன்மீகத் தலைவர்களுக்கும் இந்தக் கவலையில்லை.

வாழ்க்கையைச் சமாளிப்பதற்கு அரசாங்க ஊழியர்களும், தொழிலாளர்களும், தனியார் ஊழியர்களும் சம்பள உயர்வு கோரிப் போராடுகிறார்கள். இவர்களுக்கு இவை கிடைத்தும் விடுகின்றன. வேறு வழியில்லாதவர்கள் களவு, வழிப்பறி, கொள்ளை என்று இறங்கி விடுகிறார்கள். இவர்களுக்கு கொலை, கொள்ளை, வழிப்பறி போன்ற செயல்களையே தொழிலாகக் கொண்ட பாதாள உலகக் கோஷ்டிகள் வழிகாட்டிகளாக அமைந்து விடுகின்றன.

நாட்டைப் பாதுகாப்பதற்கென ஆயுதங்களும் கணக்கு வழக்கில்லாமல் இப்போது இறக்குமதி செய்யப்பட்டு குவிந்துள்ளன. தேச பக்தியுடன் படைகளில் சேர்ந்தவர்கள் அங்கிருந்து தான் தேசத்தை காப்பாற்ற வேண்டியதில்லை. வெளியிலிருந்தும், வேறு வழிகளிலும் தங்களையும் காப்பாற்றி நாட்டையும் காப்பாற்றலாமென்று வெளியே செயற்படுகின்றனர்.

இவர்களுக்கு உதவியாக படைகளிலிருந்தபடியே ஆயுதங்களை வியாபாரம் செய்யும் வியாபாரிகளும் தோன்றியிருக்கிறார்கள். ''ஊழல்'' நடவடிக்கைகளிலீடுபடும் பொலிஸ் அதிகாரிகளும் ஆயுதங்களையும் வெடிபொருட்களையும் கையாடி கள்ளச் சந்தையில் விற்பனை செய்கிறார்கள். இதனால் இவற்றை மலிவு விலையிலும் பெறக்கூடியதாக இருக்கிறது என்று அந்த ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரியே கூறியிருக்கிறார்.

இப்பொழுது நாட்டில் கொள்ளைகளும், வழிப்பறிகளும், கொலைகளும் அதிகரித்து வருவதற்குரிய காரணம் தெரிகிறது. பெரும்பான்மை மக்கள் விழித்துக் கொண்டால், ஆயுதங்களைத் தடை செய், ஆயுத இறக்குமதியைத் தடை செய், கள்ளச் சந்தையில் ஆயுத விற்பனையைத் தடை செய், ஆயுத வியாபாரிகளைத் தடை செய்து கைது செய் என்று ஆர்ப்பாட்ட ஊர்வலமும், பாதயாத்திரையும் சென்று கோஷமிடத் தொடங்குவார்கள். விலைவாசி உயர்வதைத் தடை செய் என்ற குரலும் ஒலிக்கத் தொடங்கும்.

இந்த நிலை தோன்றுவதற்கு அதிக காலம் செல்லாதென்றே எதிர்பார்ப்போம். காலம் மாறும் காத்திருப்போம்.

01-03-2001



படிப்பகம்

www.padippakam.com



# அநீதியை நீக்க சந்தர்ப்பம் உண்டு!

அடிக்குமேல் அடி அடித்து அம்மியையும் நகர வைக்கலாம். ஒரே பொய்யைத் திரும்பத் திரும்ப பலபேரைக் கொண்டு வற்புறுத்திச் சொல்ல வைத்து மெய்யாக்கலாம் என்ற புதிய தத்துவத்தை உருவாக்கி அதில் பெருமளவில் இலங்கை அரசும் சிங்களப் பேரினவாதமும் வெற்றியீட்டியிருக்கிறதென்றே சொல்ல வேண்டும்.

இதே சமயம் என்னதான் அறிவும், ஆற்றலும் அனுபவமும் நிறைந்திருந்தாலும் பிரச்சாரத்தில் மயங்கி விடும் மனிதர்கள் தான் பிரித்தானியாவின் ஆட்சிபீடத்திலிருக்கிறார்கள் என்பதும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது

ஆசிய ஆபிரிக்க நாடுகள் பலவற்றைத் தனது ஆளுகைக்குள் வைத்திருந்த சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யமாக விளங்கிய பிரித்தானியா இந்தியா உட்பட பல நாடுகளில் விடுதலை கோரி மக்கள் கிளர்ச்சி தொடங்கி, நடத்திய போது அவற்றை அடக்கி ஒடுக்குவதற்குப் பல வழிகளையும் கையாண்டு அனுபவப்பட்டிருக்கிறது.

இந்த விடுதலைக் கிளர்ச்சிகளிலும் போராட்டங்களிலும், ஈடுபட்டவர்களைப் புரட்சிவாதிகளென்றும், கிளர்ச்சிவாதிகள் என்றும் முத்திரைகுத்தி அதில் சம்மந்தப்பட்டவர்களைச் சிறையில் வைத்து சித்திரவதை செய்த போதும் கடைசியில் அவர்கள் தங்கள் போராட்டத்தில் வெற்றி பெற்றுத் தமக்கும் தமது நாட்டுக்கும் விடுதலை பெற்றுக் கொடுத்தார்கள்.

பயங்கரவாதிகள் என்று சிறைப்பிடித்த அவர்களைப் பின்னர் தேசியத் தலைவர்களாக ஏற்று மதித்துப் போற்றிய அனுபவமும் பிரித்தானியாவுக்கு இருக்கிறது.

இந்த அனுபவங்களை பிரித்தானிய ஆட்சியாளர்கள் மறந்திருந்தாலும், இலங்கையில் இப்பொழுது நடைபெறும் உள்நாட்டுப் போருக்குத் தாங்களும் முக்கிய காரணம் என்பதை வெள்ளைக்காரர்கள் நினைத்துக் கூடப் பார்க்காதிருப்பது ஏனென்று விளங்கவில்லை.

இலங்கையை விட்டு வெளியேறுவதற்கு முன்னரே இலங்கையின் பூர்வீகக் குடிகளான தமிழர்களுக்கும் சுயாதிபத்திய உரிமையை வழங்கியிருந்தால் இன்றைய நெருக்கடி ஏற்பட்டிருக்காது. இவ்வளவு அழிவுகளும் நேர்ந்திருக்காது.



படிப்பகம்

www.padippakam.com



வெள்ளையர்களின் ஆட்சிக் காலத்தில் விடுதலை கோரிப் போராடியவர்களை கிளர்ச்சியாளர்களென்றும் பயங்கரவாதிகள் என்றும் சொல்லியிருந்தாலும் வெள்ளையர் என்றோ ஒரு நாள் தாங்கள் படை பலத்தால் பிடித்த இடத்தை விட்டுப்போக வேண்டுமென்பதை அவர்களே உணர்ந்தி-ருந்தார்கள்.

இலங்கையில் இப்பொழுது ஆட்சிபீடத்திலிருப்பவர்கள் இந்த நாட்டைச் சொந்த நாடாக உரிமை பாராட்டுபவர்கள். இதே சமயம் இந்த நாட்டின் பூர்வீக குடிகளான தமிழ் மக்கள் தமது சொந்த மாநிலத்தில் தமக்குள்ள உரிமைகளையும் தாம் வாழும் உரிமைகளையும் நிலை நாட்ட முடியாத பெரும்பான்மைச் சமூகத்தினால் அடக்கி ஒடுக்கப்பட்டு சொந்த மண்ணிலேயே இருக்க முடியாத அவல நிலையிலுள்ளனர்.

அடக்கி ஒடுக்கப்படும் மக்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடுவதை பயங்கரவாதம் என்று பெரும்பான்மையினர் அதிகாரத் திமிருடன் பிரசாரம் செய்கின்றனர்.

இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிய சமயத்தில் இலங்கைக்கு புதிய அரசியலமைப்பை உருவாக்கிக் கொடுத்த பிரிட்டிஷ்காரரான வெள்ளைக்கார சேர் ஐவர்ஜென்னிங்ஸ் சுதந்திரம் பெற்ற பத்தாம் ஆண்டில் அதாவது 1958ம் ஆண்டில் தமிழ் மக்களுக்கு எதிராக இனக்கலகத்தைத் தூண்டி விட்டு தமிழினத்தை அழிக்க முதன் முதலாக எடுத்த முயற்சியை அறிந்து தாம் மாபெரும் தவறு செய்து விட்டதாக மனம் நொந்து கூறியிருந்தார்.

இதன் பிறகு 1983ம் ஆண்டு வரையும் அதன் பிறகு இலங்கையில் தமிழ் இனத்துக்கு எதிராக எடுக்கப்பட்ட அட்டூழியங்களையும் சிறிது கூட ஆராயாமல் வெறும் பிரச்சாரத்தில் மயங்கி தமிழ் இனத்தின் பாதுகாப்புக்காகப் போராடும் விடுதலைப் புலிகளைத் தடை செய்வதற்கு பிரிட்டிஷ் அரசு எடுத்த முடிவு விவேகமற்ற செயலாகவே கருதப்பட வேண்டும்.

என்றாலும் இன்றுள்ள நிலைமையை நன்கு ஆராய்ந்து முதலில் செய்துள்ள இத்தவறைத் திருத்திக் கொள்வதற்கு இன்னமும் காலம் கடந்து விடவில்லை. பாதிக்கப்பட்டவர்கள் பிரித்தானிய அரசின் முடிவை எதிர்த்து விண்ணப்பித்து தீர்ப்பை மாற்றவும் வழியிருக்கிறது. விசாரணை மன்றங்களும், நீதிமன்றங்களும் இது பற்றி விசாரணை செய்யவிருக்கின்றன.

இனிவரும் சந்தர்ப்பத்தையாவது பிரித்தானிய அரசு நல்ல முறையில் பயன்படுத்தி முதலில் செய்த அநீதியை நீக்கிவிட முடியும்.

02-03-2001



படிப்பகம்

www.padippakam.com



## தவறை உணருவார்களா?

பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் விடுதலைப் புலிகள் அமைப்பையும் இணைத்திருப்பதாக பிரித்தானியா அரசு அறிவித்த சில மணிநேரங்களில் வடக்கில் இயக்கச்சி என்ற இடத்தில் இலங்கை விமானப் படையின் ஜெட் விமானங்கள் குண்டு வீசித்தாக்கியிருக்கின்றன.

ஆனையிறவிலிருந்து வட திசையில் நான்கு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள இயக்கச்சியில் விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது போர் விமானங்கள் குண்டு வீசித் தாக்கியதாகவும் இதில் எட்டு முக்கிய கேந்திர நிலையங்கள் அழித்தொழிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கம் என்று இங்கிலாந்து முத்திரை குத்தி தடைசெய்ய வேண்டுமென்று இலங்கை அரசும் பேரினவாதிகளும் எடுத்த பகீரதப்பிரயத்தனம் வெற்றியீட்டியதைக்



படிப்பகம்

www.padippakam.com



கொண்டாடு முகமாக இயக்கச்சி மீது ஜெட் விமானங்கள் இந்தக் குண்டு வீச்சை நடத்தியிருக்கலாம்.

இனி விடுதலைப் புலிகளுக்கெதிராக மட்டுமல்ல இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராகவும் கூட எப்படித் தாக்குதல்களை மேற்கொண்டாலும் வெளிநாடுகளிலிருந்து குரல் கேட்காமல் அடைத்து விட்டோம் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவும் இயக்கச்சியில் அவசரமாகக் குண்டுவீச்சு நடத்தியிருக்கலாம்.

எது எப்படியோ இனி இலங்கையில் குண்டுவீச்சும் போரும் தான் தொடரும் என்பதற்கு இயக்கச்சிக் குண்டுவீச்சு உதாரண்மாக அமைந்துவிடக் கூடாது என்பதே நாட்டின் அமைதியை விரும்பும் நல்லோரினது பிரார்த்தனையாகும்.

ஆனால் பேச்சுவார்த்தை மூலம் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்று கிளிப்பிள்ளை போல் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலிருந்தும் குரல் கொடுத்தவர்கள் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக விடுதலைப் புலிகள் ஒருதலைப் பட்சமாகப் போர் நிறுத்தம் செய்து அமைதி காத்து வருகின்ற போதிலும் அரச படைகள் குண்டு வீசித் தாக்குதல் நடத்துவதையும் பிரங்கித் தாக்குதல் நடத்துவதையும் பற்றி ஒரு வார்த்தையாவது பேசாதிருப்பது ஏன்?

போர் நிறுத்தம் கடைப்பிடித்து வரும் விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது ஒரு கை ஓசை போல் தாக்குதல் நடத்துவது எந்தவித நியாயமோ?

இதுமட்டுமல்ல சந்தேகத்தின் பேரில் கைது செய்து காவலில் வைப்பதும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. தனியாக நடந்து சென்ற அப்பாவிகள் கூட சில இடங்களில் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆனால் விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த மீனவர்களிருவரையும் மற்றும் சிலரையும் நல்லெண்ண சமிக்ஞைகளாக விடுதலை செய்திருக்கிறார்கள்.

ஆனால் இலங்கை அரசோ சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணை எதுவுமின்றி நீண்ட காலமாகவே சிறையில் வைத்திருக்கும் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்வதற்கோ அவர்கள் மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தி நீதிமன்றத்தில் விசாரணை செய்வதற்கோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



இதேநேரம் பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் படுகொலை செய்யப்பட்ட சிலரின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இழப்பீடு வழங்கிய நிகழ்ச்சியில் பேசிய ஜனாதிபதி சந்திரிகா விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழுத்தம் கொடுக்குமாறு மக்களுக்கு கோரிக்கை விடுத்திருக்கிறார்.

பேச்சுவார்த்தைக்கான நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காகத் தாங்கள் ஒருதலைப்பட்சமாக ஒரு மாத காலத்துக்கு போரை நிறுத்துவதாக கடந்த நத்தார் தினத்தில் விடுதலைப் புலிகள் அறிவித்து அதைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

இப்போர் நிறுத்தத்தை இரண்டாவது மாதமாகவும் தொடர்ந்து மூன்றாவது மாதமாகவும் கடைப்பிடித்து வருகின்றனர். போர் நிறுத்தத்தை நீடித்த போது பேச்சுவார்த்தைக்கு வருமாறு இலங்கை அரசுக்கு சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு வருமாறு தமிழ் மக்கள் நெருக்க வேண்டுமென்று சந்திரிகா கூறுகிறார். பேச்சுவார்த்தைக்கு அரசு முன்வருவதற்கு சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று விடுதலைப் புலிகள் கோருகின்றனர்.

பேச்சுவார்த்தைக்கு அனுசரணையாளராகவோ உதவியாளராகவோ கடமையாற்றுவதற்கு இரு தரப்பும் ஏற்றுக்கொண்ட நோர்வே நாடு செய்வதறியாது திகைத்து நிற்கிறது. தமிழ் மக்களும் விக்கித்து நிற்கின்றனர்.

விடுதலைப் புலிகளை பிரித்தானியா தடைசெய்ய வேண்டுமென்ற ஒரே நோக்கோடு செயற்பட்ட அரசும் அதன் ஆதரவாளர்களும் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று ஏன் குரல் கொடுக்க முன் வரக்கூடாது.

நாட்டின் பிரதமர் இன்னமும் போர்க்குரல் தான் எழுப்பிக் கொண்டிருக்கிறார். இயக்கச்சி விமானத் தாக்குதலை அடுத்து தொடரவிருக்கும் தாக்குதல்களுக்கான முன்னோடியாக இருக்கலாம். பிரித்தானியாவும் மற்றைய அரசுகளும் இனியாவது தங்கள் தவறை உணருவார்களா?

03-03-2001



படிப்பகம்

www.padippakam.com



## சோழியன் குடுமி.....

இலங்கை கேட்பதற்கு முன்னரே விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்றும் அதைப் பிரிட்டனில் தடை செய்ய வேண்டுமென்றும் பிரித்தானியாவை இந்தியா வற்புறுத்தியதாம். இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தான் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

அதாவது இலங்கை ஜனாதிபதி சந்திரிகா மட்டுமல்ல இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் லண்டனுக்கு நேரில் சென்று உள்துறை அமைச்சரைச் சந்தித்து பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் விடுதலைப் புலிகளைச் சேர்ப்பதுடன் பிரித்தானியாவில் அதைத் தடை செய்ய வேண்டுமென்று கேட்டிருந்தாலும்...

இலங்கையிலிருந்து அமைச்சரொருவர் கால்நடையாக பண்டாரநாயக்கா சிலையிலிருந்து கொள்ளுப்பிட்டியிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்துக்குச் சென்று கோரிக்கை விடுத்த போதிலும்... சிஹல உறுமய என்ற பேரினவாதக் கட்சி



படிப்பகம்

www.padippakam.com



பல லட்சம் கையெழுத்துக்களைத் திரட்டி பிரிட்டிஷ் தூதரகம் மூலம் அனுப்பி வைத்திருந்தாலும்...

இந்தியா பிரித்தானியா அரசுக்குக் கொடுத்த அழுத்தம் தான் விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் சேர்ப்பதற்குக் காரணம் என்று கதிர்காமர் சொல்லியிருக்கிறார். இந்தியா இலங்கைக்குச் செய்யும் ''மனிதாபிமான'' உதவிகளில் இதுவுமொன்று. ராஜீவ் காந்தியின் கொலைக்கு பழிவாங்குவதற்காக இந்தியா இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தமிழ் நாட்டுப் பத்திரிகைகளும் அரசியல்வாதிகளும் சொல்லிக் கொள்ளலாம்.

''சோழியன் குடுமி சும்மா ஆடாது'' என்பது இந்தியப் பழமொழி தான். இப்பொழுது இலங்கையில் என்ன பொருள் வாங்கினாலும் இந்தியத் தயாரிப்புகளாகத் தான் இருக்கின்றன.

இந்தியா இலங்கை வர்த்தக ஒப்பந்தத்தில் அதிக நன்மையும் இலாபமும் பெறுவது இந்தியா தான். சமீபத்தில் மல்வத்தை பீடாதிபதி தம்மைச் சந்தித்த ஒரு பிரதி அமைச்சருடன் பேசுகையில் விவசாய நாடான இலங்கையில் விவசாயம் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

உருளைக்கிழங்குச் செய்கை இலங்கையில் பாதிக்கப்பட்டிருப்பது பற்றி அவர் கவலை தெரிவித்தார். உள்ளூரில் உருளைக்கிழங்கு உற்பத்தியாகும் போது வெளிநாட்டிலிருந்து அதை எதற்கு இறக்குமதி செய்ய வேண்டுமென்றும் கேட்டார்.

உள்ளூர் உருளைக்கிழங்கைவிட இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கிழங்கு தான் இப்பொழுது மலிவாகவும் அதிகமாகவும் கிடைக்கிறது. இவை தவிர வடக்கு கிழக்கில் போர் அழிவு ஏற்படுவதற்கு முன் வடக்கிலும் கிழக்கிலும் துணி உற்பத்தியும் ஆடை உற்பத்தியும் புதிய புதிய வகைகளில் செய்யப்பட்டன.

காத்தான்குடியில் உற்பத்தி செய்யப்பட்ட சாரம் இந்திய சாரங்களுக்கு நிகராக மட்டுமல்ல, அதைவிட சிறந்தும் விளங்கின. வடக்கிலும் அலுமினியப் பாத்திரங்களும் அலுமினியப் பொருட்களும் சிறந்த தரத்தில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டன.



படிப்பகம்

www.padippakam.com



இதனால், இந்தியத் துணி, ஆடைகள் இறக்குமதி பெருமளவில் குறைந்தன. அலுமினியப் பாத்திரங்களும் பொருள்களும் இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லாதிருந்தன. இன்று காத்தான்குடியில் மட்டுமல்ல, கிழக்கு மாகாணத்தில் சாரம் உற்பத்தி மட்டுமல்ல, நெசவுத் தொழிலே அழிந்து விட்டது.

இந்தியத் துணிகளும், ஆடைகளும் மற்றும் சகல பொருட்களும் இங்கு பெருமளவில் கிடைக்கின்றன. இலங்கையில் சில தேயிலைத் தோட்டங்களைக் கூட இந்திய "டாட்டா" கம்பனி வாங்கியிருக்கிறது.

தென்னாசியாவில் ஒரு பலம் பொருந்திய வல்லரசாக இந்தியா உருவாகி வருகிறது. அது இப்பொழுது ஒரு அணு ஆயுத வல்லரசாகவும் விளங்குகிறது.

இலங்கை திருகோணமலை இயற்கைத் துறைமுகத்தின் மீது இந்தியாவிற்கும் கண் இருக்கிறது. வேறு எந்த வல்லரசும் திருகோணமலைத் துறைமுகத்தை பயன்படுத்துவதை இந்தியா விரும்பாது.

இதனால் தான் இலங்கை இனப்பிரச்சினைக்கு இலங்கையின் ஐக்கியத்தையும் தேசிய ஒருமைப்பாட்டையும் சுய நிர்ணயத்தையும் பாதிக்காத வகையில் தீர்வு காணப்பட வேண்டுமென்று இந்தியா வலியுறுத்தி வருகிறது.

விடுதலைப் புலிகள் வலிமை பெற்றால் அல்லது தமிழ் ஈழம் பெற்றுவிட்டால் திருகோணமலைத் துறைமுகம் மீது வெளியார் உரிமை கொண்டாட அனுமதிக்காது என்றும் இந்தியா கருதியிருக்கலாம்.

இன்று விடுதலைப் புலிகளை அடக்கி ஒடுக்கி அதன் மூலம் ஈழத்தில் தமிழ் மக்களை அழித்தொழிப்பதற்கும், அடக்கியொடுக்குவதற்கும் இந்தியா உதவி செய்வதை கதிர்காமருக்குக் கிடைத்த வெற்றி என்று பேரினவாதிகளும் பேரினவாதப் பத்திரிகைகளும் பாராட்டலாம்.

காலப்போக்கில் சிக்கிம் நாட்டுக்கு நேர்ந்த கதி இலங்கைக்கும் நேர மாட்டாதென்பது என்ன நிச்சயம்!? சிங்கள மக்கள் காலம் கடந்து தான் சிந்திப்பார்களோ?

05-03-2001



படிப்பகம்

www.padippakam.com



## சொல்லிப் பார்க்கலாமே!

நாளை பெரிய வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் 72 மணிநேர போர் நிறுத்தத்தை இலங்கை அரசு பிரகடனப் படுத்தக் கூடும் என்று வெளிநாட்டுச் செய்திச் சேவை ஒன்றின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

3 தினங்கள் தான் என்றாலும் போர் நிறுத்தம் செய்வதற்கு அரசு முன்வந்தால் அதுவே பெரிய ஆதரவு என்று கருதும் அளவுக்கு மக்கள் களைப்படைந்துள்ளனர்.

ஆனால் வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் இலங்கையின் மூன்று நாள் போர் நிறுத்தம் பற்றிய தகவலை வெளியிட்டிருந்தாலும் இச்செய்தி வெளியாகி 36 மணிநேரம் கடந்தும் கூட இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் நிரந்தரமான சுமூகமான தீர்வு காண வேண்டும் என்ற கோரிக்கையின் மீது இரு தரப்பும் ஏற்றுக் கொண்ட அனுசரணையாளரான நோர்வேயின் எரிக் சொல்ஹெய்ம் தன்னாலான சகல முயற்சிகளையும் செய்து வருகிறார்.

நோர்வே சமாதானத் தூதுவரின் முயற்சிக்கு உதவியாகவும் பேச்சு வார்த்தையை நல்லதொரு சூழலில் நடைபெற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்ததாலும் விடுதலைப் புலிகள் கடந்த ஆண்டு நத்தார் தினமான டிசம்பர் மாதம் 24ம் திகதி நள்ளிரவு முதல் ஜனவரி 24ம் திகதி நள்ளிரவு வரை ஒரு மாதப் போர் நிறுத்தத்தை அறிவித்தனர்.

அரசாங்கமும் இதற்கு இணங்க போர் நிறுத்தம் செய்யும் என்று அவர்கள் எதிர்பார்த்தனர். ஒரு மாத போர் நிறுத்தம் இப்போது நான்காவது மாதமும் முடிவடையும் நிலைக்கு வந்துள்ளது.

போர் நிறுத்தத்திற்குப் பதிலாக இலங்கை அரசு போரை முன்னெடுத்துச் செல்வதில் தான் முனைப்பாக நிற்கின்றது. வடக்கில் போர் விமானங்கள் குண்டு வீசி அழிக்கின்றன.

கிழக்கிலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியை நோக்கி படை நகர்த்தப்பட்டிருக்கின்றது.

பேச்சுவார்த்தைக்குப் புலிகள் தான் தேதி குறிக்க வேண்டும் என்று முக்கியமான அமைச்சர் கூறிய சில தினங்களுக்குள் இம்மாத முடிவுக்குள் பேச்சுவார்த்தைக்கான திகதி அறிவிக்கப்படுமென வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் கூறியிருந்தார்.

தடை செய்யப்பட்ட நிலையில் இப்பொழுது பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதில் அர்த்தம் இல்லை என்றும் தடை நீக்கப்பட்டாலே பேச்சுக்களில் கலந்து கொள்ளலாம் என்றும் இலங்கையிலுள்ள நோர்வே தூதுவர் மூலம் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச்செல்வன் அரசுக்கு அனுப்பிய செய்தி, அரசு மேலும் பேச்சுவார்த்தையை காலங்கடத்த பயன்படுத்தப்படுத்துவதற்கு ஒரு காரணமாக அமையக்கூடும்.



படிப்பகம்

www.padippakam.com



இது காரணமில்லாவிட்டாலும் அரசு உண்மையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இதுவரை ஆர்வமாக இருந்ததில்லை. இப்பொழுதும் கூட வெளியுலக அழுத்தம் காரணமாகவே பேச்சுவார்த்தைக்கு திகதி குறிப்பிட அரசு முன்வந்திருப்பதாக அறிவித்தது.

பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென இதய சுத்தியுடன் அரசு ஈடுபடவில்லை.

தலைவர் பிரபாகரனை ஒழித்துக்கட்ட வேண்டும் என்றும், தலைவரைத் தீர்த்துக் கட்டிவிட்டால் அதன்பின் போராட்டத்தைக் கொண்டு நடத்துவதற்கு தகுதியானவர் ஒருவரும் இல்லையென்றும் அரசு கருதுகிறது.

விடுதலைப் புலிகளை அழித்து ஒழிப்பதென்பது தமிழ் இன அழிப்புத்தான். இந்த அழிப்பிலும் ஒழிப்பிலும் தான் இலங்கை அரசு தீவிரமாக இருக்கின்றது. ஆக்கபூர்வமான அமைதி முயற்சி பற்றி அக்கறைப்படவேயில்லை.

இதன் பின் சந்திரிகா தயாரித்துள்ள தீர்வுத் திட்டத்தை தமிழர்கள் மீது திணித்து விடலாம் என்பதும் அரசின் திட்டம்.

உலகப் பயங்கரவாத இயக்கங்களுடன் விடுதலைப் புலிகளுக்குள்ள தொடர்புகள், உறவுகள் பற்றி ரஷ்யாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் கீழ் ரஷ்ய உளவுப்பிரிவு ஆராய்கிறதாம்.

விடுதலைப் போராட்டத்தில் அடக்குமுறையைத் தொடர்ந்தும் எதிர்த்துப் போராடும் ஒரு அமைப்பை பயங்கரவாத இயக்கமாக்குவதற்கு உலக நாடுகளின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறுவதில் தான் அரசு முழு மூச்சுடன் செயல்படுகிறது.

இதன் மூலம் தமிழ் இனத்தையும் அழித்து தமிழ் மண்ணையும் எடுத்துக் கொள்வது அரசினதும் பேரினவாதிகளினதும் திட்டமாகும்.

மொஸ்கோவின் நண்பர்களான நமது முற்போக்காளர்கள் இந்தச் சூழ்ச்சித் திட்டம் பற்றி ரஷ்யாவிற்கு கொஞ்சம் எடுத்துச் சொல்லிப் பார்க்கலாமே!

12-04-2001



படிப்பகம்

www.padippakam.com



## விலைக்கு வாங்க முடியாது!

யாழ்ப்பாணக்குடா நாட்டில் மீண்டும் உக்கிரமான போர் தொடங்கி நடந்து கொண்டிருக்கிறது. நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இந்தப் போரில் மூன்று தினங்களில் மாண்டு போனதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பலநூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்துள்ளனர். இலங்கையின் தலைநகரான கொழும்பு மாநகரிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளிலும் அநுராதபுரம் இராணுவ வைத்தியசாலைகளிலும் காயமடைந்த அரச படையினர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com



பொது வைத்தியசாலைகளில் இரத்ததானம் செய்யுமாறு பொதுமக்களை அரசாங்கம் வேண்டிக் கொண்டிருக்கிறது. நான்கு மாதங்கள் விடுதலைப் புலிகள் தன்னிச்சையாகப் போர் நிறுத்தம் செய்து, பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கு அரசும் போர் நிறுத்தம் செய்து ஒத்துழைக்குமாறு கோரி வந்தனர்.

போர் நிறுத்தம் இல்லை, போர் மூலமே பிரச்சினைக்குத் தீர்வு என்ற ரீதியிலேயே பிரதமரும், அரசும், படைத்தரப்பினரும் பதிலளித்தனர். இரு தரப்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மூன்றாம் தரப்பு உதவியாளரான நோர்வே நாடு மட்டுமல்ல, பொது அமைப்புக்கள் பலவும் அரசும் போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தையை முன்னெடுக்கும்படி கோரிக்கை விடுத்தன.

கதிர்காமத்திலிருந்து படைக்கு ஆட்திரட்டத் தொடங்கிய பிரதமர் அதில் திருப்தியடைந்திருக்க வேண்டும். நவீன போர் ஆயுதங்கள், ஒலியை விட வேகமான குண்டு வீச்சு விமானங்கள், வல்லரசுகள் படையினருக்கு அளித்த நவீன போர்ப்பயிற்சிகள் எல்லாம் ஆட்சி பீடத்திலுள்ளவர்களுக்கும் படைத்தலைமைக்கும் அதீத நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

நான்கு மாதங்களுக்குப் பின்னரும் போர் நிறுத்தத்தை நீடிக்கவில்லை என்று விடுதலைப் புலிகள் அறிவித்ததும் இதுதான் சந்தர்ப்பம் என்று "பயங்கரவாதத்துக்கு முடிவு கட்ட" அரசு-விடுதலைப் புலிகள் மீதான தாக்குதலைத் தொடங்கியது.

இதனால் நான்கு மாதங்கள் நிலவிய அமைதிக்கு முடிவு கட்டப்பட்டு விட்டது. மீண்டும் பிணக்குவியல்களும், அங்கம் இழந்தவர்களும் கண்ணில் படுகின்றனர். பயங்கரவாதப் பூச்சாண்டி இன்னும் எத்தனை காலத்துக்கு? வறட்டுக் கௌரவத்தை விடுத்து மூன்றாந்தரப்பு உதவியை இனியாவது பயன்படுத்தி நாட்டின் நிரந்தர அமைதிக்கு வழிகாண வேண்டியது ஆட்சி பீடத்தின் தலையாய கடமை!

ஆயுத வலிமைகளை விட மனோவலிமை தான் அதிக சக்தி வாய்ந்தது. இது கதிர்காமத்திலிருந்து தொடங்கித் திரட்டினாலும் சுலபத்தில் கிடைக்க முடியாதது. இதை எங்கும் விலை கொடுத்து வாங்கி விடவும் முடியாது. இதை உணர்ந்தால் சரி.!

29-04-2001



படிப்பகம்

www.padippakam.com



## அழிவா? அமைதியா?

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி, மக்களின் எழுச்சியை அடக்கி ஒடுக்கி ஆட்சி அதிகாரத்தில் நிலையாக இருந்து விடலாமென்று கனவு கண்டவர்கள் பலர்.

இவர்களில் சிலர் தமது தவறுகளுக்காக மனம் திருந்தி மீண்டும் மக்களால் மதிக்கப் பெற்று புகழுடன் மறைந்திருக்கிறார்கள். மற்றும் சிலர் மக்களின் அதிருப்தியையும் வெறுப்பையும் சம்பாதித்து மதிப்பிழந்து பெயர் தெரியாமல் மறைந்திருக்கின்றனர். வேறு சிலர் பதவி நீக்கம் செய்யப்பட்டுச் சிறைத்தண்டனை அனுபவித்தும் சீரழிந்தும் மறைந்திருக்கின்றனர். இலங்கையில் ஆட்சி அதிகாரத்துக்குச் சுலபமாக வருவதற்கு மொழி வெறியை ஏணியாகப் பயன்படுத்தி ஆட்சிக்கு வந்தவர் சந்திரிகாவின் தந்தை எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க.

ஆட்சிக்கு வந்த பின்னர் தமது தவறை உணர்ந்து திருத்திக் கொள்ள முயன்று தமிழர் தலைவர் செல்வநாயகத்துடன் ஒரு ஒப்பந்தமும் செய்தார். ஆனால் அவர் வளர்த்து விட்ட இனவாதப் பயங்கரவாதம் புத்த பிக்குகள் வடிவில் அவர் உயிரையே பலி கொண்டது. இதன் பின் ஆட்சிக்கு வந்த



படிப்பகம்

www.padippakam.com



சிறிமாவோ பண்டாரநாயக்கவும் சரி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் சரி இனவாதத்தை அடக்கி நாட்டின் ஐக்கியத்தை வளர்ப்பதற்குப் பதிலாக இன பேதத்தை வளர்த்தனர்.

ஆளும் வர்க்கம் சிங்கள இனம் என்றும் ஆளப்படும் இனம் தமிழர்கள் என்றும் ஒரு மாயை ஏற்படுத்துவதற்கு சிங்களப் பேரினவாதிகளின் துணையுடன் இவர்கள் செயற்பட்டனர். சிங்களப் பேரினவாதிகளும் சிங்களப் பேரினவாதப் பத்திரிகைகளும் இதற்கு ஆதரவாகவும் ஆதாரமாகவும் செயற்பட்டு வருகின்றன.

சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க 1994ம் ஆண்டில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தன்னிடம் நல்ல திட்டம் தயாராக இருக்கிறது என்று கூறிக் கொண்டு தேர்தலில் போட்டியிட முன்வந்ததும் அவரை பண்டாரநாயக்கவின் வாரிசு என்ற முறையில் பார்க்காமல் முற்போக்குச் சிந்தனையும் இன ஒருமைப்பாட்டுவாதியுமான விஜயகுமாரணதுங்கவின் துணைவியும் வாரிசும் என்றே தமிழ் மக்கள் கருதி அமோகமாக வெற்றி பெறச் செய்தனர்.

மக்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக, சந்திரிக்கா அம்மையாரும் இனவாதத்தில் பேரினவாதிகளால் இழுக்கப்பட்டு பின்னர் அதில் முற்றாக மூழ்கியும் விட்டார்.

இன ஒழிப்புக்குத் தடையாக தமிழ் இளைஞர்களான விடுதலைப் புலிகள் வலிமையுடன் இருப்பதைக் கண்ட பேரினவாதிகள் அவர்களுக்குப் பயங்கரவாத முத்திரை குத்தி, ஒரேயடியாக உலக நாடுகளின் உதவியுடனும் அங்கீகாரத்துடனும் ஒழித்துக் கட்டத் திட்டம் தீட்டினர்.

இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு சந்திரிகாவை அவர்கள் சரியாகப் பயன்படுத்த முன்வந்தனர். ஆட்சி அதிகாரம் சந்திரிகாவை தடம் பிரளச் செய்து விட்டது.

ஆயுத பலத்தால் எதையும் சாதிக்க முடியும் என்ற துணிவும் சந்திரிகாவுக்கு ஏற்பட்டது. பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக உதட்டளவில் சொல்லிக் கொண்டு ஆயுத பலத்தை நம்பிச் செயல்பட்டார்.



படிப்பகம்

www.padippakam.com



போர் நிறுத்தம் இல்லை என்றும் பேச்சுவார்த்தைக்கு கதவுகள் திறந்தே இருக்கின்றன என்றும் கூறி வந்த சந்திரிக்கா இறுதி வரை இராணுவ ரீதியில் புலிகளுக்கு எதிரான தாக்குதலைத் தொடர்வது என்ற தமது இலக்கில் இருந்து விலகப் போவதில்லையென்றும் சில தினங்களுக்கு முன்னர் கூட கூறியிருந்தார்.

நவீன ஆயுதங்கள், நவீன போர் விமானங்கள், நவீன போர்ப் பயிற்சி என்றும் அவர் வீறாப்பாகப் பேசியிருந்தார். உலக பயங்கரவாதி என்று முத்திரை குத்திய பின்லேடனுக்கும் மற்றும் உலகிலுள்ள பயங்கரவாத இயக்கங்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருக்கின்றது என்று பிரச்சாரம் செய்வதில் அரசும் பேரினவாதமும் வெற்றி பெற்றது உண்மை.

இதே சமயம் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சிக்குள் பிளவு என்றும் அந்தக் கட்சிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் உறவு என்றும் வேறு பிரசாரம்! சந்திரிகா ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்பதிலும் ஆட்சி அதிகாரத்துக்கு வருவதிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆசையும் அதற்கான முயற்சியும் அவர்களுக்கு

தமிழ் மக்கள் நிம்மதியாக வீட்டிலும் வீதியிலும் நடமாட முடியாத நிலை பற்றியோ அடிமைகளிலும் கேடாக அவர்கள் திரிவது பற்றியோ அவர்களுக்குக் கவலை இல்லை. தமது சொந்த மண்ணில் சொந்த வீட்டில் நிம்மதியாக பாதுகாப்பாக சுதந்திரமாக சுய மரியாதையுடன் வாழ வழி பிறக்குமா என்ற கவலை தமிழ்மக்களுக்கு.

நான்கு மாதங்கள் போர் நிறுத்தத்தை தென்னிலங்கை மக்களும் நிம்மதியாக அனுபவித்தனர். ஆயுத பலத்தை மட்டும் விரும்பிய அரசு இன்று ஆக்கிரமிப்புப் போரில் பின் வாங்கியது. இப்போதும் கூட இதை ஒரு அவமானமாகக் கருதாது இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு நோர்வேயின் உதவியைச் சரியாகப் பயன்படுத்தி நாட்டில் அமைதியைக் கொண்டு வந்து நாட்டை முன்னேற்றுவதற்கு சகல அரசியல் கட்சிகளினதும் ஆதரவைப் பெற முன்வருவதே விவேகமான அரசியலாக அமையும். வரட்டுக் கௌரவம் நாட்டில் அமைதியை கொண்டு வராது அழிவைத்தான் ஏற்படுத்தும். இதை உணர்ந்து கொண்டால் நல்லது.

30-04-2001



படிப்பகம்

www.padippakam.com



## சிங்கள மக்களை ஏமாற்றும் ஊடகங்கள்

"போருக்கு முடிவு கொண்டு வரும் நோக்குடன் விரைவில் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க அரசு விருப்பம் கொண்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை விடுதலைப் புலிகள் இயக்கம் நழுவ விடாமல் நல்லபடியாகப் பயன்படுத்த வேண்டும்" என்று தகவல் ஊடகத்துறைத் திணைக்களம் கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் கூறுகிறது.

பேச்சுவார்த்தை என்றும் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்றும் பேச்சுவார்த்தை மேசைக்கு விடுதலைப் புலிகளைக் கொண்டு வருவதற்காகத்தான் போர் புரிகிறோம் என்றும் அரச தரப்பில் கூறியவைகள் ஏராளம்.

புலிகளைப் பலவீனப்படுத்தி பேச்சுவார்த்தைக்குச் சம்மதிக்க வைப்-பதற்காகவே போர் செய்கிறோம் என்று படைத்தரப்பினரும் சொன்னார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



பேச்சுவார்த்தைக்கான திகதியை விடுதலைப் புலிகள் தான் அறிவிக்க வேண்டும் என்று பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவர் சமீபத்தில் கூறியிருந்தார்.

பின்னர் பேச்சுவார்த்தைக்கான திகதி மாத முடிவில் அறிவிக்கப்படுமென வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் போன மாதத் தொடக்கத்தில் அறிவித்திருந்தார்.

அவர் சொன்ன மாதம் நேற்றுடன் முடிவடைந்து விட்டது. அவர் தான் இன்னமும் பேச்சுவார்த்தைக்கான திகதியைக் குறிக்கவில்லை.

இதே சமயம் போர் மூலமே போருக்கு முடிவு கட்டப்படுமென்றும் பேச்சுவார்த்தையைப் பற்றித் தமக்கு எதுவும் தெரியாதென்றும் நாட்டின் பிரதமர் இரத்தினசிறி விக்கிரமநாயக்கா கூறி வந்ததுடன் "போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை. போர் தொடரும்" என்று கூறி படைக்கும் அவர் ஆட்திரட்டி வந்தார்.

"ஈவிரக்கமற்ற பிரிவினைவாதப் பயங்கரவாதக் குழுவான தமிழீழ விடுதலைப் புலிகள், ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட அரசைக் கவிழ்ப்பதற்குக் கிளர்ச்சி செய்ய முனைகிறார்கள்" என்றும் பிரதமர் சில தினங்களுக்கு முன் தெரிவித்திருந்தார்.

இதே சமயம் நாட்டின் பிரதேச ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்கு உறுதி பூண்டிருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க போர் நிறுத்தம் இல்லையென்றும் பேச்சுவார்த்தை தொடர்ந்தாலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவத் தாக்குதலைத் தொடர்வது என்ற இலட்சியத்தில் மாற்றம் இருக்காது என்றும் கூறியிருந்தார்.

பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக நல்லெண்ண நடவடிக்கையாக நான்கு மாதங்கள் தன்னிச்சையாக போர் நிறுத்தம் செய்து வந்த விடுதலைப் புலிகள் அரசிடம் இருந்து இதற்குச் சார்பாக எந்த சமிக்ஞையும் கிடைக்காத நிலையில் ஐந்தாவது மாதத்திற்கு போர் நிறுத்தத்தை நீடிப்பதில்லை என அறிவித்தனர்.

இதற்காக காத்திருந்தது போல் அரச படைகள் எழுதுமட்டுவாளில் போரைத் தொடங்கி முன்னேறிச் சென்றனர். இதைத் தடுத்துப் போரிட்ட புலிகள் அரச படையினரைப் பின் வாங்கச் செய்தனர். அரச படைகள் எதிர்பார்த்ததற்கு மாறாக அதிக இழப்பையே சந்தித்தனர்.



படிப்பகம்

www.padippakam.com



இந்த நிலையில் தான் மீண்டும் பேச்சுவார்த்தை பற்றி ஊடகத் திணைக்களம் அறிக்கை விடுத்திருக்கிறது.

பேச்சுவார்த்தையில் கௌரவமாகக் கலந்து கொள்வதற்கு விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும், தகுந்த சூழ்நிலையை உருவாக்க அரசு தன்னிச்சையாக போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று இரண்டு முக்கிய அம்சங்கள் உள்ளிட்ட சில கோரிக்கைகளை விடுதலைப் புலிகள் முன் வைத்துள்ளனர்.

இனியும் காலங்கடத்துவதில் பயனில்லை. இரு தரப்பும் பேச்சுவார்த்தைக்கு இதய சுத்தியுடன் முன் வர வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் தனது முயற்சியில் நம்பிக்கையோடு நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மீண்டும் கொழும்புக்கு வந்திறங்கியிருக்கிறார்.

பேச்சுவார்த்தைக்கான நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்குவது இரு தரப்பையும் பொறுத்தது என்று கூறியிருக்கும் எரிக்சொல்ஹெய்ம் எதிர்காலத்தில் ஏதாவது வெற்றி கிடைப்பின் இரு தரப்பும் சமாதானத்துக்கான பாதையில் செல்வதற்குத் தயாராகி இருப்பதைப் பொறுத்தேயாகும் என்று கூறியிருக்கிறார்.

பேச்சுவார்த்தைக்கு அனுசரணையாளராகவோ உதவியாளராகவோ செயல்பட முன்வந்துள்ள நோர்வேயின் சமாதானத் தூதுவரை நன்கு பயன்படுத்துவதில் தான் அரசு விரும்புவதாகக் கூறிக் கொள்ளும் இதய சுத்தியான பேச்சுவார்த்தையை வெற்றி பெறச் செய்ய முடியும்.

போரில் வெற்றி பெற்றவர்கள் எவருமில்லை. எல்லோருமே தோல்வி கண்டவர்கள் தான் என்ற கூற்று மீண்டும் நினைவு படுத்தப்பட வேண்டும்.

"போர் வெற்றிகளை விடப் புகழ் பெற்ற வெற்றிகள் அமைதிக்கு சமாதானத்துக்கு இருக்கின்றன" என்ற அறிஞர் மில்ற்றனின் வார்த்தையை சந்திரிகா அம்மையார் சிந்தித்துப் பார்த்தால் சமாதானம் விரைவில் மலரும்.

01-05-2001



படிப்பகம்

www.padippakam.com



## அரசியல் விவேகம்!

நாட்டின் பொருளாதார நிலை மீள முடியாத கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இலங்கையின் பொருளாதாரத்தைப் புனரமைக்குமாறு சர்வதேச நாணய நிதியமும் மத்திய வங்கியும் அரசுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளன.

இப்பொழுதே வாழ்க்கைச் செலவுப் பழுவை தாங்க முடியாமல் மக்கள் அவதிப்படுகின்றனர். இந்த நிலையில் மேலும் மேலும் வரிகள் விதிக்கப்பட்டால் மக்களால் அவற்றைத் தாங்கிக் கொள்ள முடியாது.

வேலை வாய்ப்புக் கிடைத்து விட்டதாகவும் நல்ல சம்பளம் கிடைக்குமென்றும் படைகளில் அவசரமாக ஆட்கள் சேர்ந்தனர். அதில்



படிப்பகம்

www.padippakam.com



சேர்ந்தவர்கள் தங்களால் தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் ஆயிரக்கணக்கானோர் அவற்றிலிருந்து தப்பியோடினர்.

இப்பொழுது நாட்டில் நடைபெறும் கொலை, கொள்ளை, கள்ளநோட்டு அடித்தல் போன்ற சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டதாக அகப்பட்டவர்களில் பலர் பட்டாளத்திலிருந்து தப்பிச் சென்றவர்கள் என்றே அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பொருளாதாரச் சுமை தாங்க முடியாத கட்டத்தை அடையும் போது கொலை, கொள்ளைகள் அதிகரிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. இதற்காகச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருக்கும் சமூக விரோதிகளுக்கு மாவனல்லை போன்ற சம்பவங்களும் வழிவகுத்துக் கொடுக்கும். முன்னர் 1958ம் ஆண்டிலும் அதன் பின் 1977, 1983ம் ஆண்டுகளிலும் இப்படி சமூக விரோதிகள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டதை நாடறியும்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படாத வரை நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்பட முடியாது. நாட்டில் சமாதானம் ஏற்படுமானால் ஒவ்வொரு பிரதேச சபைக்கும் வருடாந்தம் அபிவிருத்திச் செலவுக்காக 412 மில்லியன்களை ஒதுக்க முடியும். பாடசாலைகள், பாலங்கள், நெடுஞ்சாலைகள், கைத்தொழில் நிறுவனங்கள் பல அபிவிருத்திப் பணிகளின் மூலம் நாட்டை சுபீட்சபுரியாக்கலாம் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் எரிபொருள் மின்சக்தி அமைச்சருமான ஜெனரல் அநுருத்த ரத்வத்த கண்டியில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் கூறியிருந்தார்.

இப்போது நடைபெறும் போருக்கு ஆண்டொன்றுக்கு 8600 கோடி ரூபா செலவாகிறது என்றும் கூறியிருக்கும் அமைச்சர் இதன் காரணமாகவே பொருட்களின் விலை அதிகரித்திருக்கின்றது என்றும் கூறியிருக்கிறார்.

போரினால் தான் செலவு அதிகரித்திருக்கிறது என்றும் சகல கஷ்டங்களுக்கும் இந்தப் போர் தான் காரணம் என்றும் அமைச்சர் அநுருத்த மட்டுமல்ல, மற்றும் அமைச்சர்களும் அரசியல்வாதிகளும் கூறத் தவறுவதில்லை.

ஆனால் போரை முடிவுக்குக் கொண்டு வந்து இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு விட்டுக் கொடுத்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய அவசியத்தை இவர்கள் எடுத்துச் சொல்வதற்கு ஏன் தயங்குகிறார்கள்?



படிப்பகம்

www.padippakam.com



அரசியல் யாப்பு தயாராக இருக்கிறது. இதை ஐக்கிய தேசியக் கட்சியும் ஒத்துழைத்து நிறைவேற்றினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிடும் என்று ஆட்சி பீடத்தில் உள்ளோர் கூறுகின்றனர்.

பிரச்சினையில் சம்பந்தப்பட்டு, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் சம்மதமில்லாமல் எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி என்ன பயன்? இவர்கள் சொல்லும் அரசியல் யாப்பை எதிர்த்து கொழும்பில் பிக்கு ஒருவர் உண்ணாவிரதம் இருக்கவும் பாராளுமன்றமே கலைக்கப்பட்டும், பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடப்பட்டது. இனியும் இதை அவர்கள் விடுவார்களா?

தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டால், விடுதலைப் புலிகளுடன் பேசுவோம் என்று ஆட்சி பீடத்தில் உள்ளவர்கள் கூறி வந்தனர். தமிழீழக் கோரிக்கையை விட்டு அதற்கு மாற்றீடாக சுயாதிக்கமுடைய சமஷ்டி ஆட்சி அமைப்புக்கு விடுதலைப் புலிகள் தயாராக இருப்பதை பல சந்தர்ப்பங்களிலும் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். உலக நாடுகள் பலவும் கூட இதற்கு ஆதரவு தெரிவித்ததாகத் தோன்றுகிறது.

இலங்கையில் இனியும் போர் மூலம் போருக்கு முடிவு கட்டலாம் என்ற முடிவைக் கைவிட்டு வரட்டு கௌரவத்தையும் நீக்கி நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்திப் பேச்சுவார்த்தைக்குப் புலிகளைக் கொண்டு வருவதற்கு உடனடியாகப் போரை நிறுத்தி அவர்களோடு பேசுவதற்கு அவர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது தான் இப்போதுள்ள இராஜதந்திரமாகத் தோன்றுகிறது.

இனியும் பிடிவாதம் பிடித்து விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று பூச்சாண்டி காட்டிக்கொண்டு தொடரலாம் என நினைப்பது நல்லதாகத் தெரியவில்லை. சிங்களப் பொதுமக்கள் உண்மை நிலையைப் புரிந்து கொள்வார்கள்.

இதே சமயம் எதிர்க்கட்சித் தலைவருக்கும் நிலைமையை விளக்கி நாடு பிளவுபடாமல் சமஷ்டி ஆட்சி அமைப்பைக் கொண்டு வருவதற்கு அவர்களுடைய ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்வது அரசியல் விவேகமாகும்.

05-05-2001



படிப்பகம்

www.padippakam.com



## பத்திரிகைச் சுதந்திரம் அவர்களுக்கு

உலக பத்திரிகைத் தினம் மே மாதம் மூன்றாந் திகதி உலக நாடுகளில் அனுஷ்டிக்கப்பட்டது. பத்திரிகைச் சுதந்திரம் உள்ள நாடுகளிலும் அது இல்லாத நாடுகளிலும் கூட ஒப்பாசாரத்திற்கு வழமையாக நினைவு தினம் கொண்டாடப்படுவது போல இத்தினமும் கொண்டாடப்பட்டிருக்கிறது.

பத்திரிகைச் சுதந்திரத்தை சுதந்திரமாகக் கொண்டாடக்கூடிய நிலையில் நமது நாடு இல்லை என்பதை உணர்த்துவதற்காகவோ என்னவோ காலம் தாழ்த்தியாவது ஒரு ஒப்பாசாரத்துக்காக கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம் இன்று மட்டக்களப்பில் உலக பத்திரிகைச் சுதந்திர தினத்தை அனுஷ்டிக்கிறது.

"அவசரகாலச் சட்டத்தின் கீழ் பத்திரிகைச் சுதந்திரம்" என்ற தலைப்பில் ஒரு கலந்துரையாடல் நிகழ்வாக இத்தினத்தை இவர்கள் நடத்துகின்றனர்.

உலக பத்திரிகைச் சுதந்திர தினமான கடந்த மூன்றாம் திகதி இலங்கை அரசு அவசர காலச்சட்ட விதிகளை நினைவுபடுத்தி பொதுமக்களை எச்சரித்து ஒரு தகவலை வெளியிட்டிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



இராஜ துரோக நடவடிக்கைகள், இதற்குத் தூண்டக்கூடிய நடவடிக்கைகளை சொல்லிலும், செயலிலும், எழுத்திலும், நடத்தையிலும் அல்லது இது போன்ற செயல்களில் ஈடுபட்டால் அவை மூன்று மாதம் முதல் இருபது வருடம் வரையான சிறைத்தண்டனைக்குரிய குற்றம் என இதில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் 2000ம் ஆண்டு மே மாதம் பிறப்பிக்கப்பட்ட இந்த விதிகளை மீண்டும் கடந்த மூன்றாம் திகதி அரசு நினைவு படுத்தியிருக்கிறது.

இந்தச் சட்ட விதிகள் அமுலிலிருந்த பொழுது தான் சில சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகள் தமிழீழ விடுதலைப் புலிகளையும் தலைவர் பிரபாகரனையும் உலகின் மிகக் கொடூரமான பயங்கரவாதிகள் என்று தொடர்ந்து எழுதி தமிழ் மக்களையே இந்நாட்டின் விரோதிகள் என்ற முறையில் சித்திரிக்க முயன்றுள்ளன.

இலங்கையிலுள்ள தமிழர்கள் புலம் பெயர்ந்த தமிழர்களின் தொழில்கள், தொழில் முதலீடுகள் பற்றி விபரம் தேடி எடுத்து வெளியிட்டு இவர்கள் ''பயங்கரவாத விடுதலைப் புலிகளுக்கு'' நிதியுதவி அளிப்பதாகவும் குற்றம் சாட்டி அவர்கள் மீது பெரும்பான்மைச் சிங்கள மக்களுக்கு வெறுப்பு ஏற்படக்கூடிய முறையில் பிரசாரம் செய்தன.

இதே சமயம் வெளிநாடுகளிலுள்ள நிலையங்கள் பற்றியும் அதற்கு கத்தோலிக்க மதகுருமாரின் பங்களிப்புப் பற்றியும் அவர்கள் விசா இல்லாமல் அந்த நாட்டில் தங்கியிருப்பது பற்றியும் கூட இப்பத்திரிகைகள் எடுத்துக் காட்டின.

தமிழ் மக்கள் மீதும், கத்தோலிக்க மதத்தவர் மீதும் வெறுப்பு ஏற்படக்கூடிய முறையில் இந்த ஆங்கில, சிங்கள பத்திரிகைகள் செய்திகளையும், கட்டுரைகளையும், தலையங்கங்களையும் எழுதி வெளியிட்டு வந்தன.

இன்னும் இவை ஓயவில்லை. இது அவர்களுக்குரிய பத்திரிகைச் சுதந்திரம். இதனால் நாம் காலந்தாழ்த்திப் பத்திரிகைச் சுதந்திர தினத்தை அனுஷ்டிப்பது பொருத்தம் தானே!

06.05.2001



படிப்பகம்

www.padippakam.com



# விளங்கிக் கொள்ள நிறைய இருக்கின்றன

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனிதனைக் கடித்த கதை என்பது போல் தமிழ் மக்கள் மீது தொடர்ந்த இனக்குரோதமும் இனவெறித் தாக்குதலும் திட்டமிட்டு இப்போது இஸ்லாமிய சகோதரர் மீதும் திரும்பியிருக்கிறது.

மாவனல்லையில் நடந்த சம்பவம் வெறும் கப்பம் வாங்கும் காடையர்களினால் ஏற்பட்டதென்று ஒதுக்கி விட முடியாது. நாட்டின் இனங்களுக்கிடையேயும், மதங்களுக்கிடையேயும் மோதலையும் குழப்பங்களையும் ஏற்படுத்தி ஏகச் சக்கராதிபத்தியத்தை ஏற்படுத்துவதற்கு திட்டமிட்டு ஒரு குழு செயற்படுவதாகவே தோன்றுகிறது.

இது நாடு சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே மறைமுகமாக இயங்கி வருவதாக எண்ணத் தோன்றுகின்றது. இதற்கு அரசியல்வாதிகள் பலிக்கடாவாகப் பயன்படுத்தப்பட்டார்களா அல்லது அரசியல்வாதிகள் தான் இதைத் தோற்றுவித்தார்களா என்பது வருங்காலத்தில் ஆய்வுக்குரியவையாக இருக்கின்றன.

இப்பொழுதும் கூட இதன் அடிப்படைக் காரணங்களை அறிந்து கொள்ள முற்பட்டால் சில சக்திகள் இப்பயங்கரவாதச் செயல்களுக்குப் பின்னணியிலிருப்பதாகக் குற்றம் சாட்டுவதில் தான் அதிபர் சந்திரிகா சிந்திப்பதாகத் தோன்றுகிறது.

அநாமதேயக் குழுவொன்று திட்டமிட்டு நாட்டில் பௌத்த சிங்களவர்கள் மட்டுமே வாழ முடியுமென்ற நோக்கத்துடன் செயல்படுவதாகவே தோன்றுகிறது. இனியும் இந்த நிலையை நீடிக்க அனுமதித்தால் இலங்கை என்ற ஒரு தேசமே இல்லாமல் போய்விடும்.

இப்போதுள்ள நிலையில் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்காகவும் தமது பாதுகாப்புக்காகவும் நடத்தும் போராட்டத்தை பயங்கரவாத இயக்கம் என்று பிரசாரம் செய்து இன ஒடுக்கு முறையில் வெற்றி பெற்று புதுமுறையான ஜனநாயகத்தை அமைக்கலாம் என்று ஆட்சி பீடத்திலுள்ளவர்களும் பேரினவாதிகளும் செய்த கற்பனை வெற்றி பெறத்தவறி விட்டதாகவே சொல்லலாம்.



படிப்பகம்

www.padippakam.com



இனியும் இலங்கையில் இன, மத ஐக்கியத்தைப் பேணிப் பாதுகாத்து நாட்டை முன்னேற்றுவதற்கு "பயங்கரவாதப் பூச்சாண்டி"யைக் கைவிட்டு இதய சுத்தியோடு செயற்பட வேண்டியது அவசியம்.

பயங்கரவாதப் பூச்சாண்டி காட்டி உலக நாடுகளில் செய்த பிரசாரம் இனியும் எடுபடாது. பயங்கரவாதத்தை ஒப்புக் கொண்டாலும் "பேச்சுவார்த்தை மூலம்" இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்பதையும் நோர்வே நாடு எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்குவதாகவும் "பயங்கரவாத இயக்க" மென்று புலிகளைத் தடை செய்த இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் கூடத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இருக்கின்றன.

இதே நாடுகள் தான் இலங்கையின் ஒருமைப்பாட்டை ஆதரித்தும் பிரிவினையை எதிர்த்தும் குரல் கொடுக்கின்றன. பிரிவினைக்குப் பதிலாக மாற்றீடாக சுயாதிபத்தியமுள்ள சமஷ்டி ஆட்சி அமைப்பை ஏற்றுக் கொள்ள விடுதலைப் புலிகள் சம்மதிக்க ஒப்புக் கொண்டால் இலங்கை அரசுக்கு பயங்கரவாத எதிர்ப்புக்கு ஆதரவு கொடுக்கும் அரசுகள் யாரை ஆதரிக்கும்?

இனியாவது இதை இலங்கையில் பேரினவாதிகளும் வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் உட்பட சந்திரிகா அரசும் சிந்திக்க வேண்டும்.

அமெரிக்காவுக்குச் சென்ற கதிர்காமர் "பயங்கரவாதம்" பற்றி அமெரிக்கா குரல் கொடுக்கச் செய்ததில் வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால் இரு தரப்பும் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வர வேண்டுமென்று சொல்வதைத் தடுக்க முடியாமல் போய் விட்டது.

இதனால் புலிகள் பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்க மேற்கொண்ட போர் நிறுத்தத்தை அமெரிக்காவும் ஆதரித்து இலங்கையும் அதைப் பின்பற்ற வேண்டுமென்பதையும் சொல்லாமல் சொல்லியிருக்கிறது.

கதிர்காமரும், சந்திரிகா அரசும், பேரினவாதிகளும் விளங்கிக் கொள்ள வேண்டியவை இன்னும் நிறையவே இருக்கின்றன. போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று பேசியவர்கள் இனி என்ன சொல்லப் போகிறார்கள்?

07-05-2001



படிப்பகம்

www.padippakam.com



# அழிவுக்குப் பின் தான் ஞானமோ?

"வசிஷ்டர் வாயால் பிரும்மரிஷி" என்பது ஒரு முதுமொழி. நல்லதையே சொல்லாத ஒருவர் நல்லதைச் சொல்லி விட்டால் இதை எடுத்துக் காட்டாகச் சொல்வதுண்டு.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வு காண்பதற்காக தளராமல் முயற்சி மேற்கொண்டு வரும் நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் முயற்சியைப் பாராட்டியிருப்பதைத்தான் "வசிஷ்டர் வாயால் பிரும்மரிஷி" என்ற முதுமொழிக்கு ஒப்பிட்டுச் சொல்லலாம்.

நோர்வே அரசு மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிக்கு முழு ஒத்துழைப்பையும் இலங்கை அரசு வழங்கத் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் கதிர்காமர் கூறியிருக்கிறார். நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இதய சுத்தியோடு தாம் எடுத்த முயற்சிக்கு எத்தனை இடையூறுகள் விளைவிக்கப்பட்ட போதிலும் சளைக்காமல் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்.

நோர்வே நாட்டின் தேசியக் கொடியை கொழும்பில் இனவாதிகள் நோர்வே தூதரகத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்து எரித்த போதிலும் நோர்வேக்கும் எரிக் சொல்ஹெய்முக்கும் களங்கம் கற்பித்த போதிலும் சிறிதும் மனம் சலிக்காது கொழும்பு, இந்தியா, லண்டன் என்று பறந்து திரிந்து சந்திக்க வேண்டியவர்களைச் சந்தித்துப்பேசி தனது முயற்சியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்.

போர் மூலமே போருக்கு முடிவு என்று இலங்கையின் பிரதமர் போர் முரசம் கொட்டிய போதிலும் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் சமயத்தில் நோர்வேயின் சமாதான முயற்சி முடிந்து விட்டது என்று பிரதமர் கூறிய போதிலும் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சோர்ந்து விடவில்லை.

சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட சமயத்தில் கூட வெளி நாடுகளிலிருந்து ஆயுதங்களையும் படைச்சாதனங்களையும் இலங்கை அரசு இறக்குமதி செய்து போருக்குத் தயார் செய்து கொண்டிருந்த போதும் கூட எரிக் சொல்ஹெய்ம் களைப்படைந்து விடவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



விடுதலைப் புலிகள் நான்கு மாதங்கள் ஒரு தலைப்பட்சமாகப் போர் நிறுத்தம் செய்த போதும் அதை ஐந்தாவது மாதத்துக்கும் நீடிக்க முடியுமா என்று தான் எரிக் சொல்ஹெய்ம் சிந்தித்தார்.

போர் நிறுத்தம் முடிந்ததும் இலங்கைப் படைகள் விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தாக்குதலைத் தொடர்ந்து மீண்டும் போரை முன்னெடுத்த போதும் சமாதான முயற்சிக்குப் பின்னடைவு ஏற்பட்டு விடுமோவென்று தான் எரிக் சொல்ஹெய்ம் கவலைப்பட்டார்.

தீச்சுவாலை ஒன்று வீசத் தொடங்கிய தொடக்கத்திலேயே அணைந்து விட்டாலும் அணையாவிட்டாலும் எரிக் சொல்ஹெய்ம் தமது முயற்சியைக் கைவிடவில்லை. அமைச்சர் கதிர்காமர் அமெரிக்காவுக்குப் போக எரிக் சொல்ஹெய்ம் கொழும்புக்கு வந்தார்!

ஜனாதிபதியையும் மற்றவர்களையும் சந்தித்துப் பேசிய எரிக் சொல்ஹெய்ம் மீண்டும் லண்டன் சென்று அன்ரன் பாலசிங்கத்தையும் சந்தித்துப் பேசினார்.

போர் நிறுத்தமும் இல்லை. பேச்சுவார்த்தையும் இப்போதைக்கு இல்லை என்ற தோரணையில் விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவர வேண்டும் என்று அரசு கூறி வந்தது. இப்பொழுது மோதல் தவிர்ப்புக்கு அரசு ஒப்புக் கொண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. எரிக் சொல்ஹெய்மும் இதை உறுதிப்படுத்தியிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே சமயம் பேச்சுவார்த்தைகள் வெளிநாடு ஒன்றில் நடைபெறுமென்பதும் எவருடைய தயாரிக்கப்பட்ட திட்டங்களும் இல்லாமல் இலங்கையின் இனப்பிரச்சினையை அடிப்படையிலிருந்து ஆராய்ந்து ஓர் உடன்பாடு காண்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படலாமென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நாடு பிளவுபடாமல் தடுக்க வேண்டுமானால் சமஷ்டி ஆட்சி அமைப்புத்தான் ஒரே வழி என்ற யோசனையே இரு தரப்புக்கும் ஏற்றதாக அமையுமென்ற நிலைப்பாடு சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாக இணக்கப்பாட்டை ஏற்படுத்தலாமென்றும் கருதப்படுகிறது. இழப்புகளுக்கும் அழிவுகளுக்கும் பின்னர் தான் ஞானம் பிறக்குமோ தெரியாது!

12-05-2001



படிப்பகம்

www.padippakam.com



## பாராளுமன்ற உறுப்பினர் மட்டும் போதுமா?

இன மோதல்கள் வன்முறைகள் நாட்டின் எப்பகுதியிலும் இடம்பெறும் போதும் உடனடியாகச் செயலில் இறங்கி நிலைமையைக் கட்டுப்படுத்த நிரந்தர பாராளுமன்றக் குழுவொன்றினை அமைப்பதற்கு இன விவகார, தேசிய ஒருங்கிணைப்பு, கனிய வளத்துறை அமைச்சர் அதாவுட செனிவிரத்ன தீர்மானித்துள்ளதாக ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

இப்பாராளுமன்றக் குழுவில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளையும் சேர்ந்த பிரதிநிதிகளும் சிறுபான்மை இனங்களின் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கவுள்ளதாகவும் அந்தச் செய்தி கூறுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தான் நாட்டில் ஏற்படும் வன்முறைகளுக்கெல்லாம் காரணமென்று நினைத்துத் தான் இன விவகார, தேசிய ஒருங்கிணைப்பு கனியவளத்துறை அமைச்சர் இப்படியொரு குழுவினை நியமிக்க வேண்டுமென்று முடிவுக்கு வந்தாரோ தெரியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



எப்படியிருந்தாலும் சகல கட்சிகளையும் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக்குழுவொன்றை நியமிப்பது இன வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு உபயோகமாக இருக்குமென்பது உண்மை தான்.

ஆனாலும் பாராளுமன்றத்தில் அங்கம் பெறாமலும், தேர்தல்களில் தோல்வியடைந்தவர்களும் தான் நாட்டில் பொதுவாகக் குழப்பங்களுக்கு காரணமாக இருப்பவர்களென்று அனுபவப்பட்டவர்கள் கூறியிருக்கிறார்கள்.

முன்பொரு தடவை பிரேமதாசா ஆளுங்கட்சியிலிருந்த போது அதாவது 1977ஆம் ஆண்டு கலகத்தின் பின் பேசுகையில் தோல்வியடைந்த அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தான் கலகத்துக்குக் காரணமென்று சொன்னார்.

இச்சமயத்தில் குறுக்கிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் மானிப்பாய் பிரதிநிதி வி.தர்மலிங்கம் அப்படியானால் 1958ஆம் ஆண்டுக் கலவரத்துக்கு யு.என்.பி.தான் காரணமா? என்று கேட்டார். இதன் பின் நடந்த விவாதம் நமக்குத் தேவையில்லை. ஆனால் அரசியல்வாதிகள் கலகங்களுக்குக் காரணம் என்றது மட்டும் உண்மை.

இன்று மட்டுமல்ல இதற்கு முன்னரும் அதாவது இலங்கையில் இனக்கலகங்கள் தோன்றிய பின்னர் இவற்றில் பத்திரிகையாளர்களுக்கும் பெரும் பங்கு உண்டு.

இன்று சில ஆங்கில சிங்களப் பத்திரிகைகள் இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டு. அமைச்சர் அதாவுட செனிவிரத்தின அமைக்க உத்தேசித்துள்ள குழுவை விரிவுபடுத்தி தேர்தலில் போட்டியிடும் போட்டியிட்ட அரசியல் கட்சிகளையும் பத்திரிகையாளர்கள் சிலரையும் சேர்த்து அமைப்பது பயனுள்ளதாக அமையலாம்.

எப்படியும் நாட்டில் இன வன்முறைகள் இனியும் தலையெடுக்காமல் இருக்க வழிகாண வேண்டியது நாட்டின் ஒற்றுமைக்கு மட்டுமல்ல முன்னேற்றத்துக்கும் அவசியமாகும்.

13-05-.2001



படிப்பகம்

www.padippakam.com



## தென்னைகள் மட்டுமா?

இலங்கையில் சமாதானத்தை தோற்றுவிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுவரும் நோர்வே தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் மீண்டும் நேற்று இலங்கை வந்து ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துள்ளார். மீண்டும் அவர் வன்னி சென்று தலைவர் பிரபாகரனையும் சந்தித்து உரையாற்றவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நோர்வேயின் சமாதான முயற்சிக்கு அனுசரணையாக அரசு மூன்று மாதம் போர் நிறுத்தத்தை அறிவிக்கும் என்ற ஒரு செய்தியும் வெளிவந்துள்ளது. இச்செய்தி உண்மையில் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான விடுதலைப் புலிகளின் ஒரு கோரிக்கை நிறைவெய்தும். அவ்வாறே பொருளாதாரத்தடை நீக்கம், புலிகள் மீது இலங்கையில் விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கம்



படிப்பகம்

www.padippakam.com



என்பனவற்றையும் அரசு நிறைவேற்றி சமாதான முயற்சிகள் வெற்றியளிக்க உதவுமா? என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

நோர்வேயின் சமாதான முயற்சிகளின் நோக்கம் பின்னணி என்பன தொடர்பாக பல சந்தேகங்கள் கிளப்பப்பட்டுள்ள போதும் எப்படியோ கிடைத்த இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நீடிக்கும் இந்தப் போரின் அனர்த்தங்கள் இழப்புக்களிலிருந்து மீள வேண்டும் என்ற எதிர்பார்ப்பே தமிழர்களிடம் இருக்கும். அந்த அளவிற்கு போர் இந்த நாட்டில் அழிவுகளையும் இழப்புக்களையும் தோற்றுவித்துள்ளது.

வகைதொகையற்ற மரணங்கள், காயங்கள், அங்க இழப்புக்கள் என்பனவற்றுடன் சொத்தழிவு இடப்பெயர்வு இன்னும் இவ்வழிவுகள் எல்லாவற்றிலும் ஏற்படும். உளவியல் பாதிப்புகள் என போர் ஏற்படுத்தியுள்ள வடுக்கள் ஓரிரண்டல்ல. உடனடி அல்லது நேரடி விளைவான இவை தவிர வளம் கொழிக்கும் இத்தீவின் இயற்கை வளங்களையும் போர் அள்ளிச் சென்றுள்ளது.

யாழ்குடாநாட்டில் அரச படைகளின் போர் அனர்த்தங்களால் ஒரு லட்சம் தென்னைகள் அழிக்கப்பட்டுள்ளதாக தென்னைவள அபிவிருத்தி நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த விடயத்தை பாராளுமன்றம் வரை எடுத்துச் சென்றுள்ளதாகவும் அது அறிவித்துள்ளது. இது அறியக் கிடைத்துள்ள ஒருபகுதித் தகவல்கள் மட்டுமே. இது தவிரவும் பனைமரங்கள், பயன்தரும் மரங்கள் பல போர் நடவடிக்கைகளால் அழிக்கப்பட்டுள்ளன.

வன்னிப்பகுதியில் நடைபெற்ற 18 மாத ஜயசிக்குறு சமரின் போது ஏ-9 பாதையின் இருமருங்கிலுமுள்ள காட்டுமரங்கள் பல கிலோமீற்றர் நீளத்துக்கு அழித்தொழிக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தின் பிரதான வீதியான திருமலை வீதியின் இருமருங்குமுள்ள பயன்தரு மரங்கள் பல இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டுள்ளன. மண்ணரிப்பைக் கட்டுப்படுத்தும் பிரதான தாவரமான கன்னாப் பற்றைகள் புல்டோசர் கொண்டு வேருடன் அழிக்கப்பட்டுள்ளன.

இப்படியே தமிழ் நிலமெங்கும் செய்யப்பட்டுள்ள 'சூழல் அழிப்பு யுத்தம்' மிகப் பயங்கரமான ஒன்று.



படிப்பகம்

www.padippakam.com



உடனடியாக எந்தப் பாதிப்பும் கண்களுக்குத் தெரியாவிட்டாலும் நீண்ட கால நோக்கில் தமிழ் நிலங்களைப் பாலைவனமாக்கக் கூடிய மோசமான அழிவு இது.

ஒரு காலத்தில் போர் ஏற்படுத்திய பாதிப்புக்களில் மிக முக்கியமான ஒன்றாக இச் சூழல் சங்காரமே கருதப்படும் என்பது உண்மை.

போர் தமிழர் நிலத்தில் ஏற்படுத்திய அழிவுகள் இவ்விதமாயிருக்க மறுபுறத்தே பெரும்பான்மையினத்தின் மீது அது பல விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

அன்னையர் தினத்தன்று வவுனியாவில் காணாமல் போன படைவீரரான தனது மகனின் புகைப்படத்துடன் அழுதபடி அமர்ந்திருக்கும் ஒரு தாயின் படத்தை கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்று வெளியிட்டிருந்தது.

புறக்கோட்டை இரயில் நிலையத்திற்கருகே நடைபெற்ற காணாமல் போன படையினரின் உறவினர் சங்கம் நடத்திய நிகழ்வொன்றில் இப்படம் பிடிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பேசிய காணாமல் போன படையினரின் உறவினர் சங்கத் தலைவி திருமதி நாணயக்கார தாய்மாரிடமிருந்து பிள்ளைகளைப் பறிக்கும் இந்தப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்று உருக்கமாக வேண்டியுள்ளார்.

பெற்றோராகிய உங்களிடமிருந்து இப்போர் உங்கள் பிள்ளைகளை பிரிப்பது மட்டுமல்ல இங்கே தமிழர் நிலத்தில் பிள்ளைகளிடமிருந்து பெற்றோரையும் மக்களிடம் இருந்து அவர்கள் நிலம் மற்றும் சொத்துக்களையும் அவர்களது சூழல் வளத்தையும் மாணவர்களிடமிருந்து கல்வியையும், மனிதர்களிடமிருந்து அவர்களின் அவயங்களையும் மொத்தத்தில் இழப்பதற்கு எதுவுமில்லாத தமிழர்களிடமுள்ள இந்தப் போர் பறிப்பதை நீங்கள் உணர வேண்டும். இவற்றையும் உணர்ந்து உங்கள் கோரிக்கையை முன் வைப்பீர்களானால் அது இதய சுத்தியானதாகயிருக்கும்.

இதய சுத்தியுடனான அனைவரினதும் கூட்டுப் பிரார்த்தனை வீண்போகாது.

16.05.2001



படிப்பகம்

www.padippakam.com



# இனியும் வரட்டு கௌரவம் வேண்டாம்!

போரினால் இலங்கையர்கள் மிகவும் களைப்படைந்து விட்டதாகவும், சமாதானப் பேச்சுவார்த்தையில் அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் ஈடுபடுவதற்கு இது மிகவும் உகந்த தருணம் என்றும் பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் மங்கள முனசிங்க பொஸ்ரனில் இலங்கை மாணவர்கள் சங்கங்களின் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போரினால் மக்கள் களைப்படைந்திருப்பது மட்டுமல்ல, போரினால் ஏற்பட்டுள்ள வாழ்க்கைச் செலவுப் பழுவைத் தாங்க முடியாமல் மக்கள் போரில் வெறுப்படைந்திருக்கிறார்கள். பயங்கரவாதிகள் என்று அரசியல்வாதிகளும், பேரினவாதிகளும் திரும்பத் திரும்ப ஒரே பல்லவியைப் பாடிக் கொண்டிருப்பதிலும், வெறுப்பும் களைப்பும் ஏற்பட்டிருக்கிறது.

நவீன ஆயுதங்களையும், நவீன போர் விமானங்களையும், நவீன போர்க் கப்பல்களையும் இறக்குமதி செய்தும் பயனில்லை. போர் மூலம் போருக்கு மூன்று வருடங்களில் முடிவு கட்டி விடலாம் என்று பிரதமர் சொல்லி வந்தார். மேலும் பத்தாயிரம் பேரைப் படைக்குத் திரட்டினால் போருக்கு முடிவு கட்டிவிடலாம் என்று அவர் பிரசாரம் செய்து படைகளுக்கு ஆட்திரட்ட எடுத்த முயற்சிகளும் வெற்றியளிக்கவில்லை.

படைத் தளபதிகள் சிலர் கூட மூன்று ஆண்டுகளில் போர் மூலம் போருக்கு முடிவுகட்டி விடலாமென்ற பிரதமரின் பாட்டுக்கு ஒத்தூதினர். நவீன ஆயுதங்களினாலும், நவீன படைச்சாதனங்களினாலும் போரில் சுலபமாக வெற்றியீட்டி விடலாமென்ற நம்பிக்கை ஜனாதிபதிக்குமிருந்தது.

இந்த நம்பிக்கையினால் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியில் ஆட்சியாளர்கள் இதயசுத்தியுடன் ஈடுபடாமல் போக்குக் காட்டிக் கொண்டிருந்தனர்.

இதனால் விடுதலைப் புலிகள் தன்னிச்சையாக தொடந்து நான்கு மாதம் போர் நிறுத்தம் செய்த போதிலும் பேச்சுவார்த்தைக்கான நல்ல சூழலை ஏற்படுத்துவதற்காக படைகளும் போர் நிறுத்தம் செய்ய வேண்டுமென்று



படிப்பகம்

www.padippakam.com



விடுதலைப் புலிகளும் மற்றும் அமைதியை விரும்புவர்களும் கோரிக்கை விடுத்த போதும் அரசு மறுத்து விட்டது.

விடுதலைப் புலிகளின் போர் நிறுத்தம் முடிந்ததும், தீச்சுவாலை ஒன்று என்ற பெயரில் போரை முன்னெடுத்துச் செல்ல படைகள் முனைந்த போது விடுதலைப் புலிகள் அதை எதிர்த்துத் தாக்கியதில் தீச்சுவாலை அணைந்தது.

இந்த நிலையில் போரைத் தொடர முடியாமலும், போரை நிறுத்த முடியாமலும் இரண்டும் கெட்ட நிலையில் நிற்கும் அரசு பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கு விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டுமென்ற நிபந்தனையையும் ஏற்க முடியாத நிலையில் செய்வதறியாது திசை தெரியாமலிருக்கிறது.

போர் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாதென்பது முடிந்தமுடிபாகி விட்டது. பேச்சுவார்த்தையைத் தொடங்கிய பின் விடுதலைப் புலிகள் மீதான தடையை தற்காலிகமாக நிறுத்துவதாக அறிவிக்கலாமென்றும் யோசனை தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் சில தெரிவிக்கின்றன.

விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை என்பது போல ஒரு இடைக்கால ஏற்பாடு செய்து பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண வேண்டுமென்பதிலும் வெளிநாடுகள் அழுத்தம் கொடுத்து வருவதாகவே தகவல்கள் கூறுகின்றன.

பிரிட்டனிலுள்ள இலங்கைத் தூதுவர் மங்கள முனசிங்காவும் முன்னர் எடுத்த சமாதான முயற்சியின் போது இலங்கையின் இரு பெரும் அரசியல் கட்சிகளும், சமஷ்டி ஆட்சியமைப்பைக் கொண்டு வருவதற்கு ஒப்புக் கொண்டிருந்ததாகக் கூறியிருக்கிறார்.

ஐம்பது வருடங்களுக்கு முன் அமைதியாகத் தீர்த்திருக்க வேண்டிய பிரச்சினையை இப்பொழுதும் தீர்ப்பதற்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை நழுவவிட்டால் இன்னும் பல அழிவுகளைச் சந்தித்த பின்பு தான் முடிவைத் தேட வேண்டுமா?

இனியும் வரட்டுக் கௌரவம் வேண்டாம். உண்மை நிலையைப் புரிந்து அதற்கேற்ப துரித நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

21-05-2001



படிப்பகம்

www.padippakam.com



## சனத்தொகைக் கணிப்பும் இலங்கைத் தமிழரும்

சனத்தொகைக் கணக்கெடுப்பு என்றும், குடிசனக் கணக்கெடுப்பு என்றும் உலகம் முழுவதிலும், நாடுகளில் குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் கணக்கெடுக்கப்படுவது நடைமுறை.

மக்கள் தொகைப் பெருக்கத்தை அறிந்து கொள்வதும், அதற்கேற்ப பொருளாதாரத்தை விருத்தி செய்ய வேண்டிய அவசியம் பற்றி ஆராய்வதும் இதன் நோக்கமாக இருக்க வேண்டும்.

இலங்கையில் இப்பொழுது குடிசனக் கணக்கெடுப்பு நடைபெற இருக்கிறது. இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலுமிருந்து பெருந்தொகையான மக்கள் பாதுகாப்புத் தேடி வெளியேறிச் சென்று விட்டார்கள்.

சிலர் அயல்நாடான இந்தியாவிலும் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர். மற்றும் சிலர் வெளிநாடுகளில் அகதிகளாக உள்ளனர்.

புலம் பெயர்ந்த தமிழர்களின் தொகையைத்தான் இப்பொழுது கணக்கெடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இதைக் கூடச் சரியாக கணக்கெடுக்க முடியாமல் வெளிநாடுகளுக்குப் போய்ச் சேருவதற்கு மாறாக வழியிலுள்ள நாடுகளில் சிறைகளில் இருப்பவர்கள் பற்றிய தொகையை அறிய முடியாது.

இங்கு அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டுக் காவலில் எங்கெங்கு சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது பற்றிய விபரமும் கணக்கெடுக்கப்பட வேண்டும்.

வடக்கிலும் கிழக்கிலும் மட்டுமல்ல கொழும்பிலும், கண்டியிலும் மற்றும் நாட்டின் பல பகுதிகளிலும் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டவர்களும் பின்னர் அவர்கள் பற்றிய தகவல்கள் கிடைக்காமல்,



படிப்பகம்

www.padippakam.com



காணாமல் போனதாகக் கருதப்படுபவர்கள் பற்றிய விபரங்களை எப்படித் திரட்டுவது. இவர்களைப் பற்றி எப்படிக் கணக்கெடுப்பது?

சத்துருக்கொண்டானிலும் வந்தாறுமூலையிலும் மற்றும் இது போன்று வடக்கிலும் கிழக்கில் இதரபகுதிகளிலும் காணாமல் போனதாகச் சொல்லப்படுபவர்களை எவ்வாறு கணக்கெடுப்பது. எந்தக் கணக்கில் சேர்ப்பது?

செம்மணியிலும் மிருசுவிலிலும் மற்றும் சில இடங்களிலும் புதைக்கப்பட்டதாக நம்பப்படுபவர்களைப் பற்றி எப்படிக் கணக்கெடுப்பது. எந்தக் கணக்கில் சேர்ப்பது?

பதின்மூன்று லட்சம் மக்கள் வாழ்ந்த யாழ்பாணத்தில் இபோது ஐந்து லட்சம் மக்கள் தான் வாழ்கின்றார்களாம். வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் தொகை இப்போது கணக்கெடுப்பு நடத்தப்பட்டால் மிகக் குறைவாகவே இருக்கும்.

மக்கள் தொகையின் அடிப்படையில் தேர்தல் தொகுதிகளின் அளவும் அதன் உறுப்பினரின் எண்ணிக்கையும் குறையும்.

இது மட்டுமல்ல, இப்போது எடுக்கப்படும் கணிப்பின் அடிப்படையிலேயே உணவுப் பொருட்கள் பங்கிடப்படும். இந்த அளவுக்கேற்பவே உணவுப் பொருட்கள் இப்பகுதிகளுக்கு அனுப்புவதற்கு அனுமதி வழங்கப்படும்.

மக்கள் தொகைக் கணிப்பீட்டின்படி பாராளுமன்றத் தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை கணிக்கப்படும். குடிசன மதிப்பீட்டின்படி தேர்தல் தொகுதி நிச்சயிக்கப்பட்டால் வடக்கிலும், கிழக்கிலும் தேர்தலில் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுவோரின் எண்ணிக்கை குறைந்துவிடு மென்று தமிழ்க் கட்சிகள் குரல் கொடுப்பதில் நியாயமிருக்கிறது.

எனவேதான் இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண எடுக்கப்படும் முயற்சி வெற்றியளித்த பின் அல்லது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்ட பின் குடிசன மதிப்பீடு எடுக்கப்பட வேண்டும் எனறு நாமும் கூறுகின்றோம்.

23-05-2001



படிப்பகம்

www.padippakam.com



## ஆட்டைக்கடித்து மாட்டைக்கடித்து.....

"ஆட்டைக்கடித்து மாட்டைக்கடித்து மனிதனைக் கடித்த மாதிரி" என்ற பழமொழி கூறுவதைப் போல இலங்கையில் பத்திரிகையாளர்கள் மீது கைவைத்துப் பழகிப் போனவர்கள் இப்பொழுது பத்திரிகைப் பணிமனை மீதும் கை வைக்கத் தொடங்குவதாகத் தெரிகிறது.

கொழும்பிலிருந்து சிறிது தூரத்தில் அதாவது கொழும்புக்குப் புறநகராக உள்ள மகரகமவுக்கு அருகிலிருந்து வெளிவரும் வாரப்பத்திரிகைப் பணிமனை மீது குண்டு வீசப்பட்டிருக்கிறது.

எவருக்கும் உயிர்ச்சேதமோ காயமோ ஏற்படவில்லையென்பதும் பணிமனைக்கும் பெரிய பாதிப்பு ஏற்படாததும் பெரும் ஆறுதல். இது ஒரு பரீட்சார்த்த நடவடிக்கையாகவே தோன்றுகிறது. "ராவய" என்ற சிங்கள வார இதழும் இதன் சகோதரப் பத்திரிகையாக தமிழில் ஆதவனும் இங்கிருந்து வெளிவருகின்றன.

கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் குறிப்பாக ஆங்கில, சிங்களப் பத்திரிகைகள் தினசரிப் பத்திரிகைகளாக இருந்தாலும் வாரப்பத்திரிகைகளாக இருந்தாலும் அவை அரசாங்கத்துக்கு சாமரம் வீசுபவையாகவும் இனத்துவேஷத்துக்கு நெய்யூற்றுபவையாகவுமே இருப்பது இலங்கையின் நடைமுறை.

அரசின் கட்டுப்பாட்டிலுள்ள ஏரிக்கரைப் பத்திரிகைகள் ஆட்சியில உள்ளவர்களுக்குத் துதிபாடுவதும், மற்றெவரையும் விட அரசுக்கு விசுவாசமாக நடப்பதாகக் காட்டிக் கொள்வதற்கு இனத்துவேஷத்தைக் கக்குவதும், விடுதலைப் புலிகளுக்கெதிராகத் தூற்றுவதும் சாதாரண நடைமுறை. இன்னும் ஒரு பத்திரிகை நிறுவனம் இனத்துவேஷத்தையும் அதனுடன் மதத்துவேஷத்தையும் கொள்கையாகக் கொண்டிருக்கிறது. இலங்கையில் சிங்கள பௌத்தர்கள் தான் வாழ்வதற்குரியவர்கள் என்பதைச் சொல்லாமல் சொல்லி இன வெறிக்கு தூபமிடுவதில் இப்பத்திரிகைகளுக்கு நிகராக வேறெந்தப் பத்திரிகையும் இன்று இலங்கையில் இல்லை.

சில வாரப்பத்திரிகைகள் இனத்துவேஷத்தை வளர்ப்பதற்கு ஆதாரங்களை உருவாக்கி வெளியிட்டும் எழுதியும் வரும் இலங்கையில்



படிப்பகம்

www.padippakam.com



கொழும்பு நகருக்கு சற்றே வெளியிலிருந்து நீதிக்காகவும், நேர்மைக்காகவும் துணிச்சலுடன் எழுதி வெளிவரும் ஒரு பத்திரிகை நிறுவனமாக இயங்கி வருவது ராவய பத்திரிகை வெளிவரும் நிறுவனமாகும்.

இதன் ஆசிரியர் விக்டர் ஐவன் ஆட்சிபீடத்திலுள்ளவர்கள் எவரென்றாலும் தவறு செய்தால் அஞ்சாமல் தட்டிக் கேட்கத் தயங்காதவர். இவருக்கெதிராக ஆட்சிபீடத்திலுள்ளவர்கள் சிலர் நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்ததுண்டு.

ஆட்சியாளர்களின் தவறுகளை மக்கள் முன் வைப்பதில் இந்தப்பத்திரிகை பின்னிற்பதில்லை. நீதிமன்றத்துக்குப் போனாலும், மேடைகளில் அரசியல்வாதிகள் மிரட்டினாலும் உண்மையைத் துணிச்சலுடன் வெளிக்கொணர்ந்து மக்களுக்குத் தெரிவிப்பதில் தவறுவதில்லை.

இலங்கையில் பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். மற்றும் சில பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டுக் காவலில் வைத்து விசாரணை என்ற பெயரில் சித்திரவதை செய்யப்பட்டிருக்கின்றனர். இவர்கள் அனைவரும் தமிழ் பத்திரிகையாளர்கள். புலி என்ற கிலியினால் இவர்கள் இந்தச் சித்திரவதைகளை அனுபவித்தனர்.

நிமலராஜன் இதனாலேயே கொல்லப்பட்டான். இதற்கு முன் கொழும்பில் றிச்சார்ட்டி சொய்சா உண்மையை எழுதி வெளிக்கொணர்ந்ததிற்காக அன்று ஆட்சியிலிருந்தவர்களால் அடையாளம் தெரியாதவர்களால் கொல்லப்பட்டார்.

பத்திரிகையாளர்களைக் கைது செய்வதும் பத்திரிகைப் பணிமனை மீது குண்டு வைப்பதுமான நடவடிக்கைகளை இலங்கைக்கு வந்த இந்திய ஜனநாயக நாட்டின் இராணுவம் காட்டிக் கொடுத்தது. இனியும் இலங்கையில் பத்திரிகையாளர்களைக் கைது செய்வதோ, பத்திரிகைப் பணிமனைகள் மீது குண்டு வீசுவதோ தொடரக் கூடாது; நினைத்துப் பார்க்கவும் கூடாது.

பத்திரிகையாளர்கள் அனைவரும் எந்த வேறுபாடுமில்லாமல் உரத்துக் குரல் கொடுத்து ஜனநாயகத்தைப் பாதுகாக்க முன்வருவது அவசியம். கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம் தனது செய்தியில் குறிப்பிட்டிருப்பது போல் இந்தக் குண்டுவீச்சுச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் இனங்காணப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டியது அவசியம்.

25-05-2001



படிப்பகம்

www.padippakam.com



## இடித்துரைக்க வேண்டியது கடமை

"இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன் கெடுப்பாரிலானும் கெடும்" என்பது திருக்குறள்.

இடித்துரைக்கின்ற அமைச்சர்கள் இல்லாத அரசன் கெடுப்பவர்களில்லாமலே கெட்டுப் போவான் என்பது இதன் பொருள். இப்பொழுது இலங்கையில் மன்னர் இல்லை. ஆனால் ஆட்சி பீடத்திலுள்ளவர்களுக்கு இடித்துரைக்க வேண்டிய பொறுப்பு ஜனநாயக நாடுகளில் பத்திரிகையாளரிடம் தான் இருக்கிறது. சில நாடுகளில் இப்பொறுப்பை பத்திரிகைகள் சிறப்பாகவே செய்து வருகின்றன. அந்த நாடுகளில் அமைதி



படிப்பகம்

www.padippakam.com



நிலவுகிறது. மக்களிடையில் இன, மத வேறுபாடின்றி ஐக்கியம் நிலவுகின்றது. நாடு முன்னேறுகின்றது.

ஆனால் இலங்கை நாட்டில் இனங்களுக்கிடையில் வேற்றுமையையும் குரோதத்தையும் வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிப்பது பத்திரிகைகள் தான். மனிதாபிமானப் பிரச்சினைகளில் கூட இலங்கை அரசைத் திசை திருப்பிக் கெட்ட பெயர் வாங்குவதற்கு கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் காரணமாக இருந்து வருகின்றன.

பிந்துனுவெவவில் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் கோரமாகப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம், மிருசுவில் படுகொலைகள் போன்ற சமீபகால சம்பவங்களைக் கூட மூடி மறைப்பதில் பத்திரிகைகள் பெரும் பங்காற்ற முற்பட்டன. படையினரின் பாலியல் வன்முறைகள், திருகோணமலையில் மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது போன்ற சமீப கால சம்பவங்கள் பத்திரிகைகளால் திசை திருப்பவும், மூடி மறைக்கவும் முயற்சி செய்யப்பட்டன

தமிழ் பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட சம்பவங்கள் கூட கொழும்பு பத்திரிகைகளால் மூடி மறைக்கப்பட்டுள்ளன. நாட்டில் இடம்பெற்ற பலகொலை, கொள்ளைச் சம்பவங்களை சில பத்திரிகைகள் விடுதலைப் புலிகள் மீதே பழியைப் போட்டுத் திசை திருப்பிய சம்பவங்களும் நிறையவே இருக்கின்றன.

மனித உரிமைகள் பாதுகாப்புக் கழகங்களும், செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புகளும் இந்நாட்டில் இல்லையெனில் நாடே சுடுகாடாக மாறியிருக்கும். இந்த அமைப்புகளின் விழிப்புணர்வில் தான் அரசாங்கத்தின் பெயர் கொஞ்சமாவது பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

இங்கு பத்திரிகைச் சுதந்திரம் தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பவர்களுக்கெதிராக பழி சுமத்துவதற்கே பயன்படுகிறது. பத்திரிகைகள் தங்கள் பணியைச் சரியாகச் செய்யாவிடில் அரசுக்கும் நாட்டிற்குமே கெட்ட பெயரும் அழிவுமேற்படும். நாட்டின் நல்லாட்சி நிலவுவதற்கு ஆட்சியாளர்களுக்கு நல்லதை இடித்துரைக்க வேண்டிய கடமை இன்று பத்திரிகைகளுக்கு இருக்கிறது. இதில் தவறினால் நாடு முன்னேற முடியாது.

27-05-2001



படிப்பகம்

www.padippakam.com



## "இருட்டறையில் கறுப்புப் பூனை"

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சுமுகமான நிரந்தரமான தீர்வு காணவேண்டுமென்பதும் இதற்குப் பேச்சுவார்த்தை தான் ஒரே வழியும் அமைதியான வழியும் என்பதை அமைதியை விரும்பும் அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சம்மதித்துள்ளனர்.

நேரடியாக இருதரப்பும் பேச வேண்டுமென்று முதலில் யோசனை தெரிவிக்கப்பட்டது. விடுதலைப் புலிகளை நம்ப முடியாது. முன்னரும் இரண்டு தடவைகள் பேச்சுவார்த்தை நடத்திய போது புலிகள் ஏமாற்றி விட்டார்கள் என்று அரசாங்கமும் அதன் தலைவியும் கூறினர்.

பேச்சுவார்த்தைக்கு நாங்கள் தயார். ஆனால் இதன் முடிவுகள் செயல்படுத்தப்படுமா என்பது சந்தேகமே என்று கூறிய விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு மூன்றாவது நாடு ஒன்று மத்தியஸ்தம் வகிக்க வேண்டுமென்று கூறினர். இதற்கு ஒப்புக் கொண்ட அரசு முதலில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவரின் பெயரைக் கூறியது. இதைப் புலிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதன் பின்னர் தான் நோர்வே நாட்டை அனுசரணையாளர் என்று சொல்லி இருதரப்பும் ஏற்றுக் கொண்டன.

இதன் பின்னர் புலிகளை நம்ப முடியாது என்று அரசு கூறி வந்தது. நோர்வேயை நம்ப முடியாது என்று பேரினவாதிகள் கூறினர். பேச்சுவார்த்தையைக் காலங்கடத்தி பிரித்தானியா புலிகளைத் தடைசெய்ய வேண்டுமென்று வற்புறுத்தி உலக நாடுகளில் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று பிரச்சாரம் செய்து போரை முன்னெடுக்கவும் இன ஒழிப்பை தொடர்வதுமே நோக்காக இருந்தது. உலக நாடுகளின் அழுத்தத்தினால் பேச்சுவார்த்தைக்கு அரசு சம்மதித்தது.

பேச்சுவார்த்தைக்குச் சம்மதித்ததும், அதற்கான சூழ்நிலையை எற்படுத்த வேண்டியதும் இருதரப்பினரதும் கடமையும் பொறுப்புமாகும். சமாதான முயற்சியாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வருபவர்கள் அனுசரணையாளராகவோ, உதவியாளராகவோ, நடுவராகவோ பணியாற்ற



படிப்பகம்

www.padippakam.com



முன்வருபவரைப் பயன்படுத்தி ஒருவரையொருவர் திட்டாமலும், குறை கூறாமலும் நாவடக்கம் காத்து செயல்பட வேண்டியது தான் முறை.

ஆனால் பேச்சுவார்த்தை நடத்தப் போகிறவர்களை உலகம் முழுவதும் பயங்கரவாதிகள் எனப் பிரகடனம் செய்ய வேண்டுமென்று பிரசாரம் செய்து கொண்டு பேச்சுவார்த்தை என்றால் அதன் அர்த்தம் என்ன? ஆட்சியிலுள்ள சிலர் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு என்று பேசும் போது போர் மூலமே தீர்வு என்று பிரதமர் வேறுதிசையில் பிரசாரம் செய்யும் போது எப்படிப் பேச்சு வெற்றிகரமாக நிறைவேறும்.

பிரதமரின் பின்னால் பேரினவாதிகள் நிற்கிறார்களா? பேரினவாதிகளின் பின்னால் பிரதமர் நிற்கின்றாரா? என்று தெரியாத நிலையில் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்பதில் ஆட்சியிலுள்ளவர்களும் பேரினவாதிகளாக அல்லது பேரினவாதிகளுக்குப் பின்னால் நிற்பதாகவே தோன்றுகிறது.

விடுதலைப் புலிகள் செய்த கொலைகள் என்று பட்டியல் வெளியிட்டு அவர்களைப் பயங்கரவாதிகள் என்று அடித்துச் சொல்லி பேச்சுவார்த்தைக்கு அரசு தயார் செய்வது வேடிக்கை. ஆட்சியிலிருந்த அரசாங்கங்களின் படைகள் செய்த கொலைகளையும் இன்று ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ளவர்கள் செய்த கொலைகளையும் பட்டியலிட்டுக் கொண்டிருந்தால் எப்படிச் சமாதான வழியில் போய்ச் சேரமுடியும்.

விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கி பேச்சுவார்த்தையில் சமமாகக் கலந்து கொள்ள வேண்டும். பேச்சுக்கேற்ற சூழலுக்கு போரை நிறுத்த வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கேட்கின்றனர். இதற்கு ஒப்புக் கொள்ள முடியாது என்று நீண்ட ஆலோசனையின் பின் அரச தரப்பில் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடன் தான் பேச்சு நடத்தப் போகிறார்கள். தடையிருப்பதால் வேறு யாருடனும் பேசப்போவதில்லை. தடையை நீக்கினாலும், பேசுவதற்கு வருபவர்கள் வேறுயாருமல்லர். இந்த நிலையில் தடையை நீக்கிவிட்டு சமாதானத்துக்கு வழி என்ன என்பதைப் பற்றி பேசவேண்டியது தானே நியாயமும் அவசியமும். இருட்டறையில் கறுப்புப் பூனையை அரசு தேடிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை!

28-05-2001



படிப்பகம்

www.padippakam.com



# இனவாதப் பூதம்

இலங்கையில் இன்றுவரும் நாளை வரும் என்று எதிர்பார்க்கப்பட்ட சமாதானம் இனி என்றாவது வருமா என்ற கேள்வியை அடைந்து நின்றுவிடும் போல் தெரிகிறது. இலங்கை இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகளைச் சம்மதிக்க வைப்பதற்காகவே போர் புரிவதாக அரசு முதலில் கூறி வந்தது.

பேச்சுவார்த்தை மேசைக்கு புலிகளைக் கொண்டுவர வேண்டுமானால் முதலில் அவர்களைப் பலவீனப்படுத்த வேண்டும் அதற்காகவே போர் புரிகிறோம் என்று அரச தலைவர்கள் கூறினார்கள். புலிகளைப் பலவீனப்படுத்தவே போர் புரிகிறோம் என்று படைத்தளபதிகளும் கூறுகிறார்கள். சில அமைச்சர்களும் சொன்னார்கள்.

புலிகள் ஆயுதங்களைக் களைந்த பின்பே பேச்சுவார்த்தை என்றும் சொன்னார்கள். சமாதானத்துக்கான போர் இது என்று இலங்கை ஜனாதிபதி சொன்னார். போர் மூலமே போருக்கு முடிவு காணப்படும் என்று பிரதமர் இரத்தினசிறி விக்கிரமநாயக்க கூறினார். படைக்குப் பத்தாயிரம் மேலும் சேர்த்தால் போருக்கு மூன்று வருடங்களில் முடிவு கட்டப்படும் என்றும் அவர் சொன்னார்.

சமாதானப் பேச்சுக்கு அனுசரணையாளராக இருதரப்பும் ஏற்றுக்கொண்ட நோர்வேயின் எரிக் சொல்ஹெய்ம் இலங்கை இந்தியா அமெரிக்கா என்று பறந்து திரிந்து முயற்சி செய்த போதும் இப்போது விடுதலைப் புலிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க முடியாது என்று அரசு திட்டவட்டமாக அறிவித்து விட்டது.

இதனால் பேச்சுவார்த்தை முட்டுக் கட்டை நிலையில் நிற்கிறது. பேச்சுவார்த்தைக்கு புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை தான் காரணம் என்று வெளிப்படையாகக் கூறப்படலாம். ஆனால் கொழும்பில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் பல்வேறு சிங்கள அமைப்புகளும் புத்திஜீவிகளும் புத்த பிக்குகளும் கலந்து கொண்ட கூட்டத்தில் பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்கே இடமிருக்கக் கூடாதென்றும் போரை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும் வேறுபல தீர்மானங்களையும் நிறைவேற்றியிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



இலங்கை சிங்களவர்களுக்கே சொந்தம் என்றும் வேறு எந்த இனத்தவருக்கும் இடமில்லை என்றும் இந்த மாநாடு கூறியிருக்கிறது. இந்தப் பேரினவாதிகளின் பின்னணியில் தான் அரசும் செயல்படுகிறது அல்லது அரசும் செயற்பட வேண்டியிருக்கிறது என்றே கருத வேண்டியிருக்கிறது.

1958ம் ஆண்டு முதல் 1983ம் ஆண்டு வரை நாடு முழுவதும் தமிழ் மக்களுக்கு எதிராக தூண்டிவிடப்பட்ட இனக்கலகம் இன அழிப்பை அடிப்படையாகக் கொண்டு திட்டமிட்டே நடத்தப்பட்டவையாகும்.

இந்த இன ஒழிப்பை எதிர்த்து இளைஞர்கள் ஆயுதம் ஏந்திய காரணத்தால் தான் தமிழ் இனம் இலங்கையில் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

1983ம் ஆண்டிலும் அதன் பின்னரும் இன அழிப்புத் திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்தி நிற்பதால் பயங்கரவாத முத்திரை குத்தி உலக நாடுகளின் உதவியுடனும் அங்கீகாரத்துடனும் இன ஒழிப்பை வெற்றிகரமாக பேரினவாதிகள் ஆட்சியிலுள்ளோரின் அனுசரணையுடன் நிறைவேற்றத் திட்மிட்டு செயல்பட்டு வருகின்றனர். இதனால் தான் விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைய வேண்டுமென்று கூச்சலிடுகின்றது. இப்பொழுது இந்தத் திட்டத்தை மறைக்க முடியாமல் பொதுக்கூட்டம் கூடித் தீர்மானமாக நிறைவேற்றியிருக்கின்றனர்.

புத்திஜீவிகள் சிலர் இந்தப் பேரினவாதக் கும்பலில் சேர்ந்திருப்பதால் சிங்களப் பொதுமக்கள் கடந்கால வரலாற்றைக் கருத்திற் கொண்டு விவேகத்துடன் நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கலாமா? பௌத்த சிங்களவர்களுக்குத் தான் இலங்கை சொந்தமென்று உரிமை கொண்டாட மாட்டார்களென்பது என்ன நிச்சயம். ஆப்கானிஸ்தானின் இஸ்லாமிய தலிபான் இயக்கம் போல இலங்கையிலும் பௌத்த பேரினவாதம் இங்குள்ள நிலைமைகளிலிருந்து தலையெடுக்குமென்றே தோன்றுகிறது.

சிங்களப் பொதுமக்கள் தமிழருக்கெதிரான இனக்கலவரத்தினால் பல துறைகளில் பாதிக்கப்பட்ட அனுபவம் பெற்றவர்கள் இனியும் இனவாதப்பூதத்திற்கு இடம் கொடுக்கமாட்டார்கள் என்று நம்புவோம்.

29.05-2001



படிப்பகம்

www.padippakam.com



# நாட்டின் தலைவிதி அரசின் கையில்

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு விதித்த தடையை நீக்க முடியாது என்று சந்திரிகா தலைமையிலான பொதுஜன முன்னணி அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ளது. விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையைத் தாங்கள் ஒரு போதும் நீக்கப் போவதில்லை என்று பிரதமர் வழமை போல கூறியிருக்கிறார்.

பௌத்த அமைப்புகள் பல சேர்ந்து கொழும்பில் பௌத்த காங்கிரஸ் மண்டபத்தில் கூடி நிறைவேற்றிய தீர்மானங்களில் ஒன்று புலிகள் மீதான தடையை கடைசி வரை நீக்கக் கூடாது என்பதாகும். பிரதமரும் அதைத்தான் கூறியிருக்கிறார். இதில் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படாமலே அவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டுமென்றும் தமிழ் மக்களின் நலனில் அவர்களுக்கு உண்மையான அக்கறை இருக்குமானால் அவர்கள் தடையை நீக்க வேண்டுமென்று காலத்தை கடத்த வேண்டியதில்லை என்றும் ஒரு தமிழ் அமைச்சரும் கூறியிருக்கிறார்.

இந்த அமைச்சரின் கூற்றை வைத்து அரசின் கட்டுப்பாட்டிலுள்ள ‘‘டெய்லி நியூஸ்’’ பத்திரிகை நேற்றுத் தலையங்கம் தீட்டியிருக்கிறது. இதுவும் ஆச்சரியப்படுவதற்கில்லை. டி.எஸ். சேனநாயக்க இலங்கை சுதந்திரம் பெற்றதும் அமைத்த முதல் மந்திரி சபையிலிருந்த தமிழர்களிலிருந்து சந்திரிகாவின் அம்மா சிறிமா அமைத்த மந்திரி சபையில் இழுத்து வைத்து நியமித்து மந்திரியாக்கிய செல்லையா குமாரசூரியர் வரையும் பின்னர் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் மந்திரி சபையில் அமைச்சரான செல்லையா இராஜதுரை வரை ஆட்சியிலிருந்தவர்களுக்காகவே ‘‘நியாயம் பேசியவர்கள்’’ தான்.

ஆனால் தமிழ் மக்கள் அன்றிலிருந்து இன்று வரை சகலவற்றையும் இழந்து இன்று இருப்பதற்கும் வீதிகளில் நிம்மதியாக நடமாடுவதற்கும் கூட வழியின்றித் தவித்துத் திரிவதைத் தவிர வேறு எதையும் கண்டதில்லை. டீ.எஸ். சேனநாயக்க ஆட்சியில் சில வருடங்கள் அமைச்சராக இருந்த பேராசிரியர் செ. சுந்தரலிங்கம் பதவியிழந்த பின் மாணிக்கவாசக சுவாமிகள் பதவியிழந்த



படிப்பகம்

www.padippakam.com



பின் ஞானம் பெற்றது போல, ஞானம் பெற்று தமிழ் மக்களின் உரிமைகள் பற்றியும் அவர்கள் உரிமையைப் பெறக்கூடிய வழிகள் பற்றியும் உபதேசம் செய்யத் தொடங்கினார். 1958ஆம் ஆண்டில் வவுனியா மீது தாக்குதல் நடாத்துவதற்கு பதவியாவிலிருந்து ஆயுதங்களுடன் வந்த காடையர்களை எதிர்த்து ஆயுதம் ஏந்தி வழியும் காட்டினார்.

இப்பொழுது விடுதலைப் புலிகள் தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அல்லவென்றும் அவர்களுடன் மட்டும் தான் பேச வேண்டுமென்பதில்லை என்றும் குரல் எழுப்பப்படுகிறது. பிரேமதாசாவுடனும் அதன் பின்னர் 1994ம் ஆண்டில் சந்திரிகா அரசுடனும் சரி பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அழைக்கப்பட்டவர்கள் விடுதலைப் புலிகளே.

இன்று மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களாகக் கருதப்படும் தமிழ்ப் பிரதிநிதிகள் அம்பாறை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட தமிழ் பிரதிநிதி உட்பட சகலரும் விருதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடத்த வேண்டுமென்றே கோருகின்றனர். விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைகளுக்கு அனுசரணையாளர்களாகத் தான் நோர்வே நாட்டை இருதரப்பும் ஏற்றுக் கொண்டன.

"மக்களால் தெரிவு செய்யப்பட்ட" பிரதிநிதிகளை அரசு பேச்சுக்கு அழைக்கவில்லை. அவர்களிடம் நோர்வே நாட்டின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்குச் சம்மதம் கேட்கப்படவுமில்லை. எனவே வெண்ணெய் திரண்டு வரும் சமயத்தில் தாழியை உடைக்காமலே வேறு வேறு இடையூறுகளைப் போடுவதை நிறுத்திவிட்டு நாட்டின் அமைதியையும் இன ஒற்றுமையையும் காண்பதற்கு உருப்படியான வழியைத் தேட வேண்டும்.

தடை நீக்கம் பற்றியும் போர் நிறுத்தம் பற்றியும் அரசாங்கம் எடுத்த முடிவை மறுபரீசிலனை செய்ய வேண்டும் இல்லையேல் இதன் விளைவுகளுக்கான பொறுப்பை அரசு தான் ஏற்க வேண்டும். என்றும் விடுதலைப் புலிகள் கோரியிருக்கின்றனர். நாட்டில் அமைதியும் ஒற்றுமையும் ஏற்படுவதற்கு விடுதலைப் புலிகள் தான் காரணமாக இருக்கின்றனர் என்பது நாடும் உலகமும் அறிந்ததே. இனி நாட்டின் தலைவிதி அரசின் கைகளில் தான் தங்கியுள்ளதென்பதை மறுக்க முடியாது.

30-05-2001



படிப்பகம்

www.padippakam.com



## திருக்கோவில் விவசாயிகள்

திருக்கோவில் பிரதேச விவசாயிகள் மீது காஞ்சிரங்குடா அதிரடிப்படையினர் மேற்கொண்டு வரும் கண்மூடித்தனமான தாக்குதல்களால் 2100 ஏக்கர் நிலத்தில் நெற்செய்கை பாதிக்கப்பட்டிருக்கிறது. கிழக்கு மாகாணம் இலங்கையின் நெற்களஞ்சியம் எனப் பெயர் பெற்றது. நாட்டின் அரிசித் தேவையில் பெரும் பகுதியை கிழக்கு மாகாணமே உற்பத்தி செய்கிறது.

கிழக்கில் திருக்கோவில் பகுதியில் தாமரைக்குளம் என்ற இடத்தில் கடந்த 4ம் திகதி விடுதலைப் புலிகளுக்கும் ஆயுதப் படையினருக்கும்



படிப்பகம்

www.padippakam.com



இடையில் மோதல் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து அப்பகுதி விவசாயிகளை வயலுக்குச் செல்ல விடாது தடுப்பதுடன் விவசாயிகள் மீது படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

காஞ்சிரங்குடா, சாவாறு, சேனைக்குடா, பாவட்டை, கஞ்சி குடிச்சாறு போன்ற பிரதேச வயல் நிலங்கள் இரு மாதப் பயிராக கவனிப்பாரற்று சேதமடைந்து வருகின்றன. இப்பயிர்களுக்கு நீர்பாய்ச்ச முடியவில்லை. மாடுகள், யானைகள் முதலிய மிருகங்களிடமிருந்து வயலைப் பாதுகாக்கவும் வழியில்லை. 1990ம் ஆண்டிலிருந்து வன்செயல்களில் பாதிக்கப்பட்ட இம்மக்கள் நாடோடிகளாக வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் கஷ்டப்பட்டு கடன்பட்டு விவசாயம் செய்தும் ஆயதப் படையினரின் அடாவடித்தனத்தினால் இன்று விதைத்த பயிரையும் கூட வளர்த்து அறுவடை செய்து பயன் அனுபவிக்க முடியாத நிலையுள்ளது.

இனியும் இவர்களால் இந்தப் பயிர்களைப் பாதுகாக்க முடியாது. இந்நிலையில் இவர்களுக்கு நஷ்டஈடு தான் கிடைக்க வேண்டும். விவசாயிகளின் இக்கஷ்டநிலையைப் பற்றி ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ள அம்பாறை மாவட்ட ஈ.பி.டீ.பி. எம்.பி. குணசேகரம் சங்கர் இந்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டுமெனக் கேட்டிருக்கிறார்.

ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சியைச் சேர்ந்த ஒரு எம்.பியின் கோரிக்கையாக இருப்பதால் விரைவில் நஷடஈடு கிடைக்குமென்று எதிர்பார்க்கலாம். ஆனால் இந்த நஷ்டஈடு அவர்கள் பாடுபட்டதற்குப் போதுமானதாக இருக்குமா? அவர்கள் விதைத்த நெல் கதிராகி அதை அறுவடை செய்து அனுபவிப்பதில் கிடைக்கும் பயனும் மகிழ்சியும் நஷ்ட ஈடு பெறுவதில் அடைய முடியுமா?

போராளிகள் தாக்கினால் அவர்களைத் திருப்பித் தாக்குவது தான் ஆயுதப்படைகளின் கடமை. போராளிகளுடன் படையினர் போர் புரியட்டும். ஆனால் அப்பாவி விவசாயிகளைத் தாக்குவதும் அவர்களைக் கைது செய்வதும் அவர்கள் வயலுக்குப் போவதைத் தடை செய்வதும் என்ன நியாயம்?

இந்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு தாராளமாக வழங்கப்பட வேண்டியது இப்பொழுது அவசியம். இதே சமயம் மற்றும் இடங்களிலுள்ள விவசாயிகள் தங்கள் வயல்களுக்குச் செல்வதற்கு படையினர் தடைவிதிக்காமல் இருக்கவும்



படிப்பகம்

www.padippakam.com



வேண்டும். விவசாயிகள் வயலுக்குச் செல்ல முடியாமல் தடை! கடற்றொழிலாளர்கள் கடலுக்குத் தாம் விரும்பிய நேரத்தில் விரும்பிய பகுதிக்குச் சென்று மீன்பிடிக்கவும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் பகுதிகளில் விவசாயத்துக்கும் தடை, கடற்றொழிலுக்கும் தடை! மக்கள் சுதந்திரமாக நடமாடவும் தடை! கைத்தொழில் செய்வதற்கும் வழியில்லை. இந்த நிலையில் தமிழ் மக்கள் என்ன செய்வது?

## தன் கையே தனக்குதவி

படுவான்கரைப் பகுதியில் உள்ள கன்னன்குடா, குறிஞ்சாமுனைப் பாதைகள் பள்ளமும் திட்டியுமாகப் போக்குவரத்துச் செய்ய முடியாத மோசமான நிலையிலுள்ளன.

இந்த வீதிகளின் அவலநிலை பற்றி இப்பகுதி மக்கள் பாராளுமன்றப் பிரதிநிதிகளிடம் முறையிட்டனர். தேர்தல் காலத்தில் வாக்குகளைப் பெறுவதற்காக வாக்குறுதிகளை வாரி வழங்கும் அரசியல்வாதிகள் தேர்தலில் வெற்றி பெற்றதும் அவற்றை மறந்து விடுவார்கள். தேர்தலில் தோல்வி-யடைந்தவர்கள் தேர்தலில் தமக்கு ஏற்பட்ட இழப்புகளைப் பற்றி கவலைப்-பட்டுக் கொண்டிருப்பார்கள். வெற்றி பெற்றவர்களும் தேர்தலில் ஏற்பட்ட செலவுகளை ஈடுசெய்வது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பார்கள் இவர்க-ளுக்குத் தாம் கொடுத்த வாக்குறுதிகள் பற்றிச் சிந்திக்க நேரமேது?

இந்த நிலையில் இனியும் இவர்களை எதிர்பார்த்துக் காத்திராமல் படுவான்கரையிலுள்ள பொது அமைப்புகளின் உதவியுடன் பொதுமக்கள் சிரமதானம் செய்து கன்னன்குடா, குறிஞ்சாமுனைப் பாதைகளைச் சீர் செய்து அமைத்து போக்குவரத்துக்கு வழி செய்துள்ளனர்.

இப்போது ஒரு கிலோ மீற்றர் பாதையை அப்பகுதி மக்களே சிரமதானத்தின் மூலம் சீர்செய்து மற்றக் கிராமங்களுக்கு வழிகாட்டி-யிருக்கின்றனர். ''தன் கையே தனக்குதவி'' என்ற வழியைப் பின்பற்றி இக்கிராம மக்கள் தாமும் பயன்பெற்று மற்றைய கிராமங்களுக்கும் வழிகாட்டியிருப்பது பாராட்டுக்குரியது.

31-05-2001



படிப்பகம்

www.padippakam.com



## இனப்பிரச்சினைத் தீர்வுக்காக புதிய அரசியலமைப்பு

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சு நடத்துவதற்கு சாதகமான சூழ்நிலை இன்று இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஒரு பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

சமாதான அரசியல் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகள் போரை நிறுத்தி விட்டு பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள வர வேண்டியதான அவசியத்தை ரூபவாஹினிக்கு அளித்த பிரத்தியேகப் பேட்டியில் ஜனாதிபதி சந்திரிக்கா வலியுறுத்தியிருக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com



நாட்டில் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு சந்திரிகா ஆர்வத்துடனி ருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்தாலும் எந்த முடிவையும் மேற்கொள்ள முடியாத நிலையிலிருப்பது அவர் மீது அனுதாபத்தையே ஏற்படுத்துவதாக உள்ளது.

1956, 57-58ஆம் ஆண்டுகளில் சந்திரிகாவின் தந்தை எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க இருந்த தர்ம சங்கடமான நிலையிலேயே இன்று சந்திரிகாவும் இருக்கிறார்.

பேரினவாதிகள் கொடுக்கும் நெருக்கடி ஒருபக்கம், ஆளும் கட்சிக்குள்ளேயே இருக்கும் அரசியல்வாதிகளின் குறுகிய நோக்கங்கள் மறுபுறம்.

போரை நிறுத்திவிட்டுப் பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் வரவேண்டுமென்று சந்திரிகா கூறுகிறார்.

நான்கு மாத காலமாகப் போரை நிறுத்தி விட்டுப் பேச்சுவார்த்தைக்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கி சந்தித்துப் பேசுவோம் அரசு போர் நிறுத்தம் செய்து வரட்டும் என்று விடுதலைப் புலிகள் கோரிய போதும் போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறியவர்கள் ஆட்சியிலுள்ளவர்கள் தான்.

'சமாதானத்துக்கான போர்' என்று ஜனாதிபதி சந்திரிக்கா சொல்லிப் போரைத் தொடர்ந்த போது, போருக்குப் போர் மூலமே முடிவு காணப்பட வேண்டுமென்று அதைத் தொடர்ந்தவர் பிரதமர் இரத்தினசிறி விக்கிரமநாயக்க.

நான்கு மாதப் போர் நிறுத்தத்தை மேலும் நீடிப்பதில்லை என்று விடுதலைப் புலிகள் தீர்மானித்த சில நிமிடங்களுக்குள்ளேயே புலிகள் மீது தாக்குதல் நடத்தி போரை முன்னெடுத்துச் சென்று எழுதுமட்டுவாளில் போரைத் தொடங்கியது அரச படைகள் தான்.

இந்நிலையில் போரை நிறுத்தி விட்டு பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் வர வேண்டுமென்று ஜனாதிபதி கேட்பது என்ன நியாயம்?

சமாதானப் பேச்சுவார்த்தை பற்றிப் பேசும் போதே புதிய அரசியல் யாப்பை நிறைவேற்றுவது பற்றியும் அமைச்சர்கள் சிலர் பேசுகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com



புதிய அரசியல் யாப்பை நிறைவேற்றுவதால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமென்கிறார்கள். அப்படியானால் நோர்வேயின் முயற்சி எதற்கு? பேச்சுவார்த்தை எதற்கு?

ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஆளும் கட்சிக்கு இருந்து வந்த சிறிதளவு நட்புறவும் கூட இன்றிருப்பதாகத் தெரியவில்லை. அது மட்டுமல்லாமல் இன்று இரு கட்சிகளுக்கிடையிலும் முறுகல் நிலையே ஏற்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் நெருங்கிய உறவிருப்பதாக ஒரு புறம் பிரச்சாரம் செய்து கொண்டு இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்பதன் அர்த்தம் என்ன?

சமாதானப் பேச்சுவார்த்தை, இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று நாட்டின் முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை விட ஆட்சி பீடத்தில் எப்படித் தொடர்ந்து இருப்பது என்பதே முக்கிய பிரச்சினையாக ஆட்சி பீடத்திலுள்ளவர்கள் சிந்திப்பதாகத் தோன்றுகின்றது.

இன்று இலங்கையின் ஜனாதிபதியாக பதவி வகிக்கும் சந்திரிகா ஏற்கெனவே ஒரு தடவை ஜனாதிபதி பதவிக்காலத்தை நிறைவு செய்திருக்கிறார்.

இந்த ஆறு ஆண்டு காலப் பதவியையும் நிறைவு செய்தால் மீண்டும் ஜனாதிபதி பதவிக்கு அரசமைப்பின்படி போட்டியிட முடியாது.

எனவே நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி பதவியை முடிவுக்குக் கொண்டு வந்து பாராளுமன்றத்துக்கு அதிகாரம் வழங்கும் அரசியல் அமைப்பை நிறைவேற்றினால் அதுத்த தேர்தலில் போட்டியிட்டு சந்திரிகா அதிகாரமுள்ள பிரதம மந்திரியாகத் தொடர்ந்து ஆட்சியிலிருக்கலாம்.

இது தான் இன்றைய முக்கிய பிரச்சினையாகக் கருதப்படுகிறதே தவிர இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வல்ல. இதற்காகவே தான் புதிய அரசியலமைப்பை நிறைவேற்ற வேண்டுமென்று ஆளும் கட்சியினர் அவதிப்படுகின்றனர்.

01-06-2001



படிப்பகம்

www.padippakam.com



# எப்போது விழித்தெழுவார்கள்?

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு எடுக்கும் முயற்சிகள் பற்றித்தான் கொழும்புப் பத்திரிகைகளும் தென்னிலங்கை அரசியல்வாதிகளும் அதிகம் அலட்டிக் கொள்கின்றனர்.

எதிர்க்கட்சியினர் கொண்டு வரவிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக எதிர்க்கட்சி எம்.பிக்களை விலைகொடுத்து வாங்க முயற்சிப்பதாக ஆளும் கட்சியினர் குற்றம் சாட்டுகிறார்கள்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்து ஆட்சியில் தொடர்ந்திருப்பதற்காக எம்.பிக்களை விலை கொடுத்து வாங்க முயற்சிப்பதாக ஆளும் கட்சி மீது எதிர்க்கட்சியினர் குற்றஞ் சுமத்துகிறார்கள்.

எதிர்க்கட்சியினரின் நம்பிக்கையில்லாப் பிரேரணையால் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அரசாங்கம் எடுத்துவரும் முயற்சி தடைபடக்கூடுமென்றும் இந்த முயற்சியில் தான் எதிர்க்கட்சியினர் ஈடுபட்டு வருவதாகவும் ஆளும் கட்சியினர் குற்றம் சாட்டுகின்றனர்.

சந்திரிகா அம்மையார் புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுவதற்கு இரண்டில் மூன்று பெரும்பான்மை வேண்டும். இதற்கு எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்புத் தரப்போவதில்லை. இந்நிலையில் இது எப்படி நிறைவேறப் போகிறது.

இந்த அரசியலமைப்பில் அதிகாரப் பரவலாக்கல் பற்றித் தெரிவிக்கப் பட்டிருக்கிறதாம். அதிகாரப் பரவலாக்கலுக்குத் தானா தமிழ்மக்கள் இவ்வளவு துயரங்களையும், துன்பங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அதிகாரப் பரவலாக்கலுக்காகவா விடுதலைப் புலிகள் இத்தனை உயிர்த்தியாகம் செய்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். இதே நேரம் எந்த அதிகாரமும் இல்லாத இந்த அரசியலமைப்புத் திட்டத்தை எதிர்த்துத்தான் பிக்குகள் முன்னர் ஆர்ப்பாட்டம் செய்ததும் ஒரு பிக்கு கொழும்பில்



படிப்பகம்

www.padippakam.com



புறக்கோட்டையில் ஒரு அரசமரத்தின் கீழ் சாகும்வரை உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்ததும் இதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தைக் கலைத்துப் புதிய பாராளுமன்றத்துக்குத் தேர்தல் நடந்ததும் உலகறிந்த விஷயம்.

மீண்டும் இந்த புதிய அரசியலமைப்பை எதிர்த்து பிக்குகள் ஆர்ப்பாட்டமும், உண்ணாவிரதமும் இருக்க மாட்டார்களென்பது என்ன நிச்சயம்?

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமாக, சுமுகமான தீர்வு காணப்பட வேண்டுமென்றும் இதைப் பேச்சுவார்த்தை மூலம் அடைய வேண்டுமென்ற யோசனையை அடைவதற்காகத்தான் அரசும் விடுதலைப் புலிகளும் நோர்வே நாட்டை அனுசரணையாளராக இருதரப்பும் ஏற்றுக் கொண்டன.

புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை இப்போது பேச்சுவார்த்தைகளுக்குத் தடையாக இருக்கிறது. இந்தத் தடையை நீக்குவதற்கான முயற்சிகள் இன்னும் முட்டுக்கட்டை நிலையிலேயே இருக்கின்றன.

போரினால் மக்கள் படும் அல்லலும் தொல்லையும் சொல்லில் வடிக்க முடியாதது. நாட்டு மக்கள் அனைவருமே வாழ்க்கைப் பளுவைத் தாங்க முடியாமல் துவண்டு கொண்டிருக்கிறார்கள்.

வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள மக்கள் பாதுகாப்புப் படையினரின் கெடுபிடி, துப்பாக்கிச்சூடு, குண்டு வீச்சு, கைதுகள் என்று தினமும் தாங்க முடியாத வேதனையும், சோதனையும் அனுபவிக்கின்றனர். நோர்வே சமாதானத்தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் எப்போ வருவார்? சமாதானத்தைக் கொண்டு வருவாரா? நிம்மதி கிடைக்குமா? என்று வடக்கு கிழக்கு மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் ஆட்சி பீடத்திலுள்ளவர்களும், ஆட்சிபீடத்திற்காக ஏங்கிக் கொண்டிருப்பவர்களினதும் கவலையெல்லாம் அதிகாரத்தில் நீடித்திருக்க முடியுமா என்பது பற்றியும் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியுமா என்பது பற்றியும் தான்.

நாட்டு மக்கள் வேறுபாடுகளை மறந்து எப்போது விழித்தெழப் போகிறார்கள்?

08-06-2001



படிப்பகம்

www.padippakam.com



## நோர்வே எத்தனை காலத்துக்கு?

இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் நிரந்தரமான சுமுகமான தீர்வு காண்பதற்கு இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தை மேசையில் நேரடியாகச் சந்திக்க வைப்பதற்கு நோர்வேயின் விசேஷ சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கடந்த பல மாதங்களாக எடுத்து வந்த முயற்சி இன்னமும் வெற்றியளிக்கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



விசேஷ சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை இந்த முயற்சிகளிலிருந்து அகற்றி விட வேண்டுமென்று பேரினவாதிகளும் ஆளும் கட்சியிலுள்ளவர்களும் எடுத்து வந்த முயற்சி வெற்றியளித்திருக்கிறது.

நோர்வே நாட்டை இருதரப்புப் பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு உதவியாக இருதரப்பும் ஏற்றுக் கொண்டதுமே கொழும்பிலிருந்து வெளிவரும் பேரினவாதப் பத்திரிகை ஒன்றும், பேரினவாதக்குழுக்களும் நோர்வேக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பிருப்பதாகவும் அவர்களுக்கு நோர்வேயில் தளம் இருப்பதாகவும் கூடக் கோஷம் எழுப்பின.

கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் முன் சில பிக்குமாரும் பேரினவாதிகளும் இனப்பிரச்சினையில் தலையிட வேண்டாமென்று ஆர்ப்பாட்டம் செய்ததுடன் நோர்வேயின் தேசியக் கொடியையும் தீ வைத்துக் கொளுத்தினர். நோர்வேப் பிரதிநிதிகளை இலங்கையிலிருந்தே வெளியேற்ற வேண்டுமென்றும் இவர்கள் குரல் எழுப்பினர். விடுதலைப் புலிகளுக்கு நோர்வே உதவி செய்வதாகவும் பேரினவாதிகள் குற்றம் சாட்டினர்.

பொதுத்தேர்தல் பிரச்சாரத்தின் போது நோர்வேயின் சமாதான முயற்சி முடிவடைந்து விட்டது என்று கூட பிரதமர் கூறியிருந்தார். இத்தனை அவமானங்களையும் எரிக் சொல்ஹெய்ம் பொறுத்துக் கொண்டு இலங்கையில் இனப்பிரச்சினைக்கு நிரந்தர சமாதானத் தீர்வு காண வேண்டுமென்ற முயற்சியில் இதய சுத்தியோடு தீவிரமாக உழைத்தார்.

இந்தியா, லண்டன், ஒஸ்லோ என்று பறந்து திரிந்ததுடன் நிற்காது இலங்கையில் வன்னிக்கும் சென்றார். அமெரிக்காவுக்கும் கூடச் சென்று வந்தார். இனப்படுகொலைக்கும், இனப்பாகுபாட்டிற்கும் பெயர் பெற்று வரும் இலங்கை இச்செயல்களை ஆதரிக்காதவர்கள் அனைவரும் ''இலங்கையின் தேசியத்திற்கு'' எதிர்ப்பானவர்கள் என்றும் ''பயங்கரவாதத்துக்கு'' ஆதரவானவர்கள் என்றும் முத்திரை குத்துவதற்ககுத் தயங்குவதில்லை.

இலங்கையில் பாதிக்கப்பட்டு அல்லலுறும் தமிழ் மக்களுக்கு உதவி செய்பவர்களும் தமிழ் மக்களுக்கு ஆதரவு தெரிவிப்பவர்களும் அவர்களுக்குத் தஞ்சம் கொடுப்பவர்கள் எல்லோருமே பயங்கரவாதிகள் என்று பட்டம் கட்டிப் பிரச்சாரம் செய்வதில் இலங்கைக்கு முதலிடம் கொடுக்கலாம்.

இப்பொழுது எரிக் சொல்ஹெய்ம் கூட இலங்கை ஆட்சியாளர்களுக்கு விடுதலைப் புலியாகத் தோன்றியிருக்கக் கூடும். இதை வெளிப்படையாகச் சொல்வதற்கு நோர்வேயின் உதவிகள் தடையாக இருக்கக்கூடும்.



படிப்பகம்

www.padippakam.com



பேரினவாதிகள் எரிக்சொல்ஹெய்மை எப்போதோ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவர் என்றும் பயங்கரவாதத்துக்கு ஆதரவானவர் என்றும் பிரச்சாரம் செய்யத் தொடங்கி விட்டனர்.

இதை இலங்கை அரசு இதுவரை மறுக்கவில்லை. நோர்வே அரசையும், பேரினவாதிகள் விடுதலைப் புலிகளுக்கும், பயங்கரவாதத்துக்கும் துணை போவதாகக் குற்றம் சாட்டினர்.

ஆனால் நோர்வே அரசுக்கு எதிராக இலங்கை எதுவும் செய்ய முடியாது. பேரினவாதிகளைத் தடுக்கவும் அரசுக்கு மனமில்லை. நோர்வேயின் உதவி நின்று விடுமோ என்ற அச்சமும் அரசுக்கு இருக்கிறது.

இதை வைத்துத் தான் அரச சார்பற்ற உதவிகள் பற்றிப் பரீசிலனை செய்ய வேண்டுமென்றும் அந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது கட்டுப்பாடு கொண்டு வரப்பட வேண்டுமென்றும் ஆளும் தரப்பிலிருந்து சமீபத்தில் குரல் எழுப்பப்பட்டது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற இதய சுத்தியான எண்ணம் ஆட்சி பீடத்திலுள்ளவர்களுக்கு இல்லை, பேரினவாதிகளுக்கும் கிடையாது.

போர் மூலம் ‘‘பயங்கரவாத ஒழிப்பு’’ என்ற பெயரில் இலங்கையில் தமிழினத்தை ஒழித்துக் கட்டுவதே பேரினவாதிகளினதும், அரசினதும் திட்டமாகத் தோன்றுகிறது. இப்பொழுது வடக்கிலும், கிழக்கிலும் ‘‘பயங்கரவாதிகள்’’ என்று பழி சுமத்தி ஒவ்வொரு நாளும் 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்கள் குறைந்தது நான்கு ஐந்து பேராவது சுட்டுக் கொல்லப்படுவதைக் கூர்ந்து கவனித்தால் இன ஒழிப்புத்திட்டம் தெரியும்.

இந்நிலையில் சமாதானத்தை ஏற்படுத்த உண்மையாகவே உழைத்த எரிக் சொல்ஹெய்மை இவர்கள் விட்டு வைப்பார்களா?

நோர்வே நாடும் இன்னும் எத்தனை காலத்துக்கு இந்த முயற்சியில்? காலம் கடத்தும் வரை தான்!

11-06-2001



படிப்பகம்

www.padippakam.com



# குறிப்புகள்



படிப்பகம்

www.padippakam.com



# குறிப்புகள்



படிப்பகம்

www.padippakam.com



# குறிப்புகள்



படிப்பகம்

www.padippakam.com



# குறிப்புகள்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



பத்திரிகைத்துறையில் ஐம்பது
ஆண்டுகளை நிறைவு
செய்திருக்கும் எஸ்.எம்
கோபாலரத்தினம் அவர்கள்
அத்துறையில் முன்மாதிரியாகக்
கொள்ளப்படத்தக்க ஒரு
பத்திரிகையாளர். வீரகேசரியில்
ஆரம்பித்தது அவரது பயணம்.
யாழ்ப்பாணத்திலிருந்து
வெளியான ஈழநாடு
பத்திரிகையில் எஸ்.எம்.ஜி
அவர்கள் இருபதாண்டு காலம்
கடமையாற்றினார். பிராந்தியப்
பத்திரிகையான ஈழநாடு
தினசரியாகி நிலை பெற்றதற்கு
பிரதான காரணமாக
இருந்தவர் எஸ்.எம்.ஜி
அவர்கள். ஈழநாட்டின்
ஆசிரியரான எஸ்.எம்.ஜி
பின்னர்
யாழ்ப்பாணத்திலிருந்து
வெளியாகிய காலைக்கதிர்,
செய்திக்கதிர், ஈழமுரசு,
ஈழநாதம் என்பவற்றிலும்
ஆசிரியராகப் பணியாற்றினார்.
மட்டக்களப்பிலிருந்து
வெளிவந்த முதல் தினசரியான
தினக்கதிரிலும் ஆசிரியராகக்
கடமையாற்றினார்.
அக்காலப்பகுதியில் அவர்
தினக்கதிரில் எழுதிய ஆசிரிய
தலையங்கங்களே இந்நூலில்
இடம் பெற்றுள்ளன. இவை
அக்காலத்தைய கிழக்கிலிருந்த
சூழமைவின் பதிவு எனின்
மிகையாகா.

நிகரி
NIHARI

படிப்பகம்